
# 1998 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 8</u>

**18.01.1998** சக்தி கொடுக்கும் சேவை செய்வதற்காக பற்றுதலிலிருந்து விடுபட்டவராகி எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர் ஆகுங்கள்!

**31.01.1998** பாஸ் வித் ஆனர் (மதிப்புடன் தேர்ச்சி அடைபவர்) ஆவதற்காக ஒவ்வொரு பொக்கிஷத்தின் கணக்கை சோதனை செய்து சேமிப்பு செய்யுங்கள்!

**24.02.1998** தந்தை மீது, சேவை மீது மற்றும் ஈஸ்வரிய குடும்பத்தின் மீது அன்பு வைத்தீர்கள் என்றால், கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள்! (சிவ ஜெயந்தி)

**13.03.1998** ஹோலி (தூய்மை) என்ற வார்த்தையின் சொரூபத்தில் நிலைத்திருப்பது என்றால் தந்தைக்குச் சமமாக ஆவது!

**30.03.1998** அனைத்து பிராப்திகளின் நினைவை வெளிக் கொணர்ந்து, உறுதியான நிலையை அனுபவம் செய்யுங்கள் மற்றும் பந்தன் முக்த் (பந்தனமற்ற வாழ்வுடையோர்) ஆகுங்கள்!

**21.11.1998** சேவையின் கூடவே தேகத்திலிருந்து கொண்டே விதேகி (சரீரத்திற்கு அப்பாற்பட்ட) நிலையின் அனுபவத்தை அதிகரியுங்கள்!

**12.12.1998** என்னுடையது, என்னுடையது என்ற தேக அபிமானத்தை விட்டு விட்டு பிரம்மாபாபாவின் பாத அடி மேல் அடி எடுத்து வையுங்கள்!

**31.12.1998** தைரியத்தின் ஆதாரத்தினால் தன்னை கஷ்டப்பட்டு உழைப்பிலிருந்து விடுபட்டவராகி சதா வெற்றியை அனுபவம் செய்யுங்கள்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂

## 18.01.1998 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சக்தி கொடுக்கும் சேவை செய்வதற்காக பற்றுதலிலிருந்து விடுபட்டவராகி எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர் ஆகுங்கள்!

இன்றைய நாள் விசேஷமாக அன்பிற்கான நாள் ஆகும். அமிர்தவேளையில் தொடங்கி நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகள் தங்களுடைய இதயப்பூர்வமான அன்பை பாப்தாதாவிற்காக அர்ப்பணம் செய்து கொண்டிருந்தார்கள். அனைத்து குழந்தைகளின் அன்பின் முத்து மாலைகள் பாப்தாதாவின் கழுத்தில் விழுந்து கொண்டே இருந்தன. இன்றைய நாளில் ஒரு பக்கம் அன்பின் முத்து மாலைகள் இன்னொரு பக்கம் இனிமையான முறையீடுகளின் மாலைகளும் இருந்தன ஆனால் இந்த வருடம் முறையீடுகளில் வித்தியாசம் இருந்தது. இதற்கு முன்பு எங்களையும் உங்களுடன் அழைத்துச் சென்றிருக்க வேண்டும். நாங்கள் சாகார பாபாவின் பாலனையை பெறவில்லை என்று இந்த மாதிரி முறையீடுகள் இருந்தன. இந்த வருடம் இப்பொழுது தந்தைக்குச் சமமாகி உங்களிடம் வந்தடைந்து விட வேண்டும் என்பது பெரும்பான்மையோரின் முறையீடாக இருந்தது. சமமாக ஆவதற்கான ஊக்கம் உற்சாகம் பெரும்பான்மையோரிடம் நன்றாக இருந்தது. சமமாக ஆவதற்கான இச்சை மிகவும் தீவிரமாக இருந்தது. ஆகி விட வேண்டும். மேலும் அங்கு வந்து விட வேண்டும் என்ற இந்த எண்ணம் ஆன்மீக உரையாடலில் மிகுந்த குழந்தைகளிடம் இருந்தது. பாப்தாதாவும் -சமமாக ஆகுங்கள். சம்பன்னம் ஆகுங்கள். சம்பூர்ணம் ஆகுங்கள் என்ற இதைத் தான் குழந்தைகளுக்குக் கூறுகிறார். இதற்கான நிரந்தரமான வழி மிக மிக சுலபமானது. அனைத்தையும் விட சுலபமான வழி -எப்பொழுதும் அன்புக்கடலில் மூழ்கி யிருங்கள். எப்படி இன்றைய தினம் அன்பில் மூழ்கியிருந்தீர்கள். வேறு ஏதாவது நினைவு வந்ததா?

பாப்தாதாவைத் தவிர வேறு எந்த நினைவும் இருந்ததா? எழும்போதும், அமரும்போதும் அன்பிலேயே மூழ்கியிருந்தீர்கள். போகும்பொழுதும் வரும்பொழுதும் என்ன நினைவு இருந்தது. பிரம்மாபாபாவின் சரித்திரம் மற்றும் சித்திரம், சீத்திரமும் எதிரில் இருந்தது மேலும் சரித்திரமும் நினைவில் இருந்தது. அனைவரும் விசேஷமாக இன்று அன்பின் அனுபவம் செய்தீர்கள் இல்லையா? கடினமாக இருந்ததா? சுலபமாகி விட்டது இல்லையா? அன்பு அந்த மாதிரியான சக்தியாகும். அது அனைத்தையும் மறக்க வைத்து விடுகிறது. உடலின் நினைவும், உடலின் உலகத்தின் நினைவும் வரவில்லை. அன்பு கடின உழைப்பிலிருந்து விடுவித்து விடுகிறது. எங்கு அன்பு இருக்குமோ அங்கு கடின உழைப்பு இருக்காது. அன்பு எப்பொழுதும் சுலபமாக பாப்தாதாவின் கரம் தன் மேல் இருப்பதாக அனுபவம் செய்விக்கிறது. அன்பு குடைநிழல் ஆகி, மாயாவை வென்றவர் ஆக்கி விடுகிறது. எவ்வளவு தான் பெரிய பிரச்சனை ரூபமான மலையாக இருந்தாலும், அன்பு மலையையும் தண்ணீர் மாதிரி லேசாக ஆக்கி விடுகிறது. அப்படி அன்பில் இருக்கத் தெரியும் இல்லையா? இன்று இருந்து பார்த்தீர்கள் இல்லையா? வேறு எந்த நினைவும் இருந்ததா? இருக்கவில்லை இல்லையா? பாபா, பாபா மேலும் பாபா -ஒருவரின் நினைவிலேயே ஐக்கியமாகி இருந்தீர்கள். எனவே வேறு எந்த முயற்சியும் செய்யாதீர்கள், அன்புக்கடலில் மூழ்கி விடுங்கள் என்பதைத் தான் பாப்தாதா கூறுகிறார். மூழ்கத் தெரியுமா? சில நேரம் குழந்தைகள் அன்புக்கடலில் மூழ்குகிறார்கள் ஆனால் கொஞ்ச நேரம் மூழ்கியிருந்து பிறகு வெளியில் வந்து விடுகிறார்கள். இந்த நேரம் பாபா. இனிமையான பாபா, அன்பான பாபா என்று கூறுவார்கள். மேலும் அடுத்த நேரம் வெளியில் வருகிறார்கள் அல்லது வேறு விஷயங்களில் ஈடுபட்டு விடுகிறார்கள். கொஞ்ச நேரம் மட்டும் எப்படி யாராவது தண்ணீரில் மூழ்கியெழுந்து வெளியில் வந்து விடுகிறார் அதே போல் அன்பில் மூழ்கியிருந்தார். பிறகு வெளியில் வந்து விட்டார். மூழ்கியிருந்தீர்கள் என்றால் அன்பின் சக்தி அனைத்தையும் விட சுலபமாக விடுவித்து விடும்.

அன்பு தான் பிராமணன் ஆக்கியது என்பது அனைத்து குழந்தைகளின் பிராமண ஜென்மத்தின் தொடக்கத்து அனுபவம் ஆகும். அன்பு மாற்றம் செய்தது. தன்னுடைய ஜென்மத்தின் தொடக்க காலத்தின் அனுபவம்

நினைவிருக்கிறது இல்லையா? ஞானம் மற்றும் யோகாவோ கிடைத்தது ஆனால் அன்பு கவர்ந்திழுத்து தந்தையின் குழந்தையாக ஆக்கியது. ஒருவேளை எப்பொழுதும் அன்பின் சக்தியில் இருந்தீர்கள் என்றால், நிரந்தரமாக கஷ்டப்பட்டு முயற்சி செய்வதிலிருந்து விடுபட்டுவிடுவீர்கள். மேலும் இப்பொழுது முக்தி வருடத்தையும் கொண்டாடுகிறீர்கள் இல்லையா? அப்படி கடின உழைப்பிலிருந்தும் முக்தி! அதற்கான சாதனம் அன்பில் மூழ்கியிருப்பவராக இருங்கள். அன்பின் அனுபவம் அனைவருக்கும் இருக்கிறது இல்லையா? அல்லது இல்லையா? ஒருவேளை பாப்தாதா மேல் மிக அதிகமான அன்பு யாருக்கு இருக்கிறது என்று கேட்டோம் என்றால், எனக்குத் தான் என்று அனைவருமே கையை உயர்த்துவார்கள் (அனைவரும் கை அசைத்தார்கள்). அமைதியின் கையை உயர்த்துங்கள். சப்தம் எழுப்பும் கையை உயர்த்தாதீர்கள். அப்படி அன்பின் சக்தியை எப்பொழுதும் காரியத்தில் ஈடுபடுத்துங்கள் என்ற இதைத் தான் பாப்தாதா இன்று கூறுகிறார். சுலபம் தான் இல்லையா? உடலின் நினைவை மறக்க வேண்டும். உடல் சம்மந்தப்பட்ட உலகத்தை மறந்து விட வேண்டும், மாயாவை வென்றவர் ஆகி விட வேண்டும் என்று யோகா செய்கிறீர்கள் எப்பொழுதும் அன்பின் பாதுகாப்பு நிழலிலே இருப்பீர்கள் என்றால், அந்த அன்பின் நிழலின் உள்ளே மாய வர முடியாது. அன்பின் கடலிலிருந்து வெளியே வருகிறீர்கள் என்றால் மாயா பார்த்து விடுகிறது மற்றும் தன்னுடையவராக ஆக்கி விடுகிறது. எனவே கடலிலிருந்து வெளியே வராதீர்கள். மூழ்கியிருங்கள். ஏதாவது காரியம் செய்து கொண்டிருந்தாலும், அன்பிற்குரிய வரை மறக்க முடியாது. அன்பில் மூழ்கியிருந்து ஒவ்வொரு காரியமும் செய்கிறார். அப்படி இன்றைய நாளில் அனைத்தையும் மறந்திருந்தீர்கள். அப்படி எப்பொழுதுமே அன்பில் இருக்க முடியாதா என்ன? அன்பு சுலபமாகவே சமமாக ஆக்கி விடும். ஏனென்றால் யார் மேல் அன்பு இருக்கிறதோ அவர் மாதிரி ஆக வேண்டும் என்பது கடினமாக இருக்காது.

பிரம்மாபாபா மேல் உள்ளப்பூர்வமான அன்பு இருக்கிறது. பிரம்மாபாபாவிற்கும் குழந்தைகள் மேல் மிகுந்த அன்பு இருக்கிறது. எப்பொழுதும் ஒவ்வொரு குழந்தையையும் எதிரில் வெளிப்படுத்தி சமமாக ஆவதற்காக விசேஷமாக சக்தியைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். எப்படி முந்தைய வாழ்க்கையில் ஒவ்வொரு

இரத்தினத்தையும் பார்த்தார், ஒவ்வொரு இரத்தினத்தின் மதிப்பையும் தெரிந்து விசேஷமாக காரியத்தில் ஈடுபடுத்துவார். அதே போல் இப்பொழுதும் ஒவ்வொரு இரத்தினத்தையும் விசேஷ ரூபத்தில் அவர்களுடைய விசேஷத்தை காரியத்தில் ஈடுபடுத்துவதற்கான எண்ணத்தை எப்பொழுதும் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். மேலும் ஒவ்வொருவரின் விசேஷத்தைப் பாராட்டி பாடிக் கொண்டே இருக்கிறார். ஆஹா என்னுடைய விலை மதிக்க முடியாத இரத்தினமே! சில குழந்தைகள் பிரம்மாபாபா சூட்சம வதனத்தில் என்ன செய்கிறார் என்று நினைக்கிறார்கள். நாமோ இங்கு சேவை செய்து கொண்டே இருக்கிறோம், மேலும் பிரம்மாபாபா அங்கே சூட்சும வதனத்தில் என்ன செய்கிறார்? எப்படி சாகார ரூபத்தில் எப்பொழுதும் குழந்தைகளின் கூடவே இருந்தார். அதே போல் வதனத்திலும் இருக்கிறார் என்று தந்தை கூறுகிறார். தனியாக இருக்கவில்லை, குழந்தைகளின் கூடவே தான் இருக்கிறார். குழந்தைகளின்றி தந்தைக்கும் மகிழ்ச்சி வருவதில்லை. எப்படி குழந்தைகளுக்கு தந்தையின்றி எதுவுமே ரசிப்பதில்லை, அதே போல் தந்தைக்கும் குழந்தைகளின்றி எதுவுமே ரசிப்பதில்லை. தனியாக இருக்கவில்லை, உங்கள் உடன் தான் இருக்கிறார். சாகாரத்திலோ துணையின் அனுபவத்தை சாகார ஆபத்தில் குறைந்த குழந்தைகள் செய்ய முடிந்தது. இப்பொழுதோ அவ்யக்த ரூபத்தில் ஒவ்வொரு குழந்தையினுடனும் எந்த நேரம் விரும்புகிறாரோ அந்த நேரம் துணையாக இருந்து கொண்டே இருக்கிறார். எப்படி படங்களில், பக்தர்கள் ஒவ்வொரு கோபியுடன் கிருஷ்ணரை காண்பித்திருக்கிறார்கள் ஆனால் அது இந்த நேரத்தின் வர்ணனை ஆகும். இப்பொழுது அவ்யக்த ரூபத்தில் ஒவ்வொரு குழந்தையினுடன் எப்பொழுது விரும்புகிறாரோ அந்த நேரம் இரவு 2 மணியானாலும் அல்லது 2 1/2 மணியானாலும் எந்த நேரத்திலும் துணையாக இருந்து கொண்டே இருக்கிறார். சாகாரத்திலோ சென்டர்களைச் சுற்றி வருவது எப்பொழுதாவது தான் முடிந்தது, ஆனால் இப்பொழுது அவ்யக்த ரூபத்திலோ தூய்மையான இல்லறத்தையும் சுற்றி வருகிறார். தந்தையின் வேலையே என்ன? குழந்தைகளை ச.மமானவர்களாக ஆக்கி உடன் அழைத்துச் செல்ல வேண்டும். இது தான் வேலை இல்லையா? இதைத் தவிர வேறு என்ன இருக்கிறது? அப்படி இதிலேயே பிஸியாக இருக்கிறார்.

அப்படி இன்றைய நாளில் பாப்தாதா குழந்தைகளுக்கு விசேஷமாக கடின உழைப்பிலிருந்து விடுபடுக! என்ற வரதானம் அளிக்கிறார். என்ன காரியம் செய்தாலும் டபுள் லைட் ஆகி காரியம் செய்யுங்கள். பிறகு கடின உழைப்பை மனமகிழும் பொழுது போக்காசு அனுபவம் செய்வீர்கள். ஏனென்றால், பாப்தாதாவிற்கு குழந்தைகள் கடின உழைப்பு செய்வது, யுத்தம் செய்வது, வெற்றி மற்றும் தோல்விக்கான விளையாட்டை விளையாடுவது பிடிப்பதில்லை. முக்தி வருடத்தை கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்களா அல்லது கடின உழைப்பிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்களா? இன்றைய தினம் விசேஷமாக கடின உழைப்பிலிருந்து விடுபடுக! என்ற வரதானத்தை நினைவில் வையுங்கள். இந்த சங்கமயுகம் கடின உழைப்பிலிருந்து விடுபடுவதற்கான யுகம் ஆகும். மனமகிழ்வோடு இருப்பதற்கான யுகம் ஆகும். ஒருவேளை கடின உழைப்பு இருக்கிறது என்றால் மனமகிழ்வு இருக்காது. இந்த ஒரு யுகம் மட்டும் தான் பரமாத்மா மற்றும் ஆத்மாக்களின் மனமகிழ்வைக் கொண்டாடுவதற்கான யுகம் ஆகும். ஆத்மா, பரமாத்மா இடையே அன்பு ஏற்படுவதற்கான யுகம் ஆகும். சந்திப்பதற்கான யுகம் ஆகும். அப்படி இன்றிலிருந்து கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவோம் என்ற உறுதியான எண்ணம் கொள்ளுங்கள். விடுபட்டு விடுவீர்கள் இல்லையா? பின்பு இங்கேயோ கையை உயர்த்தினீர்கள், அங்கு சென்ற பிறகு என்ன செய்வது, எப்படி செய்வது? என்று அப்படி இருக்க வேண்டாம். ஏனென்றால் பாப்தாதாவிடம் ஒவ்வொரு குழந்தையின் உறுதியான எண்ணம் எடுத்ததற்கான முழு கோப்பும் இருக்கிறது. பாப்தாதா சில நேரங்களில் குழந்தைகளின் கோப்பைப் பார்க்கிறார். அடிக்கடி உறுதியான எண்ணம் எடுப்பீர்கள் இல்லையா. எப்பொழுதிலிருந்து ஜென்மம் எடுத்தீர்களோ மேலும் இப்பொழுது வரை இதைச் செய்வோம், அதைச் செய்வோம் என்று எத்தனை தடவை எண்ணம் வைத்தீர்கள் ஆனால் அவற்றை நிறைவேற்றவில்லை. ஆன்மீக உரையாடலோ மிக நன்றாக செய்கிறீர்கள். பாப்தாதாவையும் குஷிப்படுத்தி விடுகிறீர்கள். எப்படி புதியதாக வந்திருக்கும் வெளியுலக ஆத்மாக்களை பிரபாவம் செய்து விடுகிறீர்கள் இல்லையா? அதே போல் பாப்தாதாவையும் பிரபாவம் செய்து விடுகிறீர்கள் ஆனால் உறுகியான எண்ணத்தின் பிரபாவம் கொஞ்ச நேரம் இருக்கிறது, எப்பொழுதும் இருப்பதில்லை. அப்படி

பாப்தாதாவிடம் இருக்கும் கோப்போ அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. எப்பொழுதெல்லாம் ஏதாவது நிகழ்ச்சி நடக்கிறது என்றால் பாப்தாதாவின் கோப்பில் ஒரு உறுதிமொழி கடிதம் சேர்ந்து விடுகிறது. எனவே பாப்தாதா எழுத வைப்பதில்லை.

இன்று கூட அனைவரும் எண்ணத்தையோ செய்து கொண்டிருக்கிறீர்கள், இப்பொழுது எதுவரை இந்த மாதிரி நடக்கும், கோப்பில் காகிதம் எதுவரை இருக்கும் என்று தந்தையும் பார்த்துக் கொண்டே இருக்கிறார். குழந்தைகள் தந்தைக்குச் சமமாக ஆவது மேலும் ஃபைல் (கோப்பு) முடிவடைந்து ஃபைனல் (முடிவு) ஆகி விடும். இப்பொழுதோ அனேக ஃபைல்கள் இருக்கின்றன. எனவே அன்பில் மூழ்கி மட்டும் இருங்கள், அன்புக்கடலுக்கு வெளியே வராதீர்கள். பிரம்மாபாபா மேல் உள்ளப்பூர்வமான அன்பு இருக்கிறது தான் இல்லையா? அப்படி அன்பிற்குரியவரைப் பின்பற்றி நடப்பது கடினமாக இருப்பதில்லை. எங்கு அன்பு இருக்கிறதோ அங்கு, உயிரையும் பலி கொடுத்து விடுகிறார்கள் என்று அன்பைப் பற்றி கூறவும் செய்கிறீர்கள். பாப்தாதாவோ உயிரை பலி கொடுப்பதற்காகக் கூறவில்லை, பழைய உலகை பலி கொடுத்து விடுங்கள். இதற்கான இறுதி தேதியை நிர்ணயம் செய்யுங்கள். மற்ற நிகழ்ச்சிகளின் தேதியையோ நிச்சயம் செய்கிறீர்கள். இதற்கான தேதியை எப்பொழுது நிச்சயம் செய்வீர்கள் இதற்கான தேதியை பாப்தாதா நிச்சயம் செய்யட்டும்). பாப்தாதா எப்பொழுது என்ற வார்த்தையை கூறுவதேயில்லை, இப்பொழுது என்று கூறுகிறார். பாப்தாதா எப்பொழுது என்று விட்டு விடுகிறாரா என்ன? இப்பொழுது என்று கூறுகிறார். என்ன செய்ய வேண்டுமோ அதை இப்பொழுதே செய்யுங்கள் ஆனால் பாப்தாதாவோ சக்திசாலியானவர் இல்லையா? எனவே சக்திக்கேற்றபடி இப்பொழுது என்று கூறுகிறார். குழந்தைகள் எப்பொழுது என்ற பழக்கத்தில் வசப்பட்டிருக்கிறார்கள். எனவே பாப்தாதா இதற்கான தேதியை எப்பொழுது நிச்சயம் செய்வீர்கள் என்று கூறுகிறார். நீங்களும் எப்பொழுது, எப்பொழுது என்று கூறுகிறீர்கள் என்றால் தந்தையும் எப்பொழுது என்று கூறுகிறார்.

இப்பொழுது நேரத்திற்குத் தகுந்தாற்போல் அனைவரும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வில் செல்லத் தான் வேண்டும் ஆனால் குழந்தைகளுக்கு நேரம் ஆசிரியராக ஆகக்கூடாது

என்று பாப்தாதா நினைக்கிறார். எப்பொழுது தந்தை ஆசிரியர் என்றால் அந்த நேரத்தில் ஆவது என்பது நேரத்தை ஆசிரியர் ஆக்குவது. அதில் மதிப்பெண்கள் குறைந்து விடுகிறது. இப்பொழுது கூட அனேக குழந்தைகள் நேரம் சுற்றுக் கொடுத்து விடும். நேரம் மாற்றி விடும் நேரம் வந்தால் நாம் சரியாகி விடுவோம்! என்று கூறுகிறார்கள். நேரத்தின் அனுசாரமோ முழு உலகத்தின் ஆத்மாக்கள் மாறுவார்கள் ஆனால் குழந்தைகள் நீங்கள் நேரத்திற்காக காத்திருக்காதீர்கள். நேரத்தை கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் ஆக்காதீர்கள். நீங்கள் உலகின் ஆசிரியரின் மாஸ்டர் உலக ஆசிரியர் ஆவீர்கள். படைப்பவர் ஆவீர்கள், நேரம் படைப்பாகும் என்றால், ஹே படைக்கும் ஆத்மாக்களே! படைப்பை ஆசிரியர் ஆக்காதீர்கள். பிரம்மாபாபா நேரத்தை ஆசிரியராக ஆக்கவில்லை. தொடக்கத்திலிருந்து இறுதிவரை எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் இருந்தது, தொடக்கத்தில் இந்த அளவு உடலை கொடுத்தார். மனதை ஈடுபடுத்தினார். செல்வத்தை ஈடுபடுத்தினார் ஆனால் கொஞ்சம் கூட பற்றுகல் இருக்கவில்லை. உடலைப் பற்றி இது பாபாவின் ரதம் என்பது இயற்கையான வார்த்தையாக இருந்தது. என்னுடைய உடல் அல்ல, இது பாபாவின் ரதம் ஆகும். நான் சாப்பிடுகிறேன் என்றில்லாமல் பாபாவின் ரதத்திற்கு உணவளிக்கிறேன் என்று கூறுவார். உடல் மேலும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் மனமோ மன்மனாபவ ஆக இருக்கவே தான் இருந்தது. செல்லத்தையும் ஈடுபடுத்தினார் ஆனால் என்னுடைய செல்வம், பணம் ஈடுபடுத்தப்படுகிறது என்று ஒருபொழுதும் எண்ணத்தில் கூட இருந்ததில்லை. நான் பணத்தைக் கொடுத்தேன், செல்வத்தை இந்தக் காரியத்தில் ஈடுபடுத்தினேன் என்று ஒருபொழுதும் வர்ணனை செய்ததில்லை. பாபாவின் பண்டார போலாநாத்தின் பண்டாரா. பணத்தை தன்னுடையது என்று புரிந்து தனிப்பட்டு தனக்காக ஒரு ரூபாய் மதிப்புள்ள பொருளைக்கூட உபயோகித்ததில்லை. கன்யாக்கள், மாதர்களின் பொறுப்பாகும். கன்யாக்களுக்கும், மாதர்களுக்கும் உயில் எழுதி கொடுத்து விட்டார். என்னுடையது என்பது இல்லாமல் இருந்தது. நேரத்தையும் மூச்சையும் தனக்காகப் பயன்படுத்தியதில்லை. அதிலேயும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவராக இருந்தார். இந்த அனைத்தும் இருந்தும் இயற்கை தாசியாக இருந்த போதிலும் எந்தவொரு அதிகப்படியான சாதனத்தையும் உபயோகிக்கவில்லை. எப்பொழுதுமே சாதாரண வாழ்க்கையில்

இருந்தார். எந்த ஒரு விசேஷ பொருளையும் தன்னுடைய காரியத்திற்காக உபயோகிக்கவில்லை. துணி கூட ஒரே விதமான துணி தான் இறுதி வரை இருந்தது. மாற்றம் செய்யவில்லை. வீடு கூட குழந்தைகளுக்காக கட்டினார் ஆனால் தான் அதை உபயோகிக்கவில்லை. குழந்தைகள் சொன்ன பிறகும் கூட கேட்டுக் கொண்டும் விலகியே இருந்தார். எப்பொழுதும் குழந்தைகளின் அன்பைப் பார்த்து இவை அனைத்தும் குழந்தைகளுக்காகத் தான் என்ற வார்த்தை வெளியானது. இதைக் தான் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு வாழ்க்கையில் வெளிப்படையாக இருந்தது என்று கூறுவது. இறுதி நேரத்திலும் பாருங்கள் குழந்தைகள் எதிரில் இருந்தார்கள், கையைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் பற்றுதல் இருந்ததா? எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு இருந்தது. அன்பிற்குரிய குழந்தைகள், நெருக்கமான குழந்தைகள் எதிரில் இருந்த போதிலும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் இருந்தது. ஒரு நொடியில் விலகியிருப்பதற்கான உள்உணர்வின், எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியத்தின் ஆதாரத்தைப் பார்த்தீர்கள். சேவை என்ற ஒரே ஒரு ஈடுபாடு தான் இருந்தது மற்ற அனைத்து விஷயங்களிலிருந்தும் விலகிய நிலை இருந்தது. இதைத் தான் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் என்று கூறுவது இப்பொழுது நேரத்திற்கு தகுந்தாற்போல் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வை வெளிப்படுத்துங்கள். எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வின்றி சக்தி கொடுக்கும் சேவை செய்ய முடியாது. தந்தையைப் பின்பற்றி நடங்கள். சாகாரத்தில் பிரம்மாபாபா இருந்தார். நிராகார தந்தையின் விஷயத்தையோ விட்டு விடுங்கள். சாகாரத்தில் அனைத்து பிராட்தியின் சாதனம் இருந்தும். அனைத்து குழந்தைகளின் பொறுப்பு இருந்த போதிலும், சூழ்நிலை, பிரச்சனைகள் வந்தும் தேர்ச்சி அடைந்து விட்டார் இல்லையா? மதிப்போடு தேர்ச்சி பெற்ற சான்றிதழைப் பெற்று விட்டார். இதற்கான முக்கியமான காரணம் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு இப்பொழுது சூட்சுமமான தங்க சங்கிலியின் பற்றுதல், மிக நுண்ணிய சூட்சும பற்றுதல்கள் அதிகம் இருக்கிறது. அனேக குழந்தைகளோ இது பற்றுதல் என்று பற்றுதலைப் புரிந்து கொள்வதேயில்லை. இதுவோ இருக்கத்தான் செய்யும், இதுவோ நடக்கத் தான் செய்யும் என்று நினைக்கிறார்கள். இதிலிருந்து விடுபட வேண்டும் என்பதைப் புரிந்து

கொள்வதில்லை. இந்த மாதிரியோ நடக்கத் தான் செய்கிறது என்று நினைக்கிறார்கள். அனேக விதமான பற்றுதல் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவராக ஆக விடுவதில்லை. ஆக வேண்டும் என்ற விருப்பம் இருக்கிறது, ஆகத் தான் வேண்டும் என்று நினைக்கவும் செய்கிறார்கள் ஆனால் விரும்புவதிலும் மற்றும் செய்வதிலும் சமநிலை இல்லை. விரும்புவது அதிகமாக இருக்கிறது. செய்வது குறைவாக இருக்கிறது. கண்டிப்பாக செய்ய வேண்டும் என்ற இந்த வைராக்கிய உள்உணர்வு இப்பொழுது வெளியாகவில்லை. இடையிடையில் வெளிப்படுகிறது, பிறகு உள்ளடங்கி விடுகிறது. நேரமோ செய்யத்தான் செய்யும் ஆனால் மதிப்போடு தேர்ச்சி அடைபவர் ஆக முடியாது. தேர்ச்சி அடைவீர்கள், ஆனால் மதிப்போடு தேர்ச்சி அடைபவராக ஆகவில்லை. நேரத்தின் வேகம் அதிகமாக இருக்கிறது. முயற்சியின் வேகம் குறைவாக இருக்கிறது. மேலோட்டமான முயற்சியோ இருக்கிறது ஆனால் சூட்சும பற்றுதலில் கட்டப்பட்டு விடுகிறார்கள்.

பறந்து வருகிறோம். பறந்து வருகிறோம் என்ற குழந்தைகளின் பாடலை பாப்தாதா எப்பொழுது கேட்கிறாரோ அப்பொழுது பறக்கவோ செய்கிறார்கள் ஆனால் பற்றுதல் பறக்க விடுமா அல்லது இங்கேயும் இன்றி, அங்கேயும் இன்றி இருந்து விடுவார்களா என்று யோசிக்கிறார். இப்பொழுது நேரத்திற்கு ஏற்றாற்போல் பற்றுதலிலிருந்து விடுபட்ட எல்லைக்கப்டாற்பட்ட வைராக்கியம் உடையவர் ஆகுங்கள். மனதால் வைராக்கியம் இருக்கட்டும். நிகழ்ச்சிக்கு ஏற்றபடி என்ன வைராக்கியம் வருகிறதோ அது அற்பகாலத்திற்கானதாக இருக்கும். தன்னுடைய சூட்சம பற்றுதலை சோதனை செய்யுங்கள். மேலோட்டமான விஷயங்கள் இப்பொழுது அகன்று விட்டன, சில குழந்தைகள் பெரிய பெரிய பற்றுதலிலிருந்து விடுபட்டு இருக்கிறார்கள் என்றாலும் சூட்சும பற்றுதல் மிக சூட்சுமமானவை அவற்றை அவர்களாலேயே சோதனை செய்ய முடிவதில்லை தெரிய வருவதில்லை). சோதனை செய்யுங்கள், மிக நன்றாக சோதனை செய்யுங்கள். சம்பூர்ண நிலையின் கண்ணாடியில் பற்றுதலை சோதனை செய்யுங்கள். இதைத் தான் பிரம்மாபாபாவின் நினைவு நாளின் பரிசாக பிரம்மாபாபாவிற்குக் கொடுங்கள். அன்பு இருக்கிறது தான் இல்லையா? அப்படியானால் அன்பில் என்ன செய்யப்படுகிறது? பரிசு கொடுக்கிறீர்கள் இல்லையா?

அந்த மாதிரி இந்தப் பரிசைக் கொடுங்கள். விட்டு விடுங்கள். அனைத்து ஆதாரங்களையும் விட்டு விட்டுங்கள். விடுபட்டு விடுங்கள். குழந்தைகளில் ஊக்கம் உற்சாகமும் எழுகிறது சுய முன்னேற்றத்திற்காக மிக அதிக நல்ல நல்ல எண்ணத்தையும் வைக்கிறார்கள் என்று பாப்தாதா குஷியும் அடைகிறார். இப்பொழுது அந்த எண்ணங்களை செய்து காண்பியுங்கள். நல்லது.

நாலாபுறங்களிலுமுள்ள பாரதம் மற்றும் வெளிநாட்டில் அன்பிலேயே மூழ்கியிருக்கும் அன்பிற்குரிய குழந்தைகளுக்கு, எப்பொழுதும் தந்தையின் அன்புக் கடலிலேயே மூழ்கியிருக்கக்கூடிய மிக நெருக்கமான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பிரம்மாபாபானின் விசேஷங்களை தன்னில் தாரணை செய்யக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் கடினத்திலிருந்து விடுபட்டு மனமகிழ்ச்சியில் இருக்கக்கூடிய பரமாத்மா அன்பில் பறக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு: தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும் என்ற எண்ணத்தை நடைமுறையில் கொண்டு வரக்கூடிய அந்த மாதிரி திலாராம் தந்தையின் இதயத்தில் நிரம்பியிருக்கும் குழந்தைகளுக்கு, விசேஷமாக இன்றைய தினம் பிரம்மாபாபாவின் பல கோடி மடங்கு அன்பு நினைவுகளை ஏற்றுக் கொள்ளுங்கள். பாப்தாதாவோ எப்பொழுதுமே குழந்தைகளின் இதயத்தில் இருக்கிறார், சூட்சும வதனத்தில் இருந்த போதிலும் குழந்தைகளின் இதயத்தில் இருக்கிறார் என்றால் அந்த மாதிரி இதயத்தில் நிரம்பியிருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு என்ற முத்துக்களை தட்டுக்களில் நிரப்பி வழிய வழிய அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம் கொடுக்கிறார்.

வரதானம்: மூன்று காலங்களையும் தெரிந்த நிலை மூலமாக மூன்று காலங்களைத் தெளிவாக அனுபவம் செய்யக்கூடிய மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் ஆகுக!

யார் மூன்று காலங்களையும் தெரிந்த நிலையில் நிலைத்திருக்கிறாரோ அவர் ஒரு நொடியில் மூன்று காலங்களையும் தெளிவாகப் பார்க்க முடியும். நேற்று என்னவாக இருந்தோம். இன்று என்னவாக இருக்கிறோம் மேலும் என்னவாக ஆவோம் என்பது அவர்களின் எதிரில் அனைத்தும் தெளிவாகி விடுகிறது. ஏதாவது நகரில் மிக உயர்ந்த

உச்சியில் நின்று கொண்டு முழு நகரத்தையும் பார்க்கிறார்கள் என்றால் மிகவும் மகிழ்ச்சி ஏற்படும், அதே போலவே சங்கமயுகம் மிக உயரமான உச்சி ஆகும். இதில் நின்று கொண்டு மூன்று காலங் களையும் பாருங்கள் மேலும் நாங்கள் தான் தேவதைகளாக இருந்தோம், மேலும் மீண்டும் நாங்கள் தான் ஆவோம் என்று நிச்சயத்தோடு கூறுங்கள். இதைத் தான் மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் என்று கூறுவது.

சுலோகன்: ஒவ்வொரு நேரமும் இறுதி நேரம் ஆகும், இந்த நினைவு மூலம் எவரெடியாக ஆகுங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

# 31.01.1998 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாஸ் வித் ஆனர் (மதிப்புடன் தேர்ச்சி அடைபவர்) ஆவதற்காக ஒவ்வொரு பொக்கிஷத்தின் கணக்கை சோதனை செய்து சேமிப்பு செய்யுங்கள்!

இன்று நாலாபுறங்களிலும் பாரதம் மற்றும் வெளிநாட்டின் சிறிய மற்றும் பெரிய குழந்தைகளின் பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றனர். அந்த மாதிரியான பாக்கியம் முழுக் கல்பத்திலும் பிராமண ஆத்மாக்களைத் தவிர வேறு யாருக்குமே இருக்க முடியாது. தேவதைகள் கூட பிராமண வாழ்க்கையை உயர்ந்ததாக நினைக்கிறார்கள். ஒவ்வொருவரும் தன்னுடைய வாழ்க்கையின் தொடக்கத்திலிருந்தே என்னுடைய பாக்கியம் பிறந்ததிலிருந்தே எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது என்று பாருங்கள். வாழ்க்கையில் பிறந்தவுடனேயே தாய், தந்தையின் வளர்ப்பின் பாக்கியம் கிடைக்கிறது. அதற்குப் பிறகு படிப்பின் பாக்கியம் கிடைக்கிறது, அதற்குப் பிறகு குரு மூலமாக வழி மற்றும் வரதானம் கிடைக்கிறது. குழந்தைகள் உங்களுக்கு வளர்ப்பு, படிப்பு மற்றும் ஸ்ரீமத், வரதானம் கொடுப்பவர் யார்? பரமாத்மா மூலமாக இந்த மூன்றுமே பிராப்தி ஆகியிருக்கிறது. வளர்ப்பைப் பார்த்தீர்கள் என்றால் பரமாத்மாவின் வளர்ப்பு என்பது மிகக் குறைவாக கோடியிலும் சிலருக்கு மட்டும் தான் கிடைக்கிறது. பரமாத்மா ஆசிரியரின் படிப்பு உங்களைத் தவிர வேறு யாருக்குமே கிடைப்பதில்லை. சத்குரு மூலமாக ஸ்ரீமத், வரதானம் உங்களுக்குத் தான் கிடைத்திருக்கிறது. அப்படியானால் உங்களுடைய டாக்கியத்தை நன்றாகத் தெரிந்திருக்கிறீர்களா? பாக்கியத்தை நினைவில் வைத்துக் கொண்டே ஆஹா, என்னுடைய பாக்கியமே! என்று ஆடிக் கொண்டே இருக்கிறீர்களா? பாடலை பாடிக் கொண்டே இருக்கிறீர்களா?

அமிர்தவேளையில் தொடங்கி எப்பொழுது எழுகிறீர்களோ அப்பொழுது பரமாத்மா அன்பிலேயே மூழ்கியிருந்து எழுகிறீர்கள். பரமாத்மாவின் அன்பு உங்களை எழுப்புகிறது. முழு நாள் நடவடிக்கையின் தொடக்கத்தில் பரமாத்மாவின் அன்பு இருக்கிறது. அன்பு இல்லை என்றால் எழ முடியாது. அன்பு தான் உங்களுடைய நேரத்தின் கடிகாரம் ஆகும். அன்பின் கடிகாரம் உங்களை எழுப்புகிறது. முழு நாளிலும் பரமாத்மாவின் துணை ஒவ்வொரு காரியத்தையும் செய்விக்கிறது. உங்களுக்கு எவ்வளவு பெரிய பாக்கியம் கிடைத்திருக்கிறது. உங்களுக்காக சுயம் தந்தை தன்னுடைய பரந்தாமத்தை விட்டு விட்டு உங்களுக்கு ஞானக் கல்வி கொடுப்பதற்காக வருகிறார். தினசரி பகவான் தன்னுடைய உலகத்தை விட்டு விட்டு படிப்பிப்பதற்காக இங்கே வருகிறார் என்று எப்பொழுதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஆத்மாக்கள் எவ்வளவு தொலை தூரத்திலிருந்து இங்கு வந்திருந்தாலும், பரந்தாமத்தை விட தூரமான தேசம் ஒன்றுமில்லை. அந்த மாதிரி ஏதாவது தேசம் இருக்கிறதா? அமெரிக்கா, ஆஃப்பிரிக்கா பரந்தாமத்தை விட தூரமானதா? பரந்தாமம் உயர்ந்ததிலும் உயர்ந்த தாமம் ஆகும். உயர்ந்ததிலும் உயர்ந்த தாமத்திலிருந்து உயர்ந்ததிலும் உயர்ந்த பகவான் உயர்ந்ததிலும் உயர்ந்த குழந்தைகளுக்குக் கற்பிக்க வருகிறார். அந்த மாதிரியானது என்னுடைய பாக்கியம் என்று அனுபவம் செட்கிறீர்களா? சத்குருவின் ரூபத்தில் ஒவ்வொரு காரியத்திற்காக ஸ்ரீமத்தும் கொடுக்கிறார். மேலும் தன்னுடைய துணையையும் கொடுக்கிறார். வழி மட்டும் கூறுவதில்லை, துணையும் கொடுக்கிறார். நீங்கள் என்ன பாடல் பாடுகிறீர்கள்? என்னுடனேயே இருக்கிறீர்கள் என்றா அல்லது தூரமாக இருக்கிறீர்கள் என்றா? உடன் இருக்கிறார் இல்லையா? ஒருவேளை கேட்கிறீர்கள் என்றால் பரமாத்மா ஆசிரியரிடமிருந்து கேட்கிறீர்கள், ஒருவேளை அருந்துகிறீர்கள் என்றாலும் பாப்தாதாவுடன் அருந்துகிறீர்கள். தனியாக அருந்துகிறீர்கள் என்றால் அது உங்களுடைய தவறு. என்னுடன் அருந்து என்று தந்தையோ கூறுகிறார். குழந்தைகள் உங்களுடைய உறுதி மொழியும் உடன் இருப்போம், உடன் அருந்துவோம், உடன் உண்போம், உடன் உறங்குவோம் மற்றும் உடன் செல்வோம் என்ற உறுதிமொழி இருக்கிறது. தூங்கினாலும் கூட தனியாக இல்லை. தனியாக தூங்கினீர்கள் என்றால் தீய கனவுகள் மற்றும் தீய சிந்தனைகள்

கனவிலும் வருகின்றன ஆனால் உங்கள் மேல் அவ்வளவு அன்பு இருக்கிறது! அதனால் தனியாகத் தூங்காதீர்கள் எப்பொழுதும் என்னுடன் தூங்குங்கள் என்று கூறுகிறார். அப்படி எழுந்தீர்கள் என்றாலும் தந்தையுடன், தூங்கினீர்கள் என்றாலும் தந்தையுடன், உணவு அருந்துகிறீர்கள் என்றாலும் தந்தையுடன், நடந்து சென்று கொண்டிருந்தாலும் தந்தையுடன் இருங்கள். ஒருவேளை அலுவலகம் செல்கிறீர்கள், வியாபாரம் செய்கிறீர்கள் என்றாலும் வியாபாரத்திற்கு நீங்கள் டிரஸ்டியாக இருக்கிறீர்கள் ஆனால் முதலாளி தந்தை ஆவார். அலுவலகத்தில் செல்கிறீர்கள் என்றாலும் என்னுடைய டைரக்டர், தலைமை அதிகாரி பாப்தாதா என்று தெரிந்திருக்கிறீர்கள். இவர் அந்த பதவியில் மட்டும் இருப்பவர் நான் தந்தையின் டைரக்ஷன் படி காரியம் செய்து கொண்டிருக்கிறேன்.எப்பொழுதாவது சோர்வடைந்து விடுகிறீர்கள் என்றால் தந்தை நண்பனாகி கலகலப்பூட்டுகிறார். நண்பனாகவும் ஆகி விடுகிறார். எப்பொழுதாவது அன்புக் கண்ணீர் வடிக்கிறீர்கள் என்றால் துடைப்பதற்காக தந்தை வருகிறார் மேலும் உங்களுடைய கண்ணீர் துளிகளை இதயம் என்ற சிறிய பெட்டகத்தில் முத்துக்குச் சமமாக நிரப்பி வைத்து விடுகிறார். ஒருவேளை எப்பொழுதாவது குறும்பு செய்பவராகி கோபப் படுகிறீர்கள், வெறுப்படைகிறீர்கள் என்றாலும் மிக இனிமையானவர்களாக இருக்கிறீர்கள் ஆனால் தந்தை, கோபப்பட்டு வெறுப்படைந்தவணரயும் சமாதானம் செய்ய வருகிறார். குழந்தைகளே! ஒன்றுமில்லை முன்னேறிச் செல்லுங்கள். என்ன நடந்ததோ அது முடிந்து விட்டது. மறந்து விடுங்கள், கடந்ததை கடந்ததாக ஆக்குங்கள் என்று கூறி சமாதானம் செய்கிறார். அப்படி முழு நாளில் ஒவ்வொரு காரியத்திலும் யாருடன் இருக்கிறீர்கள்? பாப்தாதாவுடன் இருக்கிறீர்கள். பாப்தாதாவிற்கும் சில நேரம் குழந்தைகளின் விஷயத்தின் மேல் சிரிப்பும் வருகிறது. எப்பொழுது பாபா நீங்கள் மறந்து விடுகிறீர்கள் என்று கூறுகிறார்களோ அப்பொழுது ஒரு பக்கம் இணைந்திருக்கிறோம் என்று கூறுகிறார்கள், இணைந்திருப்பவர் எப்பொழுதாவது மறப்பாரா என்ன? எப்பொழுது உடனே இருக்கிறார் என்றால் உடன் இருப்பவர் மறக்க முடியுமா என்ன? எனவே குழந்தைகளில் அவ்வளவு சக்தி இருக்கிறது அதன் மூலம் இணைந்திருப்பவரையும் பிரித்து விடுகிறார்கள், ஈடாஷ் குழந்தைகளே! என்று பாபா கூறுகிறார். இருப்பது

இணைந்து மேலும் மாயா இணைந்திருப்பவரையும் கொஞ்சம் பிரித்து விடுகிறது.

குழந்தைகளின் விளையாட்டைப் பார்த்து குழந்தைகளுக்கு உங்களுடைய பாக்கியத்தை எப்பொழுதும் நினைவில் வையுங்கள் என்று தான் பாப்தாதா கூறுகிறார் ஆனால் நடப்பது என்ன? ஆம் என்னுடைய பாக்கியம் மிக உயர்ந்தது என்று யோசிக்கிறீர்கள், ஆனால் யோசிக்கும் சொரூபமாக ஆகி விடுகிறீர்கள், நினைவு சொரூபம் ஆவதில்லை. நானோ இது ஆவேன், நானோ இப்படி ஆவேன், நானோ அப்படி ஆவேன் ... என்று மிக நன்றாக யோசிக்கிறீர்கள், வர்ணனையும் மிக நன்றாக செய்கிறீர்கள் ஆனால் என்ன யோசிக்கிறீர்களோ, என்ன கூறுகிறீர்களோ அதனுடைய சொரூபம் ஆகி விடுங்கள். சொரூபம் ஆவதில் குறை ஏற்பட்டு விடுகிறது. ஒவ்வொரு விஷயத்தின் சொரூபம் ஆகி விடுங்கள். என்ன யோசிக்கிறீர்களோ அந்த சொரூபத்தையும் அனுபவம் செய்யுங்கள். அனைத்தையும் விட மிகப் பெரிய விஷயம் அனுபவியாக ஆவது. அனாதி காலத்தில் எப்பொழுது பரந்தாமத்தில் இருந்தீர்களோ அப்பொழுது யோசிக்கும் சொரூபம் இல்லை, நினைவு சொரூபம் இருந்தது. நான் ஆத்மா ஆவேன், நான் ஆத்மா ஆவேன் -என்ற இப்படி யோசிப்பது கூட இல்லை, ஆனால் சொரூபமே அப்படியாக இருந்தது. ஆதி காலத்தில் இவ்வாறு முயற்சி செய்ததின் பலன் சொரூபமாகும். நான் தேவதை ஆவேன், நான் தேவதை ஆவேன் என்று யோசிக்க வேண்டியதில்லை, சொரூபமே அது தான். அப்படி அனாதி காலம், ஆதி காலத்தில் எப்பொழுதும் சொரூபத்திலேயே இருக்கிறீர்கள் என்றால், இப்பொழுதும் இறுதியில் சொருபம் ஆகுங்கள். சொரூபம் ஆவதினால் தன்னுடைய குணம், சக்திகள் இயல்பாகவே வெளிப்படும். எப்படி ஏதாவது பதவியில் உள்ளவர் எப்பொழுது தன்னுடைய ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார் என்றால். அந்த பதவியின் குணம் மற்றும் காரியம் அவரிடமிருந்து இயல்பாகவே வெளிப்படும். அந்த மாதிரி நீங்கள் எப்பொழுதும் சொரூபத்தின் ஆசனத்தில் அமர்ந்திருந்தீர்கள் என்றால் ஒவ்வொரு குணம், ஒவ்வொரு சக்தி, ஒவ்வொரு விதமான போதை இயல்பாகவே வெளிப்படும். கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்காது. இதைத் தான் பிராமண நிலையின் இயற்கையான இயல்பு என்று கூறுவது, அதில் மற்ற அனைத்து அனேக பிறவிகளின் இயல்பு முடிவடைந்து விடுகிறது.

# 1998 அவ்யக்த முரளி

பிராமண வாழ்க்கையின் இயற்கையான இயல்பே குண சொரூபம், அனைத்து சக்தி சொரூபம் ஆகும். மேலும் என்னென்ன பழைய இயல்புகள் இருக்கிறதோ அது பிராமண வாழ்க்கையின் இயல்பு அல்ல. என்னுடைய இயல்பே அப்படித்தான் என்று கூறுகிறார்கள் ஆனால் என்னுடைய இயல்பு என்று யார் கூறுகிறார்? பிராமணனா அல்லது சத்ரியனா அல்லது கடந்த பிறவியின் நினைவு சொரூபமான ஆத்மா கூறுகிறதா? எது பிரம்மாபாபாவின் இயல்போ அது தான் பிராமணர்களின் இயல்பு. அப்படியானால் எந்த நேரம் என்னுடைய இயல்பு. என்னுடைய சுபாவம் என்று அந்த மாதிரி கூறுகிறீர்கள் என்றால், பிராமண வாழ்க்கையில் என்னுடைய இயல்பு, என்னுடைய சுபாவம் என்று அந்த மாதிரி வார்த்தை இருக்க முடியுமா? ஒருவேளை இதுவரையிலும் அகற்றிக் கொண்டிருக்கிறீர்கள், மேலும் கடந்த காலத்தின் இயல்பு வெளிப்பட்டு விடுகிறது என்றால், இந்த நேரம் நான் பிராமணன் இல்லை, சத்ரியன் ஆவேன், அகற்றுவதற்கு யுத்தம் செய்து கொண்டிருக்கிறேன் என்று புரிந்து கொள்ள வேண்டும். அப்படி சில நேரம் பிராமணனாகவும், சில நேரம் சத்ரியனாகவும் ஆகி விடுகிறீர்களா? உங்களை என்னவென்று கூறுகிறீர்கள்? சத்ரியகுமார் என்றா அல்லது பிரம்மா குமார் என்றா? யார் நீங்கள்? சத்ரியகுமாரா என்ன? நீங்கள் பிரம்மா குமாரர்கள் மற்றும் பிரம்மா குமாரிகள். வேறு பெயரோ கிடையாது. யாரையாவது சத்ரியகுமாரே வா என்று அழைக்கிறீர்களா? அந்த மாதிரி கூறுகிறீர்களா அல்லது நான் பிரம்மா குமார் இல்லை, சத்ரிய குமார் ஆவேன் என்று தன்னைத் தானே கூறுகிறீர்களா? அப்படி பிராமணன் என்றால் எது பிரம்மாபாபாவின் இயல்போ அது தான் பிராமணர்களின் இயல்பு, எனவே என்ன செய்வது, என்னுடைய இயல்பு அப்படி என்ற இந்த வார்த்தையை ஒருபொழுதும் கூறாதீர்கள். தவறாகவும் கூறாதீர்கள் மேலும் யோசிக்கவும் செய்யாதீர்கள். இப்படி கூறுவது கூட தன்னை விடுவிப்பதற்கான சாக்கு போக்கு ஆகும். புது ஜென்மம் ஆகும். புது ஜென்மத்தில் பழைய இயல்பு. பழைய சுபாவம் எங்கிருந்து வெளிப்பட முடியும். அப்படி பழைய ஜென்மத்திலிருந்து முழுமையாக இறக்கவில்லை, கொஞ்சம் உயிரோடு இருக்கிறீர்கள் மற்றும் கொஞ்சம் இறந்திருக்கிறீர்கள் என்று அப்படியா? பிராமண வாழ்க்கை என்றால் எது பிரம்மாபாபாவின் ஒவ்வொரு அடியாக இருந்ததோ அதுவே பிராமணர்களின் ஒவ்வொரு அடியாக இருக்கட்டும்.

அப்படி பாப்தாதா பாக்கியத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். மேலும் இவ்வளவு உயர்ந்த பாக்கியம், அந்த பாக்கியத்தின் எதிரில் இந்த வார்த்தை நன்றாக இருக்காது. இந்த தடவை முக்தி வருடத்தை கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? இதற்காக என்ன வகுப்பு நடத்துகிறீர்கள். முக்தி வருடமாக இருக்கிறது. அப்படி முக்தி வருடமாக இருக்கிறதா அல்லது 99 ல் வர வேண்டுமா? 198-வது வருடம் முக்தி வருடமா? உங்களில் யார் இந்த வருடம் தான் முக்தி வருடம் என்று நினைக்கிறீர்களோ அவர்கள் கையை அசையுங்கள். டாருங்கள் கை அசைப்பது மிகவும் கலபம். என்ன நடக்கிறது? ஒரு நல்ல வாயுமண்டலத்தில் அமர்ந்திருக்கிறீர்கள் இல்லையா, குஷியில் ஆடிக் கொண்டிருக்கிறீர்கள். எனவே கையை அசைத்து விடுகிறீர்கள் ஆனால் உள்ளப் பூர்வமாக கையை அசையுங்கள். உறுதிமொழி எடுங்கள். எது சென்று விட்டாலும் கூட ஆனால் முக்தி வருடம் கொண்டாட வேண்டும் என்ற என்னுடைய உறுதிமொழி சென்று விடக்கூடாது. அந்த மாதிரி திடமான உறுதிமொழி எடுத்தீர்களா? பாருங்கள் கவனமாக கையை உயர்த்துங்கள். இந்த டி.வி.யில் வந்தாலும் அல்லது வராவிட்டாலும், பாப்தாதாவிடமோ உங்களுடைய படம் பிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே அந்த மாதிரி பலஹீனமான வார்த்தையிலிருந்தும் முக்தி அடைவது, வார்த்தை அந்த மாதிரி இனிமையானதாக இருக்கட்டும், தந்தைக்குச் சமமானதாக இருக்கட்டும், எப்பொழுதும் ஒவ்வொரு ஆத்மாவிற்காக சுபபாவனை நிறைந்த வார்த்தை இருக்கட்டும். இதைத் தான் யுக்தி யுக்தான வார்த்தை என்று கூறுவது. சாதாரண வார்த்தையும் நடைமுறையில் இருக்கக்கூடாது. யாராவது திடீரென்று வந்து விட்டாலும் இது வார்த்தையா அல்லது முத்தா என்று அந்த மாதிரி அனுபவம் செய்ய வேண்டும். சுபபாவனையின் வார்த்தைகள் வைரம், முத்துக்குச் சமமானவை, ஏனென்றால் நேரத்திற்கு ஏற்றபடி அனைத்து பொக்கிஷங்களைச் சேமிப்பதற்கு இப்பொழுது மிகக்குறைந்த நேரம் இருக்கிறது என்று பாப்தாதா அனேக தடவைகள் சமிக்ஞை கொடுத்து விட்டார். ஒருவேளை இந்த நேரத்தில் நேரத்தின், எண்ணத்தின், வார்த்தையின், ஞான செல்வத்தின், யோகத்தின் சக்திகளின், தெய்வீக வாழ்க்கையின் அனைத்து குணங்களின் பொக்கிஷங்களை சேமிக்கவில்லை என்றால் பிறகு அந்த மாதிரி சேமிப்பதற்கான நேரம்

கிடைப்பது சுலபமாக இருக்காது. முழு நாளில் தன்னுடைய இந்த ஒவ்வொரு பொக்கிஷத்தின் கணக்கை சோதனை செய்யுங்கள். எப்படி ஸ்தூல பணத்தின் கணக்கை எவ்வளவு சேமிட்டாகியிருக்கிறது என்று சோதனை செய்கிறீர்கள் இல்லையா... அந்த மாதிரி ஒவ்வொரு பொக்கிஷத்தின் கணக்கை சேமியுங்கள். சோதனை செய்யுங்கள். அனைத்து பொக்கிஷங்களும் தேவையாக இருக்கிறது. ஒருவேளை மதிப்புடன் தேர்ச்சி அடைய விரும்புகிறீர்கள் என்றால் ஒவ்வொரு பொக்கிஷத்தின் சேமிப்பு கணக்கு 21- ஜென்மங்கள் சேமிப்பாகியிருக்கும் கணக்கிலிருந்து பிராப்தியை அனுபவிக்க முடியும் அளவிற்கு அந்த அளவு நிரம்பியிருக்க வேண்டும். இப்பொழுது நேரத்தின் மிகவும் காலம் கடந்துவிட்டது என்ற மணி ஒலிக்கவில்லை, விரைவில் ஒலிக்கப்போகிறது. நாள் மற்றும் தேதியைக் கூற மாட்டோம். மிக காலதாமதம் ஸ்டு லேட்) என்பது திடீரென்று வெளியாகும். பின்பு என்ன செய்வீர்கள்? அந்த நேரம் சேமிப்பு செய்வீர்களா? எவ்வளவு தான் விரும்பினாலும் நேரம் கிடைக்காது. எனவே சேமிப்பு செய்யுங்கள் -சேமிப்பு செய்யுங்கள் -சேமிப்பு செய்யுங்கள் என்று பாப்தாதா பல தடவை சமிக்ஞை கொடுக்கிறார். ஏனென்றால் இப்பொழுது கூட உங்களுடைய பட்டம் சர்வ சக்திவான், சக்திவான் இல்லை, சர்வ சக்திவான் என்பதாகும். எதிர்காலத்திலும் சர்வ குண சம்பன்னம், குண சம்பன்னம் மட்டும் இல்லை. இந்த அனைத்து பொக்கிஷங்களையும் சேமிப்பது என்றால் குணம் மற்றும் சக்திகள் சேமிப்பாகிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு பொக்கிஷத்திற்கும் குணம் மற்றும் சக்தியோடு சம்மந்தம் இருக்கிறது. எப்படி சாதாரண வார்த்தை இல்லை, இனிமையான பேச்சு என்ற இதுவும் குணம் ஆகும். அப்படி ஒவ்வொரு பொக்கிஷத்திற்கும் தொடர்பு இருக்கிறது.

பாப்தாதாவிற்கு குழந்தைகள் மேல் அன்பு இருக்கிறது. எனவே மீண்டும். மீண்டும் சமிக்ஞை கொடுக்கிறார். ஏனென்றால் இன்றைய சபையில் அனைவரும் வகை வகையானவர்கள். சிறு குழந்தைகளும் இருக்கிறார்கள். டீச்சர்களும் இருக்கிறார்கள். ஏனென்றால் டீச்சர்கள் தான் சமர்ப்பணம் ஆகியிருக்கிறார்கள். குமாரிகளும் இருக்கிறார்கள், இல்லறத்தில் வாழ்பவர்களும் இருக்கிறார்கள். அனைத்து வகையினரும் இருக்கிறார்கள்.

நல்லது -டீச்சர்களுக்காக பாப்தாதாவின் ஒரு சுபபாவனை இருக்கிறது, சொல்லலாமா? கேட்க மட்டும் செய்வீர்களா அல்லது செய்யவும் செய்வீர்களா? யோசிக்க மட்டும் செய்வீர்களா அல்லது அதன் சொரூபமாகவும் ஆவீர்களா? கேட்பீர்கள், செய்வீர்கள் நல்லது தான் -மிகச் சிறிய கப்பாவனை, பெரிய விஷயம் அல்ல மிகச் சிறிய விஷயம். அனைத்து சென்டர்களும் தடையற்றதாக ஆகி விட வேண்டும் என்று தாதி செய்தி அனுப்பியிருந்தார்கள். அதற்கான பொறுப்பிலிருப்பவர்கள் ஆசிரியர்கள். இன்று வரையிலும் டீச்சர்களின் புகார் வந்து கொண்டிருக்கின்றன. தாதிகளிடம் அந்தக் கோட்பு இருக்கிறது தான் இல்லையா? அலுவலகத்தில் இருக்கும். ஈஷு(தாதி) சென்டர்களிலிருந்து அந்த அளவு வீணான கடிதங்கள் குப்பைப் பெட்டியே நிரம்பிவிடும் அளவிற்கு வருகின்றன என்று கூறுகிறார். அந்த மாதிரி தான் இல்லையா? இதைப் படிப்பதிலும் நேரம் செலவாகிறது. பிறகு கிழிப்பதிலும் நேரம் செல்கிறது பெட்டியில் போடுவதிலும் நேரம் செலவாகிறது. அப்படி இந்த உழைப்பு வீணாகி விட்டது தான் இல்லையா? எனவே பாப்தாதாவின் சுபபாவனை அனைத்து டீச்சர்களும் தந்தையின் வலதுகரம் ஆவீர்கள், இடது கரம் அல்ல, வலது கரம் ஆவீர்கள். வலதுகரத்தின் இடத்திலிருந்து சென்டரிலிருந்து குப்பைப்பெட்டி நிரம்பிவிடும் அளவிற்கு செய்தி வருவது என்பது நல்லதா? ஆம் அல்லது இல்லை என்று கூறுங்கள். இந்த வருடம் நாங்கள் ஒவ்வொருவரும் இந்த மூன்று சான்றிதழ்களைப் பெறுவோம் என்று சுயம் விக்னவிநாஷக் சென்டர் விக்ன விநாஷக் மேலும் உடன் இருப்பவர் விக்ன விநாஷக். யார் இந்த மூன்று சான்றிதழ்களைப் பெறுவதற்கு தயாராக இருக்கிறீர்களோ அந்த டீச்சர்கள் கையை உயர்த்துங்கள். பாண்டவர்கள் யார் யார் சென்டர்களில் இருக்கிறீர்களோ அவர்களும் கையை உயர்த்துங்கள் (அனைவரும் கை உயர்த்தினார்கள்). நன்றி.

இப்பொழுது வீணான காகிதப் பெட்டி காலியாக இருக்கும். படிக்க வேண்டியது இருக்காது. கடிதங்களைத் திறந்து திறந்து கை வலிக்கிறது என்று இந்த ஈஷு கூறுகிறார். எனவே இங்கேயே அமர்ந்திருந்தாலும், வெளிநாட்டில் இருந்து கேட்டுக் கொண்டிருந்தாலும், பாரதத்தில் எங்காவதிருந்து கேட்டுக் கொண்டிருந்தாலும் அல்லது பின்பு முரளி கேட்பவர்களாக இருந்தாலும் பாப்தாதா முழு உலகத்தின்

பொறுப்பிலிருக்கும் டீச்சர்களுக்காக இந்த சுபபாவனை தான் வைக்கிறார். இந்த வருடம் எந்தவொரு புகாரும் வரக்கூடாது. புகாரின் கோப்பு முடிவடைந்து விட வேண்டும். பாப்தாதாவிடமும் அதிகமான கோப்புக்கள் இருக்கின்றன. அப்படி இந்த வருடம் புகாரின் கோப்பு முடிவடைந்து விட்டது. பிறகு அனைவருமே நல்லவர்களாகி விடுவீர்கள். நல்லவர் களிலிருந்து மிக நல்லவர்களாக வேண்டும். விருப்பம் உள்ளது தான் இல்லையா? யார் எப்படிப்பட்டவராக இருந்தாலும் அவரோடு இருப்பதற்கான விதியைக் கற்றுக் கொள்ளுங்கள். யார் என்ன தான் செய்தாலும், அடிக்கடி தடை ரூபமாகி எதிரில் வந்தாலும் ஆனால் இந்தத் தடைகளில் நேரத்தை செலவழிப்பது என்ற இதுவும் எதுவரை இருக்க முடியும். இதற்கும் நிறைவு விழா இருக்க வேண்டும் இல்லையா? எனவே மற்றவர்களைப் பார்க்காதீர்கள், இவர் அப்படிச் செய்கிறார், இவர் இப்படிச் செய்கிறார் என்றில்லாமல் நான் என்ன செய்ய வேண்டும்? அதை யோசிக்க வேண்டும். ஒருவேளை அவர் மலையாக இருக்கிறார் என்றால் நான் ஓதுங்கிச் செல்ல வேண்டும். மலையை அகற்ற முயற்சிக்கக்கூடாது. இவர் மாறினார் என்றால் நான் மாறுவேன் -இந்த மலை அகன்றது என்றால் நான் முன்னேறிச் செல்வேன் என்பது கூடாது. மலை அகலாது, நீங்களும் லட்சியத்தை சென்று அடைய முடியாது. எனவே ஒருவேளை அந்த ஆத்மாவிற்காக சுபபாவனை இருக்கிறது என்றால், சமிக்ஞை கொடுத்தீர்கள் மற்றும் மனம், புத்தியால் காலி ஆனீர்கள். தன்னையே அந்த விக்ன சொரூபம் ஆகுபவரின் யோசனையில், சிந்தனையில் போடாதீர்கள். எப்பொழுது வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள் என்றால், வரிசைக்கிரமத்தில் நிலையும் வரிசைக்கிரமமாக இருக்கவே தான் இருக்கும் ஆனால் எனக்கு நம்பர் ஒன் ஆக வேண்டும். அந்த மாதிரி தடை மற்றும் வீணான எண்ணங்களை வைத்திருக்கும் ஆத்மாக்களுக்காக நீங்கள் பரிவர்த்தனை ஆகி அவர்களுக்காக சுபபாவனை வைத்துக் கொண்டே இருங்கள். கொஞ்சம் காலம் எடுக்கும், கடின உழைப்பு கொஞ்சம் செய்ய வேண்டியதாக இருக்கும் ஆனால் இறுதியில் யார் சுயபரிவர்த்தனை செய்கிறாரோ அவர் கழுத்தில் தான் வெற்றி மாலை விழுகிறது. சுபபாவனையோடு ஒருவேளை அவரை பரிவர்த்தனை செய்ய முடியும் என்றால் செய்யுங்கள், இல்லையென்றால் சமிக்ஞை கொடுங்கள். தன்னுடைய பொறுப்பை முடித்து விடுங்கள் மற்றும் சுயபரிவர்த்தனை செய்து

முன்னுக்கு பறந்து கொண்டே செல்லுங்கள். இந்த தடை ரூபம் கூட பற்றுதலின் தங்கக் கயிறு ஆகும். இதுவும் பறக்க விடாது, இது மிகுந்த நுண்ணியமான மற்றும் மிகுந்த சத்தியத்தின் திரைச்சீலையின் நூல் ஆகும். இதுவோ உண்மையான விஷயம் தான் இல்லையா என்று இதைத் தான் யோசிக்கிறார்கள். இது என்னவோ நடக்கிறது தான் இல்லையா? இது நடக்கக்கூடாது இல்லையா? ஆனால் எதுவரை பார்த்துக் கொண்டு, எதுவரை நின்று கொண்டே இருப்பீர்கள். இப்பொழுதோ தன்னை நுண்ணியமான நூல்களிலிருந்து விடுபடச் செய்யுங்கள். முக்தி வருடத்தைக் கொண்டாடுங்கள். எனவே குழந்தைளில் என்னென்ன ஆசைகள் இருக்கின்றன. ஊக்கம் இருக்கிறது உற்சாகம் இருக்கிறது. இந்த அனைத்திற்கும் நிகழ்ச்சி வைத்து பாப்தாதா நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார் ஆனால் இந்த வருடத்தின் இறுதி நிகழ்ச்சியாக முக்தி வருடத்தின் நிகழ்ச்சி இருக்கட்டும். நிகழ்ச்சியில் தாதிகளுக்கு பரிசுகளும் கொடுக்கிறீர்கள். அப்படி பாப்தாதாவிற்கு இந்த முக்தி வருடத்தின் நிகழ்ச்சியில் தன்னுடைய சம்பூர்ண நிலையின் பரிசைக் கொடுங்கள். நல்லது.

நாலாபுறங்களிலுமுள்ள பரமாத்மாவின் பாலனை, படிப்பு மற்றும் ஸ்ரீமத்தின் பாக்கியத்தின் அதிகாரி விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் யோசிப்பது மற்றும் சொரூபம் ஆவது இரண்டையும் சமமாக ஆக்கக்கூடிய தந்தைக்குச் சமமான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பரமாத்மாவின் வில் பவர் (மனோபலம்) மூலமாக தனக்கு மற்றும் சேவையில் சுலபமாக பிராப்தி செய்யக்கூடிய பொறுப்பில் இருக்கும் சேலாதாரி குழந்தைகளுக்கு, எப்பொழுதும் தந்தையை இணைந்த ரூபத்தில் அனுபவம் செய்யக்கூடிய, எப்பொழுதும் துணையை வைத்துக் கொண்டிருக்கும் துணைவர்களாக இருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: தன்னில் அனைத்து சக்திகளையும் வெளிப்படும் ரூபத்தில் அனுபவம் செய்யக்கூடிய அனைத்து சித்தி சொரூபமானவர் ஆகுக!

உலகத்தில் யாரிடமாவது ஏதாவது ஒரு விஷயத்தின் சக்தி இருக்கிறது, பணத்தின், புத்தியின், உறவு நெருக்கத்தின் சக்தி இருக்கிறது என்றால்

இது என்ன பெரிய விஷயம் என்று அவருக்கு நிச்சயம் இருக்கும். அவர் சக்தியின் ஆதாரத்தில் சித்தியை அடைந்து விடுகிறார். உங்களிடமோ அனைத்து சக்திகளும் இருக்கின்றன, அழியாத செல்வத்தின் சக்தி எப்பொழுதும் உடன் இருக்கிறது. புத்தியின் சக்தி இருக்கிறது என்றால், பதவியின் சக்தியும் இருக்கிறது. உங்களிடம் அனைத்து சக்திகளும் இருக்கின்றன. இவற்றை வெளிப்படும் ரூபத்தில் அனுபவம் மட்டும் செய்தீர்கள் என்றால் தேவையான நேரத்தில் விதி மூலம் சித்தியை அடைந்து சித்தி சொரூபம் ஆகி விடுவீர்கள்.

சுலோகன்: மனதை பிரபுவின் அடமான சொத்து என்று புரிந்து அதை உயர்ந்த காரியத்தில் ஈடுபடுத்துங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

## 24.02.1998 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தந்தை மீது, சேவை மீது மற்றும் ஈஸ்வரிய குடும்பத்தின் மீது அன்பு வைத்தீர்கள் என்றால், கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள்! (சிவ ஜெயந்தி)

இன்று நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகள் தங்களுடைய தந்தையின் ஜெயந்தியைக் கொண்டாடுவதற்காக வந்திருக்கிறார்கள். நேரெதிரில் அமர்ந்திருந்தாலும், ஒளி வடிவமாக சூட்சும ரூபத்தில் (ஆகார ரூபம்) தந்தையின் எதிரில் இருந்தாலும் தந்தை அனைத்து குழந்தைகளையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒரு பக்கம் சந்தித்துக் கொண்டிருப்பதின் குஷி இருக்கிறது, இன்னொரு பக்கம் மிக விரைவிலேயே பாப்தாதாவை பிரத்யக்ஷம் செய்ய வேண்டும் என்று சேவையின் ஊக்கம் உற்சாகம் இருக்கிறது. பாப்தாதா நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளைப் பார்த்து பலகோடி மடங்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். எப்படி குழந்தைகள் தந்தையின் ஜெயந்தியை கொண்டாடுவதற்காக பல மூலைகளிலிருந்து, தொலைதூரத்திலிருந்து வந்திருக்கிறார்களோ, அதே போல் பாப்தாதாவும் குழந்தைகளின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக வந்திருக்கிறார், அனைத்தையும் விட தூர தேசத்தைச் சேர்ந்தவர் யார்? தந்தையா அல்லது நீங்களா? நாங்கள் வெகு தொலைதூரத்திலிருந்து வந்திருக்கிறோம் என்று நீங்கள் கூறுவீர்கள் ஆனால் நான் உங்களையும் விட தூர தேசத்திலிருந்து வந்திருக்கிறேன் என்று தந்தை கூறுகிறார் ஆனால் உங்களுக்கு நேரம் எடுக்கிறது, தந்தைக்கோ வருவதற்கு நேரம் எடுப்பதில்லை. நீங்கள் அனைவரும் விமானம் அல்லது ரயிலில் எடுத்து வர வேண்டியதாக இருக்கிறது, தந்தைக்கு ரதத்தில் (குல்ஸார் தாதி) வர வேண்டியதாக இருக்கிறது. நீங்கள் மட்டும் தந்தையின் பிறந்த நாளை கொண்டாட

வந்திருக்கிறீர்கள் என்று அப்படி இல்லை ஆனால் தந்தையும் ஆகி முதல் கூடவே துணையாக விளங்கும் பிராமண ஆத்மாக்கள், தற்போது பிறந்து துணைவர்களாக இருக்கும் குழந்தைகளின் பிறந்த நாளைக் கொண்டாட வந்திருக்கிறார். ஏனென்றால் தந்தை தனியாக அவதரிப்பதில்லை ஆனால் பிரம்மா மற்றும் பிராமண குழந்தைகளுடன் தெய்வீக ஜென்மம் எடுக்கிறார் அதாவது அவதரிக்கிறார். பிராமணர்களின்றி யக்ஞத்தைத் தனியாக தந்தை படைக்க முடியாது. அப்படி யக்ஞத்தைப் படைத்தார், பிரம்மா மூலமாக பிராமணர்களைப் படைத்தார். அப்பொழுது தான் நீங்கள் அனைவரும் பிறந்தீர்கள். இரண்டு வருடங்கள் நிரம்பியவர்களானாலும், இரண்டு மாதங்கள் நிரம்பியவர்களானாலும் சரி உங்கள் அனைவருக்கும் தெய்வீக பிராமண பிறவி எடுத்ததற்கான வாழ்த்துக்கள்! இந்த தெய்வீக ஜென்மம் எவ்வளவு உயர்ந்தது. தந்தையும் ஒவ்வொரு தெய்வீக ஜென்மம் எடுத்த பிராமண ஆத்மாக்களின் பாக்கிய நட்சத்திரம் மின்னிக் கொண்டிருப்பதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். மேலும் "ஆஹா வைரத்திற்குச் சமமான வாழ்க்கையுள்ள பிராமணக் குழந்தைகளே ஆஹா' என்ற இந்தப் பாடலைத் தான் எப்பொழுதும் பாடிக் கொண்டே இருக்கிறார். ஆஹா ஆஹா! என்ற பாராட்டுக்குரியவர்கள் தான் இல்லையா? தந்தை பாராட்டுக்குரிய குழந்தைகளாக ஆக்கி விட்டார். தந்தையினுடைய இந்த ஆண்மீகப் பிறவியும் விசித்திரமானதாக இருக்கிறது என்றால், குழந்தைகள் உங்களுடையதும் விசித்திரமானதாக மற்றும் அன்பானதாக இருக்கிறது. தந்தை இவர் ஒருவருக்குத் தான் இந்த மாதிரியான ஜென்மம் மற்றும் ஜெயந்தி இருக்கிறது. வேறு யாருக்குமே இந்த மாதிரியான பிறந்த நாள் இருக்கவில்லை, மேலும் இருக்காது. உடலற்றவர் மேலும் தெய்லிக ஜென்மம். மற்ற அனைத்து ஆத்மாக்களின் ஜென்மம் அவரவர்களின் பௌதீக உடலில் ஏற்படுகிறது ஆனால் நிராகார தந்தையின் ஜென்மம் இன்னொருவரின் உடலில் பிரவேசத்தினால் ஏற்படுகிறது. முழுக் கல்பத்தில் அந்த மாதிரி இந்த முறையில் யாருக்காவது ஜென்மம் ஏற்பட்டிருக்கிறதா? ஒரே ஒரு தந்தைக்குத் தான் அந்த மாதிரி வேறுபட்ட பிறந்த நாள் இருக்கிறது. அதைத் தான் சிவஜெயந்தியாக பக்தர்களும் கொண்டாடி வருகிறார்கள். எனவே இந்த தெய்வீக ஜென்மத்தின் மகத்துவத்தை நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள், பக்தர்கள் கூட தெரிந்திருக்கவில்லை, ஆனால் என்ன

கேள்விப்பட்டிருக்கிறார்களோ அதன் பிரகாரம் உயர்ந்ததிலும் உயர்ந்தவர் என்று நினைத்து கொண்டாடிக் கொண்டே வருகிறார்கள். நீங்கள் குழந்தைகள் கொண்டாடுவது மட்டுமில்லை, ஆனால் கொண்டாடுவதன் கூடவே தன்னை தந்தைக்குச் சமமாக ஆக்கவும் செய்கிறீர்கள். ஆன்மீக, தெய்வீக ஜென்மத்தின் மகத்துவத்தைத் தெரிந்திருக்கிறீர்கள். மேலும் வேறு எந்த தந்தையின் பிறந்த நாளும் குழந்தைகளின் பிறந்த நாளோடு சேர்ந்தே இருப்பதில்லை ஆனால் சிவஜெயந்தி என்றால் தந்தையின் தெய்வீக ஜென்மத்தின் கூடவே குழந்தைகளின் ஜென்மமும் தான்| எனவே வைர விழா கொண்டாடினீர்கள் இல்லையா? அப்படி தந்தையுடன் சேர்த்து குழந்தைகளுக்கும் தெய்வீக ஜென்மம் ஆகும். இந்த ஜெயந்தியை மட்டும் தான் வைரத்திற்குச் சமமான ஜெயந்தி என்று கூறுகிறீர்கள் ஆனால் வைரத்திற்கு சமமான ஜெயந்தியைக் கொண்டாடி, நீங்களும் வைரத்திற்குச் சமமான வாழ்க்கையில் வந்து விடுகிறீர்கள். இந்த இரகசியத்தை அனைத்து குழந்தைகளும் நல்ல முறையில் தெரிந்தும் இருக்கிறீர்கள், மேலும் மற்றவர்களுக்கும் சொல்லிக் கொண்டும் இருக்கிறீர்கள். குழந்தைகள் தந்தையின் தெய்வீக ஜென்மத்தின் மகத்துவத்தை எவ்வளவு ஊக்கம் உற்சாகத்தோடு கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று பாப்தாதா செய்தியும் கேட்டுக் கொண்டிருக்கிறார், மேலும் பார்க்கவும் செய்கிறார். பாப்தாதா நாலாபுறங்களிலுமுள்ள சேவாதாரி குழந்தைகளின் தைரியத்திற்குப் பிரதிபலனாக உதவியும் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். குழந்தைகளின் தைரியம் இருக்கிறது மற்றும் தந்தையின் உதவி அங்கே இருக்கிறது.

தற்சமயம் பாப்தாதாவிடம் அனைத்து குழந்தைகளிடமிருந்தும் ஒரே ஒரு அன்பு நிறைந்த எண்ணமாக இப்பொழுது தந்தைக்குச் சமமாக மிக விரைவிலேயே ஆகியே தீர வேண்டும் என்பது தான் அடிக்கடி வருவது யாதெனில், தந்தையும் இனிமையான குழந்தைகளே ஆகத் தான் வேண்டும் என்று கூறுகிறார். ஒவ்வொருவருக்கும் நான் ஆகவில்லை என்றால் வேறு யார் ஆவார் என்ற திட நிச்சயமும் இருக்கிறது, மேலும் இதை அடிக்கோடிட்டு மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். நாம் தான் இருந்தோம், நாம் தான் இருக்கிறோம். மேலும் நாமே தான் ஒவ்வொரு கல்பத்திலும் ஆகிக் கொண்டே இருப்போம். இது உறுதியான

நிச்சயம் தான் இல்லையா? வெளிநாட்டுக் குழந்தைகளும் சிவஜெயந்தி கொண்டாட வந்திருக்கிறார்களா? நல்லது. வெளிநாட்டுக் குழந்தைகள் கையை உயர்த்துங்கள். வெளிநாட்டு குழந்தைகளுக்கு உலகின் எந்த மூலையும் செய்தி தெரியாமல் இருந்து விடக்கூடாது என்ற மிக அதிகமாக ஊக்கம் உற்சாகம் இருக்கிறது என்று பாப்தாதா பார்க்கிறார். பாரதத்திற்கு அதிகமான காலம் சேவைக்காக கிடைத்திருக்கிறது. பாரதத்திலும் கிராமம் கிராமமாக செய்தியைக் கொடுத்திருக்கிறார்கள் ஆனால் வெளிநாட்டினருக்கு பாரதத்தை விட சேவைக்கான காலம் குறைவாக கிடைத்திருக்கிறது. இருந்தும் ஊக்கம் உற்சாகத்தின் காரணமாக பாப்தாதாவின் எதிரில் சேவை செய்ததின் நல்ல சான்றுகளை கொண்டு வந்திருக்கிறார்கள். மேலும் கொண்டு வந்து கொண்டே இருப்பார்கள். பாரதத்தில் தற்சமயம் அனைத்து துறைகளின் சேவைகள் ஆரம்பமாகியிருக்கிறது. அதன் காரணமாகவும் அனைத்து வர்க்கத்தினருக்கும் செய்தி கிடைப்பது சுலபமாகி விட்டது. ஏனென்றால் ஒவ்வொரு துறையினரும் அவர்களின் துறையில் முன்னேறிச் செல்ல விரும்புகிறார்கள் என்றால், இந்த துறைகளுக்கான சேவை நல்ல கண்டுபிடிப்பு ஆகும். இதன் காரணமாக பாரதத்தின் சேவையில் விசேஷ ஆத்மாக்கள் வந்து நல்ல ஒரு சூழ்நிலை உருவாகி விடுகிறது. நன்றாக இருக்கிறது தான் இல்லையா? துறைகளுக்கான சேவை செய்வது பிடித்திருக்கிறதா? வெளிநாட்டினரும் தங்களுடைய நல்ல நல்ல குழுக்களை அழைத்து வருகிறார்கள். ரிட்ரீட் (சிறப்பு பயிற்சி) செய்விக்கிறார்கள். இந்த முறையும் நன்றாக வைத்திருக்கிறார்கள். எப்படி பாரதத்தில் துறைகளுக்கான சேவையில் நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறதோ அதே போல் இவர்களுடைய இந்த விதியும் மிக நல்லதாக இருக்கிறது. பாப்தாதாவிற்கு இரண்டு பக்கங்களின் சேவையும் பிடித்திருக்கிறது. நன்றாக இருக்கிறது. ஜகதீஷ் குழந்தை இந்த நல்ல கண்டுபிடிப்பை செய்தார். மேலும் வெளிநாட்டில் இந்த ரிட்ரீட், டையலாக் யார் தொடங்கியது? அனைவரும் ஒன்றாக சேர்ந்து செய்தோம்). பாரதத்திலும் கூட அனைவரும் சேர்ந்து தான் செய்தார்கள் இருந்தும் பொறுப்பானவர் உருவானார் இல்லையா? நல்லது. ஒவ்வொருவருக்கும் தன்னைப் போன்றவர்களின் குழுவில் மிகவும் நன்றாக அனுபவம் ஆகிறது. அப்படி இரண்டு பக்கங்களின் சேவை மூலம் அனேக ஆத்மாக்களை அருகில் கொண்டு வருவதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. ரிசல்ட் நன்றாக இருக்கிறது தான் இல்லையா?

ரிட்ரீட்டின் ரிசல்ட் நன்றாக இருக்கிறதா? மேலும் துறைகளுக்கான சேவையின் ரிசல்ட்டும் நன்றாக இருக்கிறது. பாரதம் மற்றும் வெளிநாட்டினர் இருவரும் ஏதாவது புதிய கண்டுபிடிப்பை செய்து கொண்டே இருக்கிறார்கள், மேலும் செய்து கொண்டே இருப்பார்கள். பாரதத்திலும் வெளிநாட்டிலும் சேவைக்கான ஊக்கம் நன்றாக இருக்கிறது. யார் உண்மையான உள்ளத்தோடு சுயநலமற்ற சேவையில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்களோ அவர்களுடைய கணக்கில் புண்ணிய கணக்கு மிக நன்றாக சேமிப்பு ஆகி விடுகிறது என்று பாப்தாதா பார்க்கிறார். அனேக குழந்தைகளுக்கு ஒன்று, தன்னுடைய முயற்சியின் பிராப்தியின் கணக்கு, இரண்டாவது திருப்தியாக இருந்து திருப்திபடுத்துவதினால் ஆசிர்வாதங்களின் கணக்கு, மேலும் மூன்றாவது, யதார்த்த யோக சொரூப, யுக்தி நிறைந்த சேவையின் பலனாக புண்ணிய கணக்கு சேமிப்பு ஆகிறது. ஒவ்வொருவரின் இந்த மூன்று கணக்குகளையும் பாப்தாதா பார்த்துக் கொண்டே இருக்கிறார். ஒருவேளை யாருக்காவது மூன்று கணக்குகளின் சேமிப்பு ஆகிறது என்றால் அதற்கான அடையாளம் அவர் எப்பொழுதும் தன்னை சுலபமாக முயற்சி செய்பவர் என்று அனுபவ செய்வார். மேலும் மற்றவர்களுக்கும் அந்த ஆத்மா மூலமாக சுலபமாக முயற்சி செய்வதற்கான தூண்டுதல் இயல்பாகவே கிடைக்கிறது. அவர் சுலபமாக முயற்சி செய்வதற்கான அடையாளம் கடுமையாக உழைக்க வேண்டியிருப்பதில்லை. தந்தை மீதும், சேவை மீதும் மற்றும் அனைத்து ஈஸ்வரிய குடும்பத்தின் மீதும் அன்பு இருக்கிறது என்றால், இந்த மூன்று விதமான அன்பு கடின உழைப்பிலிருந்து விடுவித்து விடுகிறது. அனைத்து குழந்தைகளும் சுலபமாக முயற்சி செய்பவர்களாக எப்பொழுதும் இருக்கட்டும் என்று தான் அனைத்து குழந்தைகளின் மீது பாப்தாதா உயர்ந்த நம்பிக்கை வைத்துள்ளார். 63-ஜென்மங்கள் பக்தியில் குழப்பத்தில் அங்கிங்கு அலைவதின் கடின காரியம் செய்தீர்கள், இப்பொழுது இந்த ஒரு ஜென்மம் தான் கடின உழைப்பிலிருந்து விடுபடுவதற்கானது. ஒருவேளை வெகுகாலமாக கடினமாக உழைத்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால் இந்த சங்கமயுகத்தின் வரதானமான அன்பு மூலமாக சுலபமாக முயற்சி செய்பவர்கள் ஆகுங்கள் என்பதை எப்பொழுது பெறுவீர்கள்? யுகம் முடித்து விட்டது என்றால் வரதானமும் முடிந்து விடும். எனவே எப்பொழுதும் இந்த வரதானத்தை மிக விரைவிலேயே பெற்றுக்

கொள்ளுங்கள். எந்தவொரு மிகப் பெரிய காரியமாக இருந்தாலும், எந்தவொரு மிகப் பெரிய பிரச்சனையாக இருந்தாலும் ஒவ்வொரு பிரச்சனையையும் மக்கள் கூறுவது போல் வெண்ணையிலிருந்து முடியை வெளியே எடுப்பது போல் கடந்து சென்று விடுவீர்கள். சில குழந்தைகளின் கொஞ்சம் கொஞ்சம் விளையாட்டை பாப்தாதா பார்க்கிறார். மகிழ்ச்சியும் அடைகிறார் மேலும் குழந்தைகளைப் பார்த்து இரக்கமும் வருகிறது. எப்பொழுது ஏதாவது பிரச்சனை அல்லது ஏதாவது ஒரு பெரிய காரியம் எதிரில் வருகிறது என்றால், சில நேரம் குழந்தைகளின் முகத்தில் கொஞ்சம் பிரச்சனையின் மற்றும் செய்ய வேண்டிய காரியத்தின் உணர்வலைகள் தென்படுகின்றன. கொஞ்சம் முகம் மாறிவிடுகிறது. பிறகு வேறு யாராவது என்னவாயிற்று என்று கேட்கிறார்கள் என்றால், வேலையே அதிகமாக இருக்கிறது தான் இல்லையா என்று கூறுகிறார்கள். தடைகளை அழிப்பவரின் எதிரில் தடைகளே வரவில்லை என்றால் தடைகளை அழிப்பவர் என்ற பட்டத்திற்குரியவர் என்று எப்படி வர்ணனை செய்ய முடியும்? கொஞ்சம் முகத்தில் களைப்போ அல்லது கொஞ்சம் கூட மனநிலை மாறுவதற்கான அடையாளமும் வரக்கூடாது. ஏன்? உங்களுடைய ஜட விக்கிரகங்கள் எவை அரைக்கல்பமாக பூஜை செய்யப்படுகின்றனவோ அவற்றில் எப்பொழுதாவது கொஞ்சமாவது களைப்பு அல்லது மனநிலை மாறுவதற்கான சின்னம் தென்படுகிறதா என்ன? எப்பொழுது உங்களுடைய ஜட விக்கிரகங்கள் எப்பொழுதுமே புன்முறுவலிட்டுக் கொண்டே இருக்கிறது என்றால் அவை யாருடைய விக்கிரகங்கள்? உங்களுடையவை தான் இல்லையா? அப்படி சைத்தன்யமாக இருக்கும் உங்களுடைய நினைவு விக்கிரகங்கள் தான் அவை. எனவே கொஞ்சமாவது களைப்பு மற்றும் எதை சிடுசிடுப்பு என்று கூறுகிறோமோ. அது வரக்கூடாது. எப்பொழுதும் புன்முறுவலிட்ட முகம் பாப்தாதாவிற்கும் மற்றும் அனைவருக்கும் பிடித்தமானதாக இருக்கும். ஒருவேளை யாராவது சிடுசிடுத்துக் கொண்டிருக்கிறார் என்றால் அவரின் எதிரில் செல்வார்களா? இப்பொழுது சொல்லலாமா அல்லது சொல்ல வேண்டாமா என்று யோசிப்பார்கள். அப்படி உங்களுடைய ஜட விக்கிரகங்களிடமோ பக்தர்கள் மிகுந்த ஊக்கத்தோடு வருகிறார்கள் மேலும் சைத்தன்யத்தில் யாராவது சுமை நிறைந்தவராக ஆகி விட்டார் என்றால், நன்றாக இருக்குமா? இப்பொழுது பாப்தாதா அனைத்து குழந்தைகளின் முகத்தை எப்பொழுதும் ஃபரிஷ்தா ரூபம்,

வரதானி ரூபம், வள்ளல் ரூபம், இரக்க மனமுடைய, களைப்பற்ற. சகஜயோகி மற்றும் சகஜ முயற்சியாளரின் ரூபத்தில் பார்க்க விரும்புகிறார். விஷயமே அப்படித்தான் இருந்தது என்று இதைக் கூறாதீர்கள். எப்படிப்பட்ட விஷயமாக இருந்தாலும் உங்களுடைய ரூபம் புன்முறுவலிட்ட, சீதளமான, கம்பீரம் மற்றும் இரமணீகரம் இரண்டிற்கும் சமநிலையானதாக இருக்கட்டும், யாராவது திடீரென்று வந்து விட்டார் என்றால் உங்களுடைய பிரச்சனையின் காரணமாக அல்லது காரியத்தின் காரணமாக சுலபமாக முயற்சி செய்பவரின் ரூபத்தில் நீங்கள் இல்லை என்றால், அவர் என்ன பார்ப்பார்? உங்களுடைய சித்திரத்தை அப்படியே மனதில் எடுத்துச் செல்வார். எந்தவொரு நேரம் யாருக்கும், எவருக்கும் ஒரு மாதமானதாக இருந்தாலும், இரண்டு மாதமானதாக இருந்தாலும் திடீரென்று உங்களுடைய முகத்தை புகைப்படம் பிடித்தார் என்றால் மேலே கூறிய முகம் மாதிரியே இருக்க வேண்டும். வள்ளலாகுங்கள், பெறுபடிர்கள் ஆகாதீர்கள். யார் என்ன கொடுத்தாலும், நல்லதைக் கொடுத்தாலும் அல்லது தீயதைக் கொடுத்தாலும் ஆனால் நீங்கள் மிகப் பெரிய தந்தையின் குழந்தைகள் மிகப் பெரிய இதயம் உள்ளவர்கள். ஒருவேளை தீயதையும் கொடுத்து விட்டார் என்றாலும் கூட பரந்த உள்ளத்தோடு தீயதை தனக்குள் ஏற்றுக் கொள்ளாமல் வள்ளலாகி நீங்கள் அவருக்கு சகயோகம் கொடுங்கள், அன்பு கொடுங்கள், சக்தி கொடுங்கள். ஏதாவது குணத்தை தன்னுடைய உயர்ந்த நிலை மூலமாக பரிசாகக் கொடுத்து விடுங்கள். இவ்வளவு பெரிய இதயம் உள்ள மிகப் பெரிய தந்தையின் குழந்தைகள் நீங்கள் இரக்கம் காட்டுங்கள். இதயத்தில் அந்த ஆத்மாவிற்காக இன்னும் அதிகப்படியான அன்பை வெளிப்படுத்துங்கள். இந்த அன்பின் சக்தியின் காரணமாக அவர் சுயம் (பரிவர்த்தனை) மாறி விட வேண்டும். அந்த மாதிரி பெரிய இதயம் உள்ளவரா நீங்கள் அல்லது சின்ன இதயம் தான் இருக்கிறதா? உள்ளடக்கும் சக்தி இருக்கிறதா? உள்ளடக்கி விடுங்கள். கடலில் எவ்வளவு குப்பைகளைப் போடுகிறார்கள். அம்மாதிரி போடுபவர்களுக்கும் அந்த குப்பைக்குப் பதிலாக கடல் குப்பையைக் கொடுப்பதில்லை. நீங்களோ ஞானக்கடல் சக்திகளின் கடலின் குழந்தைகள் ஆவீர்கள். மாஸ்டர் ஆவீர்கள். அப்படி பாப்தாதா என்ன பார்க்க விரும்புகிறார் என்று கேட்டீர்களா? பெரும்பான்மையான குழந்தைகள் இந்த வருடத்தில் பரிவர்த்தனை கண்டிப்பாக செய்ய

வேண்டும் என்ற லட்சியத்தை வைத்திருகிறார்கள். யோசிக்கலாம். செய்யலாம் என்று அப்படி இல்லாமல் கண்டிப்பாக செய்யத் தான் வேண்டும். கண்டிப்பாக செய்யத் தான் வேண்டுமா அல்லது அங்கே சென்று யோசிப்பீர்களா? யார் கண்டிப்பாக செய்யத் தான் வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அவர்கள் ஒரு கையின் கைத்தட்டுங்கள் (அனைவரும் கை அசைத்தார்கள்). மிகவும் நல்லது. பிறகு இந்தக் கையை உயர்த்தாதீர்கள், மனதால் திட எண்ணம் என்ற கையை உயர்த்துங்கள். இந்தக் கையோ சுலபமானது மனதால் திட எண்ணத்தின் கை எப்பொழுதும் வெற்றி சொருபம் ஆக்குகிறது. என்ன நினைத்தீர்களோ அது கண்டிப்பாக நடக்கத் தான் வேண்டும். நினைத்தது என்னவோ நேர்மறை தான் இல்லையா. எதிர்மறையாக யோசிக்கவே கூடாது. எதிர்மறையாக யோசிப்பதற்கான வழியை நிரந்தரமாக மூடிவிட வேண்டும். மூடத் தெரியுமா அல்லது திறந்து விடுகிறதா? எப்படி இப்பொழுது புயல் அடித்தது இல்லையா?. அப்பொழுது கதவுகள் தானாகவே திறந்து விட்டன, அவ்வாறு நடப்பதில்லையே! இப்பொழுது மூடிவிட்டு வந்து விட்டோம் என்று நினைக்கிறீர்கள், ஆனால் புயல் திறந்து விடுகிறது என்று அந்த மாதிரி உறுதியில்லாமல் செய்யாதீர்கள். நல்லது.

இரட்டை வெளிநாட்டினருக்கு விழா நன்றாக நடந்தது தான் இல்லையா (10-வருடங்களுக்கும் மேலாக ஞானத்தில் இருக்கும் சுமார் 400-இரட்டை வெளிநாட்டு சகோதர சகோதரிகளை கௌரவிக்கும் விழா கொண்டாடினார்கள்) பிடித்திருந்ததா? யார் கொண்டாடினீர்களோ மற்றும் பீடித்திருந்ததோ அவர்கள் கையை உயர்த்துங்கள். பாண்டவர்களும் இருக்கிறார்கள். இதனுடைய மகத்துவம் என்ன? கொண்டாடுவதற்கான மகத்துவம் என்ன? கொண்டாடுவது என்றால். அப்படியே ஆகி விடுவது. எப்பொழுதும் அந்த மாதிரி கிரீடம் அணிந்த, சுயமுயற்சி மற்றும் சேவையின் பொறுப்பு என்று சொல்லலாமா? மகிழ்ச்சியே என்று தான் சொல்வோம், சேவையின் மகிழ்ச்சியைக் கொண்டாடும் கிரீடம் எப்பொழுதுமே தலையில் இருக்கட்டும். மேலும் அனைவரும் பொன்னாடையும் அணிந்தீர்கள் தான் இல்லையா? இந்த பொன்னாடை எதற்காக அணிவிக்கப்படுகிறது? எப்பொழுதும் பொற்காலத்து நிலை, வெள்ளியல்ல பொற்காலம். மேலும் இரண்டு இரண்டு மாலைகளும் அணிவித்தார்கள். அப்படி இரண்டு மாலைகள்

எதை அணிவீர்கள்? ஒன்றோ எப்பொழுதும் தந்தையின் கழுத்தின் மாலை. நிரந்தரமாக ஒருபொழுதும் கழுத்திலிருந்து விழக்கூடாது. கழுத்திலேயே இருக்க வேண்டும். மேலும் இன்னொன்று எப்பொழுதும் சேவை மூலமாக மற்றவர்களையும் தந்தையின் கழுத்தின் மாலை ஆக்குவது. இது இரட்டை மாலை ஆகும். கொண்டாடுபவர்களுக்கும் மற்றும் பார்ப்பவர்களுக்கும் மிக நன்றாக அனுபவம் ஆனது. அப்படி இந்த விழாவைக் கொண்டாடுவதற்கும், நிரந்தரமாக கொண்டாடுவதின் இரகசியத்தையும் கூறினோம். மேலும் கூடவே இந்த கொண்டாடுவது என்றால் இன்னும் ஊக்கம் உற்சாகத்தை அதிகரிப்பது. அனைவரின் அனுபவத்தையும் பாப்தாதா பார்த்து விட்டார். நல்ல அனுபவமாக இருந்தது. குஷி மற்றும் போதை அனைவரின் முகத்தில் தென்பட்டுக் கொண்டிருந்தது. அந்த மாதிரியே தன்னுடைய சக்திசாலியான புன்முறுவலிட்ட, இரமணீகரமான மற்றும் கம்பீர சொரூபத்தை எப்பொழுதும் வெளிப்படுத்திக் கொண்டே செல்லுங்கள். ஏனென்றால் தற்சமயத்து நிலைமைக்கேற்றபடி கேட்பவர்கள் அதிகமானவர்கள், புரிந்து கொள்பவர்கள் குறைவாக இருக்கிறார்கள். பார்த்து அனுபவம் செய்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். உங்களுடைய முகத்தில் தந்தையின் அறிமுகத்தை கூறுவதற்குப் பதிலாக, தென்படட்டும். அப்படி நன்றாகச் செய்தீர்கள். பாப்தாதாவும் பார்த்து பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருந்தார். இந்த வருடத்தை மற்றும் இந்த சீசனை உற்சவங்களின் சீசனாகக் கொண்டாடினீர்கள். ஒவ்வொரு நேரமும் ஒரே மாதிரி இருப்பதில்லை.

(டிரில்) அனைவரிலும் ஆளுமை சக்தி இருக்கிறதா? எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது கர்ம இந்திரியங்கள் மேல் ஆட்சி செய்ய முடியுமா? சுயராஜ்ய அதிகாரியாக ஆகியிருக்கிறீர்களா? யார் சுயராஜ்ய அதிகாரியோ அவர் தான் உலகின் இராஜ்ய அதிகாரியாக ஆவார். எப்பொழுது விரும்புகிறீர்களோ, எப்படிப்பட்ட சூழலில் இருந்தாலும், ஒருவேளை 'நில்' என்று மனம் புத்திக்கு கட்டளை இட்டீர்கள் என்றால், அவ்வாறு நிற்க முடியுமா அல்லது நேரம் எடுக்குமா? ஒவ்வொருவரும் இந்தப் பயிற்சியை முழு நாளில் இடையிடையே அவசியம் செய்ய வேண்டும். மேலும் எந்த நேரம் மனம், புத்தி மிகவும் பிஸியாக இருக்கிறதோ அந்த நேரத்திலும் கூட ஒருவேளை ஒரு நொடிக்காக நிறுத்த விரும்புகிறீர்கள் என்றால், அப்படி

முடியுமா? அப்படி நில்! என்று நினையுங்கள் மற்றும் நிற்பதில் மூன்று நிமிடம், ஐந்து நிமிடம் எடுக்கலாம். ஆக இந்தப் பயிற்சி இறுதியில் மிக உதவியாக இருக்கும். இதன் ஆதாரத்தில் தான் மதிப்புடன் தேர்ச்சி பெறுபவர் ஆக முடியும். நல்லது.

எப்பொழுதும் உள்ளத்தின் ஊக்கம் உற்சாகத்தின் விழாவைக் கொண்டாடக்கூடிய அன்பான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் வைரத்திற்குச் சமமான வாழ்க்கையை அனுபவம் செய்யக்கூடிய, அனுபவத்தின் அதிகாரம் நிறைந்த விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னுடைய முகம் மூலமாக தந்தையின் அறிமுகத்தை கொடுக்கக்கூடிய, தந்தையை பிரத்யக்ஷம் செய்யக்கூடிய, சேவாதாரி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் கம்பீரம் மற்றும் இரமணீகரம் இரண்டின் சமநிலை வைக்கக்கூடிய, அனைவரின் ஆசீர்வாதங்களுக்கு உரிய ஆத்மாக் களுக்கு, அந்த மாதிரி நாலாபுறங்களிலுமுள்ள பாரதம் மற்றும் வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு சிவராத்திரிக்கான வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள் உரித்தாகுக! கூடவே பாப்தாதாவின், திலாராமின் உள்ளப்பூர்வமான உயிருக்கும் மேலான அன்பு நிறைந்த அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பாப்தாதா டைமன்ட் ஹாலின் விசாலமான மேடை மீது நின்று கொண்டு தனது திருக்கரங்களால் கொடி ஏற்றி, அசைத்து, எல்லாக் குழந்தைகளுக்கும் சிவ ஜெயந்தி வாழ்த்துக்களை அளித்தார்! தந்தையின் கொடியை அன்புடன் அசைத்த அனைவருக்கும் வாழ்த்துகள் பல! அனைவரது உள்ளத்திலும் தந்தையின் கொடி அசைந்து கொண்டிருப்பதை பாப்தாதா பார்க்கின்றார். ஒவ்வொருவரின் இதயத்திலும் தந்தை இருக்கிறார் மற்றும் ஒவ்வொரு குழந்தையின் இதயத்திலும் தந்தை இருக்கிறார். உங்களிடம் எங்கே வசிக்கிறீர்கள் என்று யாராவது கேட்டால் என்ன சொல்வீர்கள்? இறைவனின் இதயத்தில் வசிப்பவன் என. நீங்கள் அனைவரும் தந்தையின் இதயத்தில் வாழ்பவர்கள், அவர்களின் இதயத்தில் என்ன இருக்கிறது? தந்தையுடைய பெயரின் கொடி! இதுவோ நினைவுச்சின்னக் கொடி ஆனால் தந்தையுடைய பெயரின் கொடி உலகில் வெகு விரைவில் ஏற்றப்படும். அந்த நாளும் வெகு தொலைவில் இல்லை. தெரியாத குழந்தைகளாக இருந்தாலும் சரி, தெரிந்த குழந்தைகளாக இருந்தாலும்

சரி, அனைவரும் தந்தையின் அறிமுகம் கிடைக்கத்தான் வேண்டும். மேலும் அனைவரின் வாயிலிருந்தும் வந்து விட்டார், தந்தை வந்து விட்டார் என்ற இந்த குரல் வெளி வர வேண்டும். அதற்காக அனைவரும் தயாராகி வருகின்றனர் மற்றும் நிச்சயமாக அது நடந்தேத் தீரும், நடந்தேத் தீரும், நடந்தேத் தீரும். ஓம் சாந்தி.

வரதானம்: ஒரு நொடியின் பந்தயப் பணயத்தின் மூலமாக முழுக் கல்பத்தின் எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய உயர்ந்த அதிர்ஷ்டம் நிறைந்தவர் ஆகுக!

இந்த சங்கமயுக காலத்திற்கு என்ன விரும்புகிறீர்களோ, எப்படி விரும்புகிறீர்களோ, எவ்வளவு விரும்புகிறீர்களோ அந்த அளவு பாக்கியத்தை உருவாக்க முடியும் என்ற வரதானம் கிடைத்திருக்கிறது. ஏனென்றால் பாக்கியத்தை உருவாக்கும் தந்தை எதிர்காலத்தை உருவாக்கும் சாவியை குழந்தைகளின் கையில் கொடுத்திருக்கிறார். கடைசியில் வந்தவரும் வேகமாக முதலில் வர முடியும். சேவையின் விஸ்தாரத்தில் கயத்தின் மனநிலையை மட்டும் ஒரு நொடியில் சார சொரூபத்தில் ஆக்குவதற்கான பயிற்சி செய்யுங்கள். இந்த நேரம் ஒரு நொடியில் மாஸ்டர் விதை ஆகி விடுங்கள் என்று கட்டளை கிடைத்தது என்றால், நேரம் எடுக்கக் கூடாது. இந்த ஒரு நொடியின் சவால் பணயம் முழுக் கல்பத்தின் எதிர்காலத்தை உருவாக்க முடியும்.

சுலோகன்: இரட்டை சேவை மூலமாக சக்திசாலியான வாயுமண்டலத்தை உருவாக்கினீர்கள் என்றால், இயற்கை அடிமையாகி விடும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 13.03.1998 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஹோலி (தூய்மை) என்ற வார்த்தையின் சொரூபத்தில் நிலைத்திருப்பது என்றால் தந்தைக்குச் சமமாக ஆவது!

இன்று பாப்தாதா நாலாபுறங்களிலும் உலகத்திலேயே மிகத் தூய்மையான, மிக உயர்ந்த, மிக செல்வந்தர் களான தன்னுடைய குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சாகாரத்தில் நேரெதிரில் இருந்தாலும், தூரத்தில் அமர்ந்திருந்து இதயத்தினால் நெருக்கமாக இருப்பவர்களானாலும் அப்படி நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டே இருக்கிறோம். ஒவ்வொரு குழந்தையும் அந்த மாதிரி மிகத் தூய்மையாக ஆகிறார்கள். அது போல் முழுக் கல்பத்திலும் வேறு யாரும் அந்த மாதிரி மகான் தூய்மையான ஆத்மாவாக ஆகவில்லை, ஆகவும் முடியாது. அவ்வப்பொழுது தர்ம ஆத்மாக்கள், மகான் ஆத்மாக்கள் தூய்மையாக இருந்திருக்கிறார்கள் ஆனால் அவர்களுடைய தூய்மை மற்றும் உங்களுடைய தூய்மையில் வேற்றுமை இருக்கிறது. இந்த நேரம் நீங்கள் தூய்மை ஆகிறீர்கள், இந்த தூய்மையின் பிராப்தியாகத் தான் எதிர்காலத்தில் அனேக ஜென்மங்கள் வரை உடல், மனம், பொருள், சம்மந்தம், தொடர்பு மேலும் கூடவே ஆத்மாவும் தூய்மையாக இருக்கிறது. உடலும் தூய்மையாக இருக்கிறது, ஆத்மாவும் தூய்மையாக இருக்கிறது. அந்த மாதிரியான தூய்மையை நீங்கள் ஆத்மாக்கள் பிராப்தி செய்கிறீர்கள். மனம், சொல், செயல் மூன்றுமே துய்மை ஆவதினால் அந்த மாதிரியான பலன் பிராப்தி ஆகிறது. அந்த மாதிரி மிகத்தூய்மையான ஆத்மாக்கள் நீங்கள். தன்னை அந்த மாதிரி உயர்ந்த மிகத்தூய்மையான ஆத்மா என்று நினைக்கிறீர்களா? இப்பொழுது ஆகி விட்டீர்களா அல்லது ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? ஆவது கலடமாக இருக்கிறதா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் கடினமாக இருக்கிறதா? ஆனால் சென்ற கல்பத்திலும் ஆகியிருக்கிறீர்கள் மேலும்

இப்பொழுதும் ஆகவே தான் வேண்டும். உறுதியாகவா? அல்லது கொஞ்சம், கொஞ்சம் எப்படி வேண்டுமென்றாலும் இருக்கலாமா? இல்லை கனவளவில் கூட தூய்மையின்மை முடிந்து விடவே தான் வேண்டும். இன்று ஆகிக் கொண்டிருக்கிறேன்... நாளை ஆகியே விடுவேன் என்ற இந்த அளவு நிச்சயம் இருக்கிறது தான் இல்லையா? அப்படி மிகத் தூய்மையான களாகவும் இருக்கிறீர்கள் மேலும் உயர்ந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.

உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் குழந்தைகள் உயர்ந்ததிலும் உயர்ந்தவர்கள் ஆவீர்கள். உயர்ந்தவர்களாக ஆகிறீர்கள், அதனால் தான் பூஜை செய்யப்படுகிறீர்கள். இன்றைய நாட்களின் உயர்ந்த ஆத்மாக்கள், விகாரி இராஜாக்கள் இருந்தார்கள், இப்பொழுதோ இல்லை. ஜனாதிபதியாக இருந்தாலும், பிரதம மந்திரியாக இருந்தாலும் அவர்கள் பூஜைக்குரியவர்களாக ஆவதில்லை. பூஜைக்குரியவராக ஆகும் ஆத்மாக்கள் உங்கள் எதிரில் பூஜாரியாகி வணங்குகிறார்கள் மற்றும் பூஜை செய்கிறார்கள். இப்பொழுதும் சுயராஜ்ய அதிகாரி ஆகிறீர்கள், மேலும் எதிர்காலத்திலும் இராஜாக்களுக்கெல்லாம் இராஜா ஆகிறீர்கள். அந்த மாதிரி மிக உயர்ந்த பதலியை பிராப்தி செய்கிறீர்கள். கூடவே உலகிலேயே மிகுந்த செல்வந்தனாகவும் இருக்கிறீர்கள். உங்களுடைய பட்டமே பல கோடி மடங்கு செல்வம் நிறைந்தவர் என்பது மேலும் உங்களிடம் அந்த மாதிரியான பொக்கிஷங்கள் இருக்கின்றன அதை பல கோடி மடங்கு கோடீஸ்வரர்களாக இருப்பவர்கள் கூட அந்த மாதிரியான பொக்கிஷத்தை அடைய முடியாது. உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுடைய பாக்கியத்தை தந்தை மூலமாக உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள் அதை எங்களுடைய ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு செல்வம் வருமானம் ஆகிறது என்று அனுபவமும் செய்கிறீர்கள், வர்ணனையும் செய்கிறீர்கள். ஒவ்வொரு அடியிலும் பல கோடி மடங்கா அல்லது நூறு தானா, ஆயிரம் தானா? அந்த மாதிரி ஏதாவது பெரிய மில்லியனர் (கோடீஸ்வரர்) கூட இந்த அளவு வருமானம் செய்ய முடியாது ஒரு அடி எடுத்து வைப்பதில் எவ்வளவு நேரம் எடுக்கும்? அடியெடுத்து வையுங்கள், எவ்வளவு நேரம் எடுக்கிறது? ஒரு விநாடிசரி இரண்டு விநாடி என்று கூட சொல்லுங்கள். ஒருவேளை இரண்டு விநாடி என்று சொன்னாலும் இரண்டு விநாடியில் பல மடங்கு என்றால் முழு நாளில் எத்தனை கோடியாகி விடும்?

கணக்கு போடுங்கள். உலகில் அந்த மாதிரி யாராவது ஒரு நாளில் இந்த அளவு வருமானம் செய்கிற மாதிரி மில்லியனர் இருக்கிறாரா? அந்த மாதிரி யாராவது இருப்பாரா? அப்படி நீங்கள் உலகத்திலேயே மிகுந்த செல்வந்தன் ஆனீர்கள் தான் இல்லையா? மேலும் உங்களிடம் அந்த மாதிரியான பொக்கிஷம் இருக்கிறது, அதை நெருப்பு எரிக்க முடியாது, தண்ணீர் மூழ்கடிக்க முடியாது, திருடன் திருடிச் செல்ல முடியாது, இராஜாவும் அபகரிக்க முடியாது. அந்த மாதிரியான பொக்கிஷத்தை இந்த புருஷோத்தம சங்கமயுகத்தில் தான் பிராப்தியாக அடைகிறீர்கள். அப்படியானால் தன்னுடைய அந்த மாதிரியான சுலமானம் நினைவில் இருக்கிறதா? ஆம் அல்லது இல்லை என்ற பதில் வேண்டும். பின்னால் அமர்ந்திருப்பவர்கள் கை அசைக்கிறார்கள். பின்னால் இருப்பவர்கள் சௌகரியமாக அமர்ந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? உலகிலேயே மிகப் பெரிய செல்வந்தன் என்றால் சௌகரியமே சௌகரியம் தான். மிகப் பெரிய பல்ககலைக்கழகத்தில் கூட அந்த மாதிரி நாற்காலியில் கல்வி கற்பதற்காக அமர்வதில்லை ஆனால் நீங்கள் பெக்கர் (ஒன்றும் இல்லாதவர்) ஆகவும் இருக்கிறீர்கள் மேலும் பிரின்ஸ் (இளவரசன்) ஆகவும் இருக்கிறீர்கள். அனைத்தையும் தியாகம் செய்வது என்றால் பெக்கர். அனைத்து பிராப்திகள் என்றால் பிரின்ஸ் (இளவரசன். தியாகமின்றி இவ்வளவு பெரிய பாக்கியம் கிடைக்காது, தியாகத்தினுடைய பாக்கியம் தான் கிடைத்திருக்கிறது. உடல், மனம், பொருள், சம்மந்தம் அனைத்தையும் தியாகம் செய்தீர்கள் என்றால் மாற்றம் செய்தீர்கள். உடலை என்னுடையது என்பதற்குப் பதிலாக உன்னுடையதாக ஆக்கினீர்கள். உடல், பொருள், சம்மந்தம் அனைத்திலும் ஒரு வார்த்தை மாறியதினால் என்னுடையது என்பதற்குப் பதிலாக உன்னுடையது என்று ஆக்கினீர்கள், ஒரு வார்த்தையின் மாற்றம் தான் ஆனால் இந்த தியாகத்தினால் பாக்கியத்தின் அதிகாரி ஆகி விட்டீர்கள். அப்படி பாக்கியத்தின் எதிரில் இந்த தியாகம் என்ன பெரியது? சின்ன விஷயமா அல்லது கொஞ்சம் பெரியதாகவும் இருக்கிறதா? சில நேரம் பெரியதாகி விடுகிறது. உன்னுடையது என்று கூறுவது என்றால் பெரிய விஷயத்தை சிறியதாக்குவது. மேலும் என்னுடையது என்று கூறுவதினால் சிறிய விஷயத்தை பெரியதாக்குவது. என்ன ஆனாலும் சரி, 100 இமய மலைகளை விட பெரிய பிரச்சனை வந்தாலும் உன்னுடையது என்று கூறுவது மற்றும் மலையை பஞ்சாக ஆக்குவது, கடுகு அல்ல பஞ்சு.

பஞ்சு ஒரு நொடியில் லேசாக பறந்து விடும். உன்னுடையது என்று சொல்வது மட்டும் அல்ல ஆனால் அப்படி ஏற்றுக் கொள்வது, ஏற்றுக்கொள்வது மட்டுமல்ல, ஆனால் அப்படியே நடப்பது. ஒரு வார்த்தைக்கான மாற்றம் செய்வது சுலபமே தான் இல்லையா? மேலும் செய்வதினால் லாபமே தான் நஷ்டமோ இல்லவே இல்லை. உன்னுடையது என்று கூறுவதினால் முழு சுமையையும் தந்தைக்குக் கொடுத்து விட்டீர்கள். உன்னுடையது அதனால் உனக்குத் தான் தெரியும். நீங்கள் நிமித்த மாத்திரம் மட்டும் இருக்கிறீர்கள். இதில் லாபம் இருக்கிறது தான் இல்லையா? விடுபட்டவராகவும் மற்றும் பரமாத்மாவின் அன்பான வராகவும் ஆகி விட்டீர்கள். யர் பரமாத்மாவின் அன்பானவர்களாக ஆகிறார்களோ அவர்கள் உலகின் அன்பானவர்கள் ஆகிறார்கள். எதிர்காலத்து பிராப்தி மட்டுமில்லை, தற்சமயத்திலும் இருக்கிறது. ஒரு நொடியில் அனுபவம் செய்தும் இருக்கிறீர்கள், மேலும் செய்து பாருங்கள். எந்தவொரு விஷயம் வந்து விட்டாலும் உன்னுடையது என்று கூறிவிடுங்கள். அப்படி ஏற்றுக்கொள்ளுங்கள் மேலும் உன்னுடையது என்று புரிந்து செய்தீர்கள் என்றால் சுமை லேசாகிறதா அல்லது இல்லையா? என்று பாருங்கள். அனுபவம் இருக்கிறது தான் இல்லையா? அனுபவம் நிறைந்தவர்கள் அனைவரும் அமர்ந்திருக்கிறீர்கள் இல்லையா? ஆனால் என்ன ஆகிறது, என்னுடையது என்னுடையது என்று கூறுவதில் மிகுந்த பழக்கம் இருக்கிறது தான் இல்லையா, 63-ஜென்மங்களின் பழக்கம் இருக்கிறது என்றால் உன்னுடையது உன்னுடையது என்று கூறி பிறகு என்னுடையது என்று கூறிவிடுகிறீர்கள் மேலும் என்னுடையது என்றால் கையை விட்டு} சென்று விட்டது. பிறகு அந்த விஷயம் ஒரு மணி நேரத்தில், இரண்டு மணி நேரத்தில், ஒரு நாளில் முடிவடைகிறது ஆனால் உன்னுடையதை என்னுடையது ஆக்கியதின் பாதிப்பு நீண்ட காலம் இருக்கும். அரை மணி நேரத்திற்கான விஷயமாக இருக்கும் ஆனால் வேதனைப்படும் ரூபத்திலோ, பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்ற லட்சியத்திலோ அந்த விஷயம் அடிக்கடி நினைவில் வந்து கொண்டிருக்கும். எனவே தந்தை அனைத்து குழந்தைகளுக்கும் கூறுகிறார். ஒருவேளை என்னுடைய என்ற வார்த்தை மேல் அன்பு இருக்கிறது. பழக்கம் இருக்கிறது, சம்ஸ்காரம் இருக்கிறது அதனால் சொல்லித்தான் ஆக வேண்டும் என்றால் என்னுடைய பாபா என்று கூறுங்கள். பழக்கத்தின் காரணமாக விடுபட முடியாமல் இருக்கிறீர்கள்

இல்லையா? எனவே எப்பொழுதெல்லாம் என்னுடையது, என்னுடையது வருகிறது என்றால் என்னுடைய பாபா என்று கூறி முடித்து விடுங்கள். அனேக என்னுடையவைகளை ஒரு என்னுடைய பாபாவில் அடக்கி விடுங்கள்,

ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள் ஒரு பொம்மை கொண்டு வருகிறார்கள் இல்லையா? அதில் பொம்மைக்குள் பொம்மை ஒரு பொம்மை ஆகி விடுகிறது. அதே போல் நீங்களும் ஒரு என்னுடைய பாபாவில் அனேக என்னுடையவற்றை நிரப்பி விடுங்கள், அவ்வளவு தான்... இதைச் செய்ய முடியுமா? செய்கிறீர்கள் ஆனால் சில நேரம் என்னுடையதின் விஸ்தாரத்தில் சென்று விடுகிறீர்கள். இப்பொழுது சில நேரம் இருக்கிறது. நிரந்தரமாக என்னுடையது உன்னுடையதாகி விட வேண்டும். அதில் வரிசைக்கிரமமாக இருக்கிறீர்கள். நம்பர் ஒன்னும் இருக்கிறது, ஏ ஒன்-ம் இருக்கிறது இருந்தாலும் பின்னுக்கு உள்ள நம்பரும் இருக்கிறது. ஹோலி கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அப்படி நான் தந்தையினுடையவனாக ஆகி விட்டேன் ஹோ வி! ஆகி விட்டேன். பரமாத்மா பரிவாரத்தின் ஹோ லி என்றால் ஹோ ஃபி (ஆகி விட்டேன்). அப்படியானால் அந்த மாதிரி ஹோலியை கொண்டாடினீர்களா? இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? இப்பொழுது எரிக்க வேண்டும் அல்லது எரித்து வீட்டீர்களா? இதில் ஆம் என்று சொல்வதில்லை, யோசிக்கிறீர்கள்.

பாருங்கள், பக்தி மார்க்கத்தில் என்னென்ன உற்சவங்கள் கொண்டாடுகிறார்களோ, அவை நினைவுச் சின்னங்கள் தான்! ஆனாலும் கொஞ்சம் கொஞ்சம் அர்த்தத்துடன் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. முதலில் எரிக்க வேண்டும் பிறகு கொண்டாட வேண்டும். முதலில் கொண்டாடுவது பிறகு எரிப்பது என்று அப்படி அல்ல. முதலில் அசுத்தத்தை, பலவீனத்தை, தீயவைகளை எரியுங்கள், பஸ்டம் ஆக்குங்கள். பிறகு கொண்டாடுங்கள் நீங்களோ வெகு முன்பாகவே எரித்து விட்டீர்கள் இல்லையா அல்லது இப்பொழுது கூட கொஞ்சம் முந்தானையின் நுணி தங்கி இருந்து விட்டதா? பாண்டவர்கள் சட்டை அல்லது என்ன ஆடை அணிகிறார்களோ அதில் ஏதோ ஒரு நுணி இருந்து விட்டதா? புடவையின் ஓரத்தில் கொஞ்சம் தங்கிப் போய் விட்டதா? உண்மையில் பார்த்தீர்கள் என்றால் ஆத்மீக கொண்டாட்டம்

மேலும் அதைக் கொண்டாடுவதினால் சக்தி, அதீந்திரிய சுகத்தின் அனுபவம் செய்வது ஆகியவற்றை எப்பொழுது முதலில் எரிப்பீர்களோ அப்பொழுது தான் செய்ய முடியும். பொழுது போக்கின் ரூபத்தில் கொண்டாடுவது என்பது வேறாகும். அதுவோ சங்கமயுகம் மகிழ்ச்சிகள் நிறைந்த யுகம், எனவே பொழுதுபோக்கின் ரூபத்திலும் கொண்டாடுகிறீர்கள் மேலும் கொண்டாடுங்கள். மிக நன்றாகவே கொண்டாடுங்கள் ஆனால் பரமாத்மாவின் வண்ணத்தில் வண்ணமயமாவது என்றால் தந்தைக்குச் சமமாக ஆகி விடுவது. இது தான் வண்ணத்தில் வண்ணமயமாவது. எப்படி தந்தை உடலற்றவராக இருக்கிறார், அவ்யக்தமாக இருக்கிறார் அதே போல் அசரீரி நிலையின் அனுபவம் செய்வது மற்றும் அவ்யக்த ஃபரிஷ்தா நிலையின் அனுடவம் செய்வது என்ற இது தான் வண்ணத்தில் வண்ணமயமாவது செயல்களைச் செய்யங்கள், ஆனால் அவ்யக்த ஃரிஷ்தா ஆகி காரியம் செய்யுங்கள். அசரீரி நிலையை எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது அனுபவம் செய்யுங்கள். அதே போல் மனம் மற்றும் புத்தி உங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கட்டும். அசரீரி ஆகி விடு என்று கட்டளை இடுங்கள். கட்டளையிட்டீர்கள் மற்றும் நடந்தது. ஃபரிஸ்தா ஆகி விட வேண்டும். மனதை எங்கே, எந்த நிலையில் நிலைத்திருக்கச் செய்ய விரும்புகிறீர்களோ அங்கே ஒரு நொடியில் நிலைத்திட வேண்டும். அதிகம் நேரம் எடுத்தது என்று அப்படி இருக்க வேண்டாம், ஐந்து விநாடி ஆகியது, இரண்டு விநாடி ஆகியது என்றால் கட்டளைப்படியோ நடக்கவில்லை, கட்டுப்பாட்டிலோ இருக்கவில்லை. எப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தாலும் குழப்பமாக இருந்தாலும் ஆனால் குழப்பமான நிலையிலும் ஆடாத அசையாதவராக ஆகி விடுங்கள். அந்த மாதிரி கட்டுப்படுத்தும் சக்தி இருக்கிறதா அல்லது அசரீரி ஆகி விடு, அசரி ஆகி விடு என்று யோசித்து -யோசித்து அதிலேயே நேரம் சென்று விடுகிறதா? சில குழந்தைகள் விதவிதமான போஸ்-ஐ (தோற்றத்தை) மாற்றிக் கொண்டே இருக்கிறார்கள், இதை தந்தை பார்த்துக் ண்டிருக்கிறார். ஆசரீரி ஆக வேண்டும் என்று நினைக்கிறார்கள் பிறகு அசரீரி றால் ஆத்ம ரூபத்தில் நிலைத்து விடுவது என்று நினைக்கிறார்கள் பிறகு நானோ ஆத்மாவே தான் சரீரமோ இல்லை என்றும் நினைக்கிறார்கள். நான் வந்ததே ஆத்மாவாகத் தான் ஆகவே வேண்டியதும் ஆத்மா தான்.. இப்பொழுது இந்த மாதிரி போசிப்பது அசரீரி ஆனதா அல்லது அசரீரி ஆவதற்கான

யுத்தம் செய்தாரா? தனது மனதிற்கு ஒரு நொடியில் அசரீரி ஆகி விடு என்று கட்டளையிட்டார் அசரீரி என்றால் என்னவென்று யோசி. எப்பொழுது ஆவோம், எப்படி ஆலோம்? என்று இதை சொல்லவில்லை. கட்டளையை ஏற்று நடக்கவில்லை இல்லையா? கட்டுப்படுத்தும் சக்தியோ இருக்கவில்லை தான் இல்லையா. இப்பொழுது நேரத்திற்குச் தகுந்தாற்போல் இந்தப் பயிற்சியின் அவசியம் இருக்கிறது. ஒருவேளை கட்டுப்படுத்தும் சக்தி இல்லை என்றால் அனேக சூழ்நிலைகள் குழப்பத்தில் கொண்டு வர முடியும். எனவே ஒரு ஹோலி என்ற வார்த்தையை மட்டும் நினைவு செய்தீர்கள் என்றால் கூட சரி தான். வேஹாலி -கடந்தது கடந்ததாக ஆகியது. மேலும் ஹோலி அதாவது தந்தையின் குழந்தை ஆகி விட்டேன். மேலும் என்ன ஆனீர்கள்? ஹோலி என்றால் தூய்மையான ஆத்மா ஆகி விட்டீர்கள். ஒரு ஹோலி வார்த்தையை நினைவு செய்தீர்கள் என்றால் ஒரு ஹோலி என்ற வார்த்தையின் மூன்று அர்த்தங்களை உபயோகப் படுத்துங்கள். ஆம் ஹோலி என்றால் கடந்தது கடந்ததாக ஆனது என்று வர்ணனை செய்யாதீர்கள். ஆம் கடந்தது கடந்ததானது என்று யோசித்துக் கொண்டே இருக்கிறீர்கள். வர்ணனை செய்து கொண்டே இருக்கிறீர்கள் என்று அப்படி வேண்டாம். அர்த்த சொரூபத்தில் நிலைத்து விடுங்கள். நினைத்தீர்கள் மற்றும் ஆனது. யோசித்தீர்கள் என்றால் அப்படி யோசிப்பதிலேயே இருந்து விட்டீர்கள் என்று அப்படி இருக்க வேண்டாம். என்ன யோசித்தீர்களோ அதுவாக ஆனீர்கள், நிலைத்து விட்டீர்கள்.

(**10-வருடங்களுக்கு மேலான இரட்டை வெளிநாட்டு சகோதர சகோதரிகளுக்காவ பாராட்டு விழா கொண்டாடப்பட்டது).** யார் யார் விழா கொண்டாடினீர்களோ, அந்த மாதிரி விழா கொண்டாடினீர்கள் இல்லையா? அதாவது ஹோலி கொண்டாடினீர்கள் இல்லையா? பாப்தாதாவும் ஒவ்வொரு வித்தியாசமான மற்றும் அன்பான காட்சியைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். முழு பரிவாரமும் குஷி அடைகிறது. தன்னுடைய புகைப்படத்தை மிக நன்றாகப் பார்த்தீர்களா? பிடித்திருந்தது தான் இல்லையா? முகத்தை மட்டும் பார்த்தீர்களா அல்லது மனதின் நிலையையும் பார்த்தீர்களா? இந்தக் கண்ணாடியிலோ முகத்தைப் பார்த்தீர்கள், மிக நன்றாக இருக்கிறது. நன்றாக செய்தீர்கள் ஆனால் ஞானம் என்ற கண்ணாடியில் தன்னுடைய நிலையையும்

பார்த்தீர்களா? நல்லது தான். பாப்தாதாவும் 10-15 வருடங்கள் என்று பார்ப்பதில்லை, ஆனால் இவ்வளவு காலம் வந்திருக்கிறார்கள், அழியாதவர்களாக இருந்திருக்கிறார்கள், அமரராக இருந்திருக்கிறார்கள் என்ற இதைப் பார்த்து குஷி அடைகிறார். அதிசயத்தை செய்தீர்கள். கலாச்சாரக்கை மாற்றினீர்கள், தேசத்தை மாற்றினீர்கள், பழக்க வழக்கத்தை மாற்றினீர்கள். இரட்டை வெளிநாட்டினரின் சம்ஸ்காரத்தை மாற்றினீர்கள் பாரதவாசி ஆகி விட்டீர்கள். இப்பொழுது உங்களை மதுபன் நிலாசி என்றா அல்லது அமெரிக்கா, லண்டன் வாசி என்றா கூறுவீர்கள் நீங்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள். மதுபன்னைச் சேர்ந்தவர்களா? மதுபன் நிவாசிகள்). அமெரிக்கா, ரஷியா நினைவில் இருக்க வில்லையா? மதுபன் உங்களுடைய நிரந்தர விலாசும் ஆகும். மேலும் அமெரிக்கா, ரஷியா, ஆஃப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் எத்தனை இடங்கள் இருக்கின்றன. இவை அனைத்தும் சேவை ஸ்தானங்கள், வசிப்பதற்கான நிரந்தர விலாசம் மதுபன் ஆகும். மற்றபடி சேவைக்காக வேறு பெயர், வேறு ரூபம், வேறு பாஷை வேறு கலாச்சாரத்தில் சென்றிருக்கிறீர்கள். இல்லை என்றால் பாருங்கள் ஒருவேளை நீங்கள் அங்கே ஜென்மம் எடுக்கவில்லை என்றால் பாரகத்தின் சகோதரிகளுக்கு எத்தனை பாஷை கற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கும். எத்தனை பாஷைகள் சுற்றுக் கொள்கிறீர்கள்? அப்படி நீங்கள் அனைவரும் சேவைக்காக சென்றிருக்கிறீர்கள். மேலும் இரட்டை வெளிநாட்டினருக்கு சேவை நிலையங்கள் திறப்பதற்கான ஆர்வமும் மிக நன்றாக இருக்கிறது என்று பாப்தாதா பார்த்திருக்கிறார். பிளாட் (அடுக்குமாடி வீடு) கிடைத்தது. சென்டர் திறந்தார்கள். நல்லது தான். அதனால் தான் இவ்வளவு தேசங்களில் சென்டர்கள் திறந்திருக்கிறார்கள்.

பாப்தாதா இந்த ஊக்கம் உற்சாகத்திற்காக இரட்டை வெளிநாட்டினருக்கு மிகுந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். கொஞ்ச காலத்திற்குள் சேவையை மிக நன்றாக பரப்பியிருக்கிறீர்கள். அப்படி மிக வேகமாக நடந்தது தான் இல்லையா? வெளிநாட்டில் சேவை தொடங்கி எத்தனை வருடங்கள் ஆகியிருக்கின்றன? லண்டனில் ஸ்தாபனை செய்து எத்தனை வருடங்கள் ஆகி விட்டது (1998'ல் 27-வருடங்கள்). (பாரதத்தில் 62 வருடங்கள் மற்றும் வெளிநாட்டில் 27-வருடங்கள்) அப்படி சேவையின் வளர்ச்சியைப் பார்த்து பாப்தாதா குஷி அடைகிறார். ஒரே

ஒரு சேவை மட்டும் இப்பொழுது இன்னும் செய்ய வேண்டியதாக இருக்கிறது. எல்லாம் நடந்து விட்டது என்று அப்படியே பாப்தாதா விட மாட்டார். இன்னும் செய்ய வேண்டியது இருக்கிறது.

அனைத்து இரட்டை வெளிநாட்டினர் எதிர்காலத்திற்காக இப்பொழுது செய்தித் தாள் மூலமாக செய்யும் சேவையை அதிகம் செய்யுங்கள் என்று பாப்தாதா சமிக்ஞை கொடுக்கிறார். வெளிநாட்டின் செய்தித்தாள்கள் பாரதத்தில் சேவை செய்யும். இப்பொழுது ஏதோ காரணத்தினால் கொஞ்சம் கொஞ்சம் தொடங்கியிருக்கிறது ஆனால் எப்படி தொடக்கத்தில் ஸ்தாபணையின் நேரத்தில் வெளிநாட்டு பத்திரிகைகளில் செய்தி வெளியானது இப்பொழுது மீண்டும் வெளிநாட்டுச் செய்தித்தாட்களில் அந்த மாதிரி செய்தி வர வேண்டும் அதன் மூலம் பாரதவாசிகளின் கண்கள் திறக்கட்டும். பாரதத்தின் செய்தித்தாள்களிலோ வரத் தொடங்கியிருக்கிறது ஆனால் வெளிநாட்டு பத்திரிகைகளும் பாரதத்தை எழுப்பி விடும் மேலும் இன்னொன்று அந்த மாதிரி உலக வானொலியிலும் வர வேண்டும். எப்படி நீங்கள் பிரம்மா குமாரிகள் பற்றி கம்ப்யூட்டரில் போட்டிருக்கிறீர்கள் இல்லையா? யார் விரும்பினாலும் அதைப் பார்க்க முடியும். நன்றாக போட்டிருக்கிறீர்கள் ஆனால் அதன் செய்தி யாருக்கும் தெரியாது, பாரதத்தில் அதன் லாபத்தை எடுக்க முடியும் ஆனால் அது இன்னும் விளம்பரப்படுத்தப்படவில்லை. கண்டுபிடிப்பை நன்றாகச் செய்திருக்கிறீர்கள். வெளிநாட்டில் இயற்கையின் சாதனங்களின் லாபத்தை நன்றாக எடுக்கிறார்கள். இதுவும் நல்லது தான். பாரதத்தில் இந்த பிபிசி-ஐ அனைவரும் கேட்கிறார்கள். அதில் வரட்டும் பிறகு பாருங்கள் எத்தனை பேருக்கு தெரிய வந்தது என்று. அதிசயம் செய்யுங்கள் அறிமுகத்தைக் கொண்டு வாருங்கள். உள்ளூர் டி.வி மற்றும் ரேடியோவிலோ வரத் தான் செய்கிறது ஆனால் அது உலகம் முழுவதும் பரவியது என்றால் கேட்க விரும்புபவர்கள் கேட்கலாம். இப்பொழுது ஒவ்வொரு வருடமும் ஏதோ டதியதைச் செய்ய வேண்டும் தான் இல்லையா, திட்டத்தையோ உருவாக்குகிறீர்கள் தான் இல்லையா? மீட்டிங்கும் மிக அதிகமாகச் செய்கிறீர்கள். நன்றாகச் செய்யுங்கள் அதிகமாகச் செய்யுங்கள். தைரியம் குழந்தைகளிடம் இருக்கிறது என்றால் தந்தையின் உதவியோ இருக்கவே இருக்கிறது. யாராவது ஒரு பொறுப்பாளராக மட்டும் ஆக வேண்டும். ஒவ்வொரு

காரியத்திற்கும் யாராவது ஒருவர் பொறுப்பாளர் ஆகி விடுகிறார். மேலும் அந்தக் காரியம் நடந்தேறியும் விடுகிறது, ஏனென்றால் அது நடக்க வேண்டும் என்று டிராமாவில் அடங்கியிருக்கிறது. அந்த நேரத்தில் யாரோ ஒருவர் பொறுப்பாளராக மட்டும் ஆகி விடுகிறார். அப்படி இந்தக் காரியத்திற்காகவும் யாராவது பொறுப்பாளர் ஆகவே வேண்டும். நல்லது.

நாலாபுறங்களிலுமுள்ள மிகத் தூய்மையான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் மிக உயர்ந்த நிலையில் நிலைத்திருக்கக்கூடிய மிக உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அனைத்து பொக்கிஷங்களால் நிரம்பிய மிகுந்த செல்வந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு சேமிப்பு செய்யக்கூடிய, தந்தைக்குச் சமமாக ஆகக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் இரக்க மனமுடைய மன்னிக்கும் கடலின் குழந்தைகள் மாஸ்டர் மன்னிக்கும் ஆத்மாக்களுக்கு, உலகின் துக்கமான ஆத்மாக்களுக்கு எண்ண சக்தி மூலமாக சுகம் சாந்தியின் அஞ்சலி கொடுக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, ஒவ்வொரு நேரமும் தன்னுடைய சேமிப்பு கணக்கு நிரம்பியிருக்கக்கூடிய மிகத் தீவிரமாக முயற்சி செய்யும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: தந்தைக்குச் சமமாக வரதானி ஆகி ஒவ்வொருவரின் இதயத்திற்கும் இதமளிக்கக்கூடிய மாஸ்டர் திலாராம் ஆகுக!

எந்தக் குழந்தைகள் தந்தைக்குச் சமமாக வரதானி மூர்த்தி குழந்தைகளாக இருக்கிறார்களோ அவர்கள் ஒருபொழுதும் யாருடைய பலஹீனத்தையும் பார்ப்பதில்லை. அவர்கள் அனைவர் மீதும் இரக்க மனமுடையவராக இருப்பார். எப்படி தந்தை யாருடைய பலஹீனத்தையும் இதயத்தில் வைத்துக் கொள்வதில்லையோ, அதே போல் வரதானி குழந்தைகளும் யாருடைய பலஹீனத்தையும் தன்னுடைய இதயத்தில் தாரணை செய்வதில்லை. அவர் ஒவ்வொருவரின் இதயத்திற்கு இதமளிக்கூடிய மாஸ்டர் திலாராமாக இருப்பார். எனவே அவர் உடன் இருப்பவரோ அல்லது மற்றவரோ அனைவரும் அவருடைய புகழ் பாடுவார்கள். அனைவரின்

மனதிலிருந்து இவர் எப்பொழுதும் என்னுடைய அன்பானவர், சகயோகி என்ற இந்த ஆசீர்வாதம் தான் வெளியாகும்.

சுலோகன்: சங்கமயுகத்தில் யார் எப்பொழுதும் கவலையற்ற மகாராஜா போல் இருக்கிறாரோ அவர் தான் உயர்ந்த ஆத்மா ஆவார்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 30.03.1998 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைத்து பிராப்திகளின் நினைவை வெளிக் கொணர்ந்து, உறுதியான நிலையை அனுபவம் செய்யுங்கள் மற்றும் பந்தன் முக்த் (பந்தனமற்ற வாழ்வுடையோர்) ஆகுங்கள்!

இன்று பாக்கியத்தை உருவாக்கும் தந்தை உலகில் தன்னுடைய மிக உயர்ந்த பாக்கியம் நிறைந்த குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையின் பாக்கியத்தின் மகிமையை சுயம் பகவான் பாடிக் கொண்டிருக்கிறார். தந்தையின் மகிமையையோ ஆத்மாக்கள் பாடுகிறார்கள் ஆனால் சுயம் தந்தை குழந்தைகள் உங்களை மகிமை செய்கிறார். எனக்கு இந்த அளவு உயர்ந்த பாக்கியம் உருவாகி இருக்கிறது என்று எப்பொழுதாவது கனவில் கூட நினைத்ததுண்டா? ஆனால் உருவாகியிருந்தது, மேலும் உருவாகி விட்டது. உலக மக்கள் பகவான் நம்மைப் படைத்தார் என்று கூறுகிறார்கள் ஆனால் அவர்களுக்கு பகவான் யார் என்றும் தெரியாது, அவருடைய படைப்பைப் பற்றியும் தெரியாது. நீங்கள் ஒவ்வொரு பகவானின் குழந்தைகள் நான் சிவவம்சி பிரம்மா குமார் அல்லது பிரம்மா குமாரி என்ற அனுபவத்துடன் மற்றும் பெருமிதத்துடன் கூறுகிறீர்கள். எங்களை பாப்தாதா எப்படி படைத்தார் என்று எங்களுக்குத் தெரியும். சின்னக் குழந்தையாக இருந்தாலும் அல்லது வயது முதிர்ந்த பாண்டவனாக இருந்தாலும், சக்தியாக இருந்தாலும் அவர்கள் யாரிடமாவது உங்களுடைய தந்தை யார் என்று கேட்டால் என்ன கூறுவார்கள்? எங்களை சிவதந்தை பிரம்மாபாபா மூலமாக படைத்தார், எனவே நாங்கள் பகவானின் குழந்தைகள் என்று யோசிக்காமல். தயங்காமல் கூறுவார்கள். பகவானோடு நேரடியாக சந்திக்கிறோம். அவர் பரமாத்மா மற்றும் பகவான் மட்டும் இல்லை,

ஆனால் அவர் எங்களுடைய தந்தை, ஆசிரியர், சத்குருவாகவும் இருக்கிறார். அனைவருக்கும் இந்த போதை இருக்கிறதா? {அனைவரும் கை தட்டினார்கள்) ஒரு கையின் கைத்தட்டுதல் செய்யுங்கள், இப்பொழுது இந்தப் பயிற்சியை வயோதிகர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். குழந்தைகளின் குஷியைப் பார்த்து பாப்தாதாவும் குஷியில் ஆடுகிறார் மற்றும் ஆஹா என்னுடைய ஒவ்வொரு உயர்ந்த பாக்கியம் நிறைந்த விசேஷ ஆத்மாக்களே! என்று எப்பொழுதும் கூறுகிறார். தந்தையின் ரூபத்தில் பரமாத்மாவின் பாலனையை அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள். இந்த பரமாத்மா பாலனை முழுக் கல்பத்திலும் இந்த பிராமண பிறவியில் குழந்தைகள் உங்களுக்கு மட்டும் கிடைக்கிறது. அந்த பரமாத்மா பாலனையில் ஆத்மாவிற்கு அனைத்து பிராப்தி சொரூபத்தின் அனுபலம் ஆகிறது. பரமாத்மாவின் அன்பு அனைத்து உறவுகளின் அனு வத்தை செய்விக்கிறது. பரமாத்மாவின் அன்பு தன்னுடைய தேக உணர்வையும் மறக்க வைத்து விடுகிறது. கூடவே அனேக சயநலமான அன்பையும் மறக்க வைத்து விடுகிறது. அந்த மாதிரி பரமாத்மாவின் அன்பில் பரமாத்மாவின் பாலனைக்குள் வளர்ந்து கொண்டிருக்கும் பாக்கியவான் ஆத்மாக்கள் நீங்கள் ஆவீர்கள். ஆத்மாக்கள் உங்களுக்கு எவ்வளவு பாக்கியம் இருக்கிறது. சுயம் தந்தை தன்னுடைய உலகை விட்டு விட்டு இறை மாணவர்கள் உங்களுக்கு படிப்பிப்பதற்காக வருகிறார். உலகில் அந்த மாதிரியான ஆசிரியர் யாராவது அதிகாலையில் தூர தேசத்திலிருந்து கற்பிப்பதற்கு வருவதைப் பார்த்திருப்பீர்களா? அந்த மாதிரி ஆசிரியரை எப்பொழுதாவது கண்டிருக்கிறீர்களா? ஆனால் குழந்தைகள் உங்களுக்காக தந்தை ஆசிரியராகி தினசரி படிப்பிப்பதற்காக உங்களிடம் வருகிறார். மேலும் எவ்வளவு எளிதாக கற்பிக்கிறார். இரண்டு வார்த்தைகளின் படிப்பாகும் -நீங்கள் மற்றும் தந்தை, இதே இரண்டு வார்த்தைகளில் படைப்புச் சக்கரம், நாடகம், கல்ப விருட்சம் என்று கூறினாலும் முழு ஞானமும் அடங்கியிருக்கிறது. மற்ற கல்விகளிலோ மூளையில் எவ்வளவு சுமை ஏற்படுகிறது மற்றும் தந்தையின் படிப்பினால் மூளை லேசாகி விடுகிறது. லேசாக ஆவதின் அடையாளம் உயர்ந்த நிலையில் செல்வது. லேசான பொருள் இயல்பாகவே மேலே செல்லும். அப்படி இந்த படிப்பின் மூலம் மனம் மற்றும் புத்தி பறக்கும் கலையின் அனுபவம் செய்கிறது. அப்படியானால் மூளை லேசாக ஆனது இல்லையா! மூன்று உலகங்களின் ஞானம் கிடைத்துவிடுகிறது.

அப்படியானால் அந்த மாதிரி படிப்பை முழுக் கல்பத்திலும் யாராவது படித்திருக்கிறார்களா? கற்பிக்கக்கூடிய அந்த மாதிரி யாராவது கிடைத்தார்களா? அப்படியானால் பாக்கியம் தான் இல்லையா? பிறகு சத்குரு மூலமாக அந்த மாதிரி ஸ்ரீமத் கிடைக்கிறது அதன் காரணமாக என்ன செய்வது, எப்படி நடந்து கொள்வது, அந்த மாதிரி செய்யலாமா அல்லது வேண்டாமா. என்ன ஆகும்... என்ற இந்த அனைத்து கேள்விகளும் முடிந்து விடுகின்றன. என்ன செய்வது, எப்படி செய்வது, அப்படி செய்யலாமா அல்லது இப்படி செய்யலாமா என்ற இந்த அனைத்து கேள்விகளுக்கும் ஒரு வார்த்தையில் பதில் இருக்கிறது -தந்தையைப் பின்பற்றி நடங்கள். உலகீய காரியங்களில் பிரம்மாபாபாவைப் பின்பற்றி நடங்கள், (உடலற்ற நிலையில்) அசரீரி ஆவதில் சிவதந்தையைப் பின்பற்றி நடங்கள். இருவர்களையும் பின்பற்றினீர்கள் என்றால், கேள்விக்குறி முடிவடைவது மற்றும் ஸ்ரீமத்படி நடப்பது. இது கடினமா? ஏதாவது கேட்பதற்கு அவசியம் இருக்குமா என்ன? அப்படியே செய்ய வேண்டும், தன்னுடைய மூளையை உபயோகிக்கக் கூடாது. தந்தைக்குச் சமமாக ஆவது என்றால் தந்தையைப் பின்பற்ற வேண்டும். கடினமா அல்லது சுலபமா? சுலபம் தான் இல்லையா? 30 வருடங்கள் நிரம்பியவர்கள் கையை உயர்த்துங்கள். நல்லது. 30 வருடங்களில் கடினமாக பட்டதா அல்லது சுலபமாக இருந்ததா? இப்பொழுது பாருங்கள். 30 வருடங்கள் நிரம்பியவர்களுக்கும் சுலபமாக இருந்தது என்றால் பிற்காலத்தில் வந்திருக்கும் உங்களுக்கு கடினமாக இருக்கிறதா அல்லது சுலபமாகவா? சுலபம் தான் இல்லையா கோடை வெப்பத்தின் காரணமாக அனைவர்களின் கையில் பல வர்ணங்கள் நிரம்பிய விசிறிகள் இருக்கின்றன அதை அவர்கள் அசைத்தார்கள். நன்றாக இருக்கிறது. விசிறிகளின் வண்ணமயமான காட்சி நன்றாக இருக்கிறது. புதுமை இருக்க வேண்டும் இல்லையா?. அப்படி இந்த குரூப்பில் இதுவும் புதுமை ஆகும், இதுவும் தொலைக்காட்சியில் வந்து விட்டது. நல்லது அனைவரும் ஓடி ஓடி வந்து சேர்ந்து விட்டீர்கள். பாப்தாதாவும் தன் மேல் வைத்திருக்கும் அன்பிற்காக வாழ்த்துக்கள் கூறுகிறார். பாருங்கள் உலகில் உள்ள எல்லைக்குட்பட்ட குருக்கள் எத்தனை வரதானங்கள் கொடுக்கிறார்கள். ஒன்று அல்லது பத்து, அதிகம் கொடுப்பதில்லை ஆனால் உங்களுக்கு சத்குரு மூலமாக தினசரி வரதானம் கிடைக்கிறது. அந்த மாதிரி குருவை எப்பொழுதாவது

பார்த்திருக்கிறீர்களா? பார்க்கவில்லை இல்லையா?. நீங்கள் தான் பார்த்திருக்கிறீர்கள் மற்றும் ஒவ்வொரு கல்பத்திலும் பார்த்தீர்கள். அப்படி தன்னுடைய பாக்கியத்தின் பிராப்திகளை எப்பொழுதும் எதிரில் வையுங்கள். பத்தியில் உள்ளடக்கி மட்டும் வைக்காதீர்கள். வெளிப்படுத்துங்கள். உள்ளடக்கி வைக்கும் சம்ஸ்காரத்தை மாற்றி வெளிப்படுத்துங்கள். தன்னுடைய பிராப்திகளின் பட்டியலை புத்தியில் எப்பொழுதும் வெளிப்படும் நிலையில் வையுங்கள். எப்பொழுது பிராப்திகளின் பட்டியல் வெளிப்பட்டு இருக்குமோ அப்பொழுது எந்த விதமான தடையையும் பார்க்க முடியாது. அது உள்ளடங்கி போய் விடும். மேலும் பிராப்திகள் வெளிப்படும் ரூபத்தில் இருக்கும்.

இன்று ஏதாவது காரணத்தினால் சில குழந்தைகள் கடின உழைப்பு செய்கிறார்கள். யத்தம் செய்கிறார்கள். யோகா செய்ய விரும்புகிறார்கள், ஆனால் செய்ய முடிவதில்லை, ஆத்ம உணர்வில் இருப்பதற்குப் பதிலாக தேக உணர்வில் வந்து விடுகிறார்கள் என்று எப்பொழுது தந்தை கேள்விப்படுகிறாரோ அப்பொழுது பாப்தாதா விற்கும் நன்றாக இருப்பதில்லை. இதற்கான காரணம் என்ன? தன்னுடைய பாக்கியத்தின் பிராப்திகள் பாபா மூலம் அடைந்தவை) வெளிப்பட்ட ரூபத்தில் இருப்பதில்லை. உள்ளடங்கி இருக்கிறது. பிறகு எப்பொழுது யாராவது நினைவூட்டுகிறார்கள் என்றால், அப்படி இருக்கத் தான் வேண்டும் என்று யோசிக்க ஆரம்பிக்கிறார்கள். எனவே மிக சுலபமான முயற்சி என்னவென்றால் -பிராப்திகளை வெளிப்படையாக தெரியுமாறு வைப்பது. எப்பொழுதிலிருந்து பிராமணன் ஆனீர்களோ அப்பொழுதிலிருந்து தன்னுடைய பாக்கியத்தை நினைவில் வையுங்கள். குழப்பமான நிலையில் வராதீர்கள், அச்சல் (உறுதியானவராக ஆகுங்கள். ஏனென்றால் இங்கே அபு மலையில் என்ன நினைவுச்சின்னம் இருக்கிறது? அச்சல்கர் இருக்கிறதா அல்லது ஹல்சல் கர் (ஆடும் வீடு) இருக்கிறதா? அச்சல் கர் (உறுதி) தான் இல்லையா? இது யாருடைய நினைவுச்சின்னம். உங்களுடைய நினைவுச்சின்னம் தான் இல்லையா. அப்படி எப்பொழுதெல்லாம் ஏதாவது சூட்சுமமாக முயற்சி செய்யும் மார்க்கம் கடினமாக அனுபவம் ஆகிறது என்றால், புத்தி அதிக குழப்பத்தில் இருக்கிறது என்றால் தன்னுடைய நினைவுச்சின்னத்தை நினைவில் கொண்டு வாருங்கள். அனேக தடவைகள் குழந்தைகள் ஞானத்தின் பாய்ன்ட்டு களை

(துளிகளை) நான் ஆத்மா ஆவேன், இது நாடகம், இதுவோ தடை ஆகும். இதுவோ சாலை ஓரக் காட்சி ஆகும் என்றும் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள் ஆனால் ஆடிக் கொண்டும் இருக்கிறார்கள். ஆடிக் கொண்டே சொல்லிக் கொண்டும் இருக்கிறார்கள். எப்பொழுது அந்த மாதிரி புத்தி ஆகி விட்டது என்றால் நிலைத்திருக்க முடியவில்லை என்றால் மதுபன்னின் அச்சல் கர்-ஐ நினைவு செய்யுங்கள். இதுவோ ஸ்தூலமான ஒன்று தான் இல்லையா? சூட்சமமான ஒன்று இல்லை தானே. கண்களால் பார்க்கக்கூடிய ஒன்று. என்னுடைய நினைவுச்சின்னம் அச்சல் கர். ஆடும் ஹல்சர் கர் இல்லை. ஏனென்றால், இந்த வருடத்தை அனைத்து குழந்தைகளும் முக்தி வருடமாக கொண்டாட பாப்தாதா விரும்புகிறார். கையை உயர்த்தச் சொன்னால் சிலருடைய கை உயர்ந்தது. சிலருடைய கை உயரவில்லை என்று அப்படியிருக்கக் கூடாது. அனைவரும் மிகவும் குஷியோடு கையைத் தட்டுங்கள் (அனைவரும் கை தட்டினார்கள்). இப்பொழுதோ அனைவரும் கை தட்டினீர்கள் அதுவோ சரி தான், ஆனால் இந்த வருடத்தின் இறுதியில் பாப்தாதா இந்த மாதிரியே மிக ஒசையுடன் கைத்தட்டலைப் பார்க்க வேண்டும். இப்பொழுதோ தட்டினீர்கள் நல்லது தான். அப்பொழுதும் தட்ட வேண்டும். கை தட்டுவீர்களா? பாருங்கள். இரு கைகளையும் தட்டி தந்தையைக் குஷிப் படுத்திவிட்டீர்கள் ஆனால் பாப்தாதா புது வருடத்தில் எது தன்னுடைய 18 ஜனவரி விசேஷமாக பிரம்மாபாபா உடலிலிருந்து விடுபட்ட நாள் ஆகும் அப்படி 18 ஜனவரியில் பாப்தாதா மீண்டும் முக்தி வருடத்தைக் கொண்டாடினீர்களா அல்லது யோசிக்க மட்டும் செய்தீர்களா? என்று கையை உயர்த்தச் செய்வார். கொண்டாட வேண்டும், கொண்டாட வேண்டும் என்று யோசித்துக் கொண்டே இருந்து விடாமல் நடைமுறையில் கொண்டு வந்தேனா யோசித்து யோசித்து இறுதி வரையிலும் யோசித்துக் கொண்டே இருந்தீர்களா? இந்த ரிசல்ட்டை பாப்தாதா பார்க்க விரும்புகிறார். காண்பிப்பீர்களா? நல்லது. நினைவு இருக்கும் இல்லையா? பிராப்திகளை எதிரில் வையுங்கள். தந்தையின் நினைவின் கூடவே தந்தை என்ன கொடுத்திருக்கிறாரோ என்ன ஆக்கியிருக்கிறாரோ மற்றும் என்ன கிடைத்திருக்கிறது என்ற இவைகளையும் மனதில் வெளிப்படுத்துங்கள்.

இந்த வருடத்திற்குப் பிறகு பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் ஜீவன்முக்த் நிலையில் பார்ப்பார். எதிர்காலத்தில் ஜீவன்முக்த் ஆவீர்கள், ஆனால் சம்ஸ்காரத்தின் ஜீவன்முக்த் நிலையை இப்பொழுதிலிருந்தே வெளிப்படுத்த வேண்டும். மேலும் நிரந்தர கர்மயோகி, நிரந்தர சகஜயோகி, நிரந்தர முக்த் ஆத்மாவின் சம்ஸ்காரத்தை இப்பொழுதிலிருந்தே அனுபவத்தில் கொண்டு வாருங்கள். ஏன்? நேரத்தின் பரிவர்த்தனை {மாற்றம்! உலக மாற்றம் செய்யும் ஆத்மாக்கள் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறது என்று பாப்தாதா ஏற்கனவே சமிக்ஞை செய்திருக்கிறார். இயற்கையானது. இயற்கையின் தலைவர்களாகிய ஆத்மாக்கள் உங்களை வெற்றி மாலையை கையில் எடுத்து வரவழைத்துக் கொண்டிருக்கிறது. நேரம், வெற்றி மணியை அடிப்பதற்காக எப்பொழுது மணியை அடிக்கலாம் என்று எதிர்கால இராஜ்ய அதிகாரி ஆத்மாக்கள் உங்களை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. பக்த ஆத்மாக்கள் எப்பொழுது எங்களுடைய பூஜைக்குரிய தேவ ஆத்மாக்கள் எங்கள் மேல் மகிழ்ச்சி அடைந்து எங்களுக்கு முக்திக்கான வரதானம் கொடுப்பார்கள் என்று அந்த நாளை நினைவு செய்து கொண்டிருக்கின்றன. துக்கமான ஆத்மாக்கள் எப்பொழுது துக்கத்தை நீக்கி சுகம் கொடுக்கும் ஆத்மாக்கள் பிரத்யக்ஷம் ஆவார்கள் என்று அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இவர்கள் அனைவரும் உங்களுக்காக காத்துக் கொண்டும், வரவேற்றுக் கொண்டும் இருக்கிறார்கள். எனவே ஹே! இரக்க மனமுடைய, உலகிற்கு நன்மை செய்யும் ஆத்மாக்களே இவர்களுடைய காத்திருத்தலுக்கு முடிவு கட்டுங்கள். உங்களுக்காக அனைவரும் நின்று கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அனைவரும் முக்த் (விடுதலை) ஆகி விட்டீர்கள் என்றால், அனைத்து ஆத்மாக்கள், இயற்கை மற்றும் பக்தர்கள் ஆகியே அனைவருமே முக்த் ஆகி விடுவார்கள். எனவே முக்க் ஆகுங்கள். முக்திக்கான தானத்தைக் கொடுக்கக்கூடிய மாஸ்டர் வள்ளவ் ஆகுங்கள். இப்பொழுது உலக மாற்றத்தின் பொறுப்பின் கிரீடம் அணிந்த ஆத்மாக்களாக ஆகுங்கள். பொறுப்புள்ளவர்கள் தான் நீங்கள் இல்லையா? தந்தையுடன் சேர்ந்து உதவி செய்பவர்கள் நீங்கள். உங்களுக்கு இரக்கம் வரவில்லையா என்ன? இதயத்தில் துக்க வேதனையின் உணர்வு ஏற்படவில்லையா? ஹே.உலகத்தை மாற்றம் செய்யும் ஆத்மாக்களே! இப்பொழுது தன்னுடைய பொறுப்பின் முடிசூட்டு விழாவைக் கொண்டாடுங்கள். இப்பொழுது நிகழ்ச்சிகளோ

அதிகம் செய்திருக்கிறீர்கள் ஆனால் நிகழ்ச்சியின் முடிவாக என்ன ஆனது? பொன்னாடை அணிந்தீர்கள். கிரீடம் அணிந்தீர்கள், கொண்டாடினீர்கள். இதில் பாப்தாதாவும் குஷியாக இருக்கிறார், ஆனால் பொன்னாடை அணிவதில், மாலை அணிவதில், திலகம் இடுவதில் பாண்டவர்கள் கிரீடத்திற்குச் சமமாக தலைப்பாகையும் கட்டினார்கள். அப்படி இந்த கொண்டாடுதல் என்றால் பொறுப்பை ஏற்றுச் செய்வதாகும். குழந்தைகள் குஷி அடைந்தார்கள், தந்தை அவர்களை விட அதிகம் குஷி அடைந்தார் ஆனால் இன்னும் என்ன நடக்கப் போகிறது. பொன்னாடை அலமாரியில் இருந்தது, கிரீடம், திலகம் அலமாரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது என்ற இது தான் கொண்டாடுவதா? இல்லை. இந்த பொன்னாடை பொற்காலத்து நிலையின் நினைவுச் சின்னமாகும். அலமாரியில் மட்டும் வைத்து விடாதீர்கள், ஆனால் மனதில் நினைவு வையுங்கள். கொண்டாடுவது என்றால் தந்தையின் காரியத்தில் பொறுப்புடையவர் ஆவது. விருப்பம் தான் இல்லையா? அல்லது பொன்னாடை அணிவது மட்டும் மிக நல்லதாக இருந்ததா? நல்லதாகவும் இருந்தது. மிக நன்றாக இருந்தது என்று பாப்தாதாவும் நினைக்கிறார் ஆனால் அழியாத சகயோகி ஆக வேண்டும்.

இந்த வருடத்திற்காக இதனுடைய இறுதியில் 18 ஜனவரி அன்று முக்தி வருடத்தின் விழாவைக் கொண்டாட வேண்டும் என்று பாப்தாதா சமிக்ஞை கொடுத்திருக்கிறார். நாம் அப்படி ஆவோம் என்று கை தட்டியவர்கள் நினைக்கிறீர்களா? பின்பு பாபா, அப்படி ஆகவேதான் நான் விரும்பினேன், ஆனால் என்ன செய்வது, இப்படி ஆகி விட்டது, அப்படி ஆகி விட்டது என்று கூறாதீர்கள். அந்த மாதிரி விஷயங்களிலிருந்தும் முக்தி அடைய வேண்டும். ஆகத் தான் வேண்டும். என்ன செய்வது என்று இருக்கக்கூடாதுஇந்த வார்த்தைகளிலிருந்து முக்தி. என்ன ஆனாலும் சரி, ஆகத் தான் வேண்டும், அப்படி நடக்கத் தான் வேண்டும். 100-இமய மலைக்குச் சமமான மிகப் பெரிய தடை கூட வந்தாலும் இதிலிருந்து அகல மாட்டோம், தோல்வி அடைய மாட்டோம், முடிசூட்டு விழா முக்தி வருடத்தை அவசியம் கொண்டாடுவோம் என்று பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கிறார். பாப்தாதா தினசரி ஒவ்வொருவரின் சார்ட்டை பார்ப்பார். அந்த மாதிரி இருக்க வேண்டாம். இங்கிருந்து செல்கிறீர்கள் என்றால், வழியில் ரயிலிலேயே என்ன

ஆனதோ என்று தெரியவில்லை என்று கூறாதீர்கள். வீட்டிற்குச் சென்றீர்கள் என்றால், அன்னப்பறவை மற்றும் கொக்கு இரண்டிற்கும் இடையே சண்டை ஏற்பட்டது, இந்த மாதிரி ஆகி விட்டது. இந்த மாதிரி ஆகி விட்டது என்று கூறாதீர்கள். இதையெல்லாம் கேட்க மாட்டோம். உங்களுடைய கடிதங்களை வீண் குப்பை பெட்டியில் போடுவோம்! கேட்க மாட்டோம். ஆகத் தான் வேண்டும் என்ற உறுதியான எண்ணத்தை வையுங்கள். எங்கு திடத்தன்மை இருக்கிறதோ அங்கு வெற்றி இல்லை என்பது இருக்கவே முடியாது. அப்படி அனைவருமே திட எண்ணம் வைப்பவர்கள் தான் இல்லையா. டீச்சர்கள் கையை உயர்த்துங்கள். டீச்சர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அனைத்து சென்டர்களையும் காலி செய்து விட்டு வந்து விட்டீர்களா என்ன? நல்லது.

இப்பொழுது ஒருவேளை உங்கள் அனைவருக்கும் திடீரென்று இந்த நேரம் அசரீரி ஆகி விடுங்கள் என்று டைரக்ஷன் கிடைத்தது என்றால், ஆக முடியுமா அல்லது மேலே, கீழே செல்வீர்களா? ஏன் அப்படி செய்ய வேண்டும்? இறுதி நேரத்தில் இந்தப் பயிற்சி தான் மதிப்புடன் தேர்ச்சி பெற வைக்கும். எனவே இப்பொழுது பாப்தாதாவும் ஒரு நொடியில் அனைத்து விஷயங்களையும் விலக்கி விட்டு அசரீரி ஆகுக! என்று கூறுகிறார் (ட்ரில்) நல்லது.

நாலாபுறங்களிலுமுள்ள மிக உயர்ந்த பாக்கியவான், பரமாத்மா பாலனையின் அதிகாரி ஆத்மாக்களுக்கு, பரமாத்மா படிப்பின் அதிகாரி, பரமாத்மா சத்குருவின் வரதானங்களின் அதிகாரி, எப்பொழுதும் திடத்தன்மை மூலமாக வெற்றிசின் அதிகாரி, எப்பொழுதும் இடைவிடாத யோகி, ஆடாத, அசையாத யோகி, எப்பொழுதும் உலக மாற்றத்தின் பொறுப்பு என்ற கிரீடத்தை அணிந்தவர், எப்பொழுதும் அனைத்து பிராப்திகளை வெளிப்படும் ரூபத்தில் அனுபவம் செய்யக்கூடிய அந்த மாதிரி விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: கோபம் நிறைந்த ஆத்மாவிற்கு இரக்கம் என்ற குளுமையான நீர் மூலமாக குணதானம் செய்யக்கூடிய வரதானி ஆத்மா ஆகுக!

உங்கள் எதிரில் யாராவது கோப அக்னியில் எரிந்து கொண்டு வருகிறார், உங்களை திட்டுகிறார். நிந்தனை செய்கிறார் என்றால், அந்த மாதிரி ஆத்மாவிற்கும் தன்னுடைய சுபபாவனை, சுபவிருப்பங்கள் மூலமாக, உள்உணர்வு மூலமாக, மனநிலை மூலமாக குணதானம் அல்லது சகித்துக் கொள்ளும் சக்தியின் வரதானம் கொடுங்கள். கோபம் நிறைந்த ஆத்மா தனது பலஹீனத்தின் வசமாக இருக்கிறார். அந்த மாதிரி ஆத்மாவை இரக்கம் என்ற குளிர்ந்த நீர் மூலமாக அமைதி ஆக்குங்கள். இது வரதானி ஆத்மாக்கள் நீங்கள் செய்ய வேண்டிய கடமை ஆகும். சைத்தன்யத்தில் எப்பொழுது உங்களில் அந்த மாதிரி சம்ஸ்காரம் நிரம்புகிறதோ அப்பொழுது தான் ஜட விக்கிரகங்கள் மூலமாக பக்தர்களுக்கு வரதானம் கிடைக்கிறது.

சுலோகன்: நினைவு மூலமாக அனைத்து சக்திகளின் பொக்கிஷத்தை அனுபவம் செய்பவர் தான் சக்தி நிரம்பியவர் ஆகிறார்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋

# 21.11.1998 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சேவையின் கூடவே தேகத்திலிருந்து கொண்டே விதேகி (சரீரத்திற்கு அப்பாற்பட்ட) நிலையின் அனுபவத்தை அதிகரியுங்கள்!

இன்று பாப்தாதா தனது நாலாபுறங்களின் குழந்தைகளைப் பார்த்து புன் சிரித்துக் கொண்டிருக்கின்றனர். ஏனெனில் என்னுடைய ஒவ்வொரு குழந்தையும் கடைசி முயற்சியாளராக இருந்தாலும் சரி, பிறகும் கூட உலகத்திலேயே மிகவும் பாக்கியவான் குழந்தையாவார். ஏனெனில் பாக்கியத்தின் வள்ளல் பாபாவை அறிந்து புரிந்து, பாக்கிய வள்ளலின் நேரடியான குழந்தையாகி விட்டார் என்பதை பாபா அறிவார். எப்படிப்பட்ட பாக்கியம் முழு கல்பத்தின் எந்த ஆத்மாவிற்கும் கிடைக்காது, கிடைக்கவும் முடியாது. கூடவே முழு உலகத்தில் அனைவரையும் விட செல்வந்தர் அதாவது பணக்காரர் எவரும் இருக்க முடியாது. எவ்வளவுதான் கோடீஸ்வரராக இருந்தாலும் சரி, ஆனால் குழந்தைகள் உங்களுடைய கஜானாவோடு ஒப்பிட்டும் பார்க்க முடியாது. ஏனெனில் குழந்தைகளின் ஒவ்வொரு அடியிலும் கோடி மடங்கு வருமானம் உள்ளது முழு நாளிலும் தினமும் ஓரிரண்டு அடிகள் பாபாவின் நினைவிலிருந்தால் கூட அதாவது அடி எடுத்து வைத்தால், ஒவ்வொரு அடியிலும் பலகோடி மடங்கு... ஆக நாள் முழுவதும் எவ்வளவு கோடிகள் சேர்ந்துள்ளன? இம்மாதிரி யாரும் இருக்க முடியுமா ஒரே நாளில் கோடிகணக்கில் வருமானம் செய்டவர்! எனவே பாப்தாதா கூறுகிறார், பாக்கியவான்களைப் பார்க்க வேண்டுமென்றால் உலகிலேயே மிகப் பெரிய பணக்காரரைக் காண வேண்டுமென்றால், பாபாவின் குழந்தைகளைப் பாருங்கள்.

குழந்தைகளாகிய உங்களிடம் உலகிய பணம் செல்வம் மட்டும் இல்லை. அவர்களோ வெறும் பணத்தால் செல்வந்தர்கள் ஆனால் குழந்தைகளாகிய நீங்களோ எவ்வளவு கஜானாக்களினால் நிறைந்துள்ளீர்கள். அந்த பொக்கிஷங்களின் லிஸ்ட்டை அறிவீர்கள் தானே? இந்த ஸ்தூல செல்வம் ஒரு பெரிய விசயமே அல்ல ஆனால் உங்களிடம் உள்ள ஞான பொக்கிஷம், சக்திகளின் கஜானா, சர்வ குணங்களின் கஜானா, குஷியின் சுஜானா மற்றும் அனைவருக்கும் சுகம், சாந்தியின் வழியைக் கூறுவதன் மூலம் கிடைக்கின்ற ஆசிகள் அளவில்லாது. இந்த அழிவற்ற கஜானா பரமாத்மாளின் குழந்தைகளைத் தவிர அழிவில்லாது வேறு எவரிடமும் கிடையாது. ஆக பாப்தாதாவை இப்படிப்பட்ட கஜானாவின் எஜமானரான குழந்தைகள் மீது எவ்வளவு ஆன்மீகப் பெருமை உள்ளது. பாப்தாதா சதா குழந்தைகளை இப்படி நிறைந்தவர்களாகப் பார்த்து ஆஹா குழந்தைகளே ஆஹா! என்னும் பாடலைப் பாடுகிறார். உங்களுக்கும் உங்கள் மீது அந்தளவு ஆன்மீகப் பெருமை அதாவது போதை இருக்கிறதல்லவா! ஒரு கை மூலமாக கை கட்டிக் கொள்ளலாம். எல்லோரும் ஒரு கை மூலம் தட்டுகிறார்கள்) இரண்டு கைகளுக்கும் ஏன் கஷ்டம் கொடுக்கிறீர்கள் ஒரு கையாலேயே கை அசையுங்கள்! ஒரு கை மூலம் தட்டுவது என்பது எப்படி என்று தெரியுமல்லவா! பிராமணர்களின் அனைத்துமே சற்று வித்தியாசமானது! பிராமணர்கள் அமைதியை விரும்பக் கூடியவர்கள். எனவே அவர்கள் தட்டுகின்ற கை தட்டுதல் கூட அமைதியாக இருப்பது சரியே! ஆக போதை என்பது அனைவருக்கும் எப்போதுமே இருக்கிறது. மேலும் இருக்கும். ஏனெனில் கவலையற்று இருக்கிறீர்கள்.

பாப்தாதா சமய மாற்றத்தின் வேகத்தைப் பார்த்து குழந்தைகளின் புருஷார்த்தத்தின் வேகத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் ஜீவன் முக்தி நிலையில் பார்க்க விரும்புகின்றனர். உங்கள் அனைவருக்கும் முன்னால் இந்த ஒரு சவால் இருக்கிறது பாபாவிடமிருந்து முக்தி, ஜீவன் முக்தியின் ஆஸ்தியை வந்து அடையுங்கள் ஆனால் உங்களுக்கோ முக்தி, ஜீவன் முக்தியின் ஆஸ்தி கிடைத்துவிட்டது அல்லவா? அல்லது கிடைக்கவில்லையா? (கிடைத்துவிட்டது) சத்யுகத்தில் அல்லது முக்தி தாமத்தில் முக்தி அல்லது ஜீவன் முக்தியின் அனுபவத்தை செய்ய

முடியாது. முக்தி, ஜீவன் முக்தியின் ஆஸ்தியின் அனுபவம் தற்போது சங்கமயுகத்தில் செய்ய வேண்டும். வாழ்க்கையில் வாழ்ந்த படியே, நேர காலம் என்பது குறுகி உள்ளது, பிரச்சனைகளோ, பாதக சூழ்நிலைகளோ, வாயு மண்டலமானது இரண்டு விதமாக இவ்வாறு கெட்டு கிடக்கும்போது இந்த அனைத்து பிரபாவங்களிலிருந்தும் முக்தி, அதாவது வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டே இந்த அனைத்து விதமான பந்தனங்களிலிருந்தும் (கர்மத்தளைகள்) விடுதலை ஆகி, எந்த ஒரு சூட்சும பந்தனமும் இருக்கக் கூடாது. இந்த மாதிரி வாழ்க்கையில் முக்தி (விடுதலை அடைந்துள்ளீர்களா? அல்லது கடைசியில் தான் ஆவீர்களா? இப்பொழுது ஆவீர்களா அல்லது இறுதி நேரத்திலா? இறுதியில் ஆவதற்குப் பதிலாக இப்பொழுதே ஆக வேண்டும். அல்லது ஆகியுள்ளீர்களா அல்லது இனிமேல் தான் ஆக வேண்டுமா இப்படியெல்லாம் நினைப்பவர்கள் கை தூக்குங்கள். (அனைவரும் கையை உயர்த்துகின்றனர்) இரண்டிலுமே கலந்து கை உயர்த்துகின்றனர், மிகவும் புத்திசாலிகள்! பரவாயில்லை தந்திரமாக இருங்கள்! ஆனால் பாப்தாதா இப்பொழுதிலிருந்தே தெளிவாகக் கூறிக் கொண்டிருக்கின்றனர். தயவு செய்து கவனம் ஒவ்வொரு பிராமண குழந்தையையும் பாபா பந்தன் முக்த், ஜீவன் முக்த் ஆக்கியே தீர வேண்டும்! அது எந்த விதத்தினாலும் சரி ஆனால் கட்டாயம் ஆக்கியே தீர வேண்டும். அதற்கான விதிகள் என்ன என்பதை அறிவீர்கள் தானே இந்தளவு புத்திசாலிகள் தானே! ஆக நீங்கள் தான் அவ்வாறு ஆகியே தீர வேண்டும். நீங்கள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி ஆகியே தீர வேண்டும். அப்படி என்றால் என்ன செய்யப் போகிறீர்கள்? இப்பொழுதிவி ருந்தே ஆவோம்! உங்கள் வாயில் குலாப் ஜாமுன் போட வேண்டும் எல்லோருடைய வாயிலும் குலாப் ஜாமுன் வந்துவிட்டதல்லவா? ஆனால் இந்த குலாப் ஜாமுன் -தற்போது பந்தனத்திலிருந்து விடுதலை ஆக வேண்டுவது. அந்த குலாப் ஜாமுனை அப்படியே சாப்பிட்டு விடாதீர்கள்.

இந்த ஹலின் அழகு மிகவும் சிறப்பாய் உள்ளது. ஒரே அடியாக மாலை போன்று அமைந்துள்ளது. இங்கே வந்து பாருங்கள் அப்படியே மாலை போன்றுள்ளது. இந்த நாற்காலிகாரர்களின் மாலையும் தயாராகி விட்டது நல்லது. தெரிந்தோ, தெரியாமலோ எப்படி தற்போது நாற்காலி கிடைத்துள்ளது அல்லவா? அப்படியே பாப்தாதா இறுதி நேரத்தின் படி

விசில் அடிக்கும் போது ஜீவன் முக்கியின் நாற்காலியில் வந்து அமர்ந்து விடுங்கள். அப்படி அமர்வீர்களா அல்லது தற்போது நாற்காவியில் அமர்ந்து இருக்கிறீர்களா? தரையில் அமர்ந்து கொண்டு நாற்காலியில் அமர்வது இல்லை. முதலில் நீங்கள் என்று கூறி அப்படி இருக்க மாட்டீர்களே, தரையில் அமர்வது என்பது தவம் செய்வதின் அடையாளம், ஆரோக்கியத்தின் அடையாளம். ஆரோக்கியமும் உள்ளது, தனத்தின் மூலம் கஜானாக்களின் செல்வமும் உள்ளது. ஆக எங்கே ஆரோக்கியம் உள்ளதோ செல்வம் உள்ளதோ, அங்கு மகிழ்ச்சி இருக்கும். ஆக நல்லது- ஆரோக்கியமாகவும் இருக்கிறீர்கள், செல்வந்தர்களாகவும் இருக்கிறீர்கள்.

ஆக பாப்தாதா இன்று பார்த்துக் கொண்டிருக்கின்றார் -குழந்தைகளின் மூன்று விதமான நிலைகள் உள்ளன. 1. புருஷாரத்தி (முயற்சியாளர்) இதில் புருஷார்த்தியும் இருக்கிறார். மேலும் தீவிர புருஷாரத்தியும் இருக்கிறார். 2. முயற்சியினுடைய பலனை வாழ்க்கையில் விடுதலை (ஜீவன் முக்தி) பெற்ற நிலையின் அனுபவம் செய்து கொண்டிருக்கின்றனர் ஆனால் இறுதியில் சம்பூர்ண நிலை உள்ளது. தேகத்திலிருந்தாலும் விதேகி நிலையின் அனுபவம் ஆக மூன்று நிலைகளைப் பார்த்தோம். புருஷாரத்தி நிலையில் பெரும்பாலானோர் தென்பட்டனர். ஜீவன் முக்தியின் பலன் பலன் என்றால் சென்டருடைய நிமித்தமாக இருப்பது அல்லது நன்றாக சொற்பொழிவாற்றுவது, அல்லது நாடகத்தின் பிரகாரம் விதவிதமான விசேஷ சேவைக்காக நிரித்தமாவ... இது போன்ற பலன்கள் அல்ல. இது அவரவர்களுக்கு கிடைக்கின்ற, முன்னேறிச் செல்வதற்கான ஒரு தூக்குத் தூக்கி (லிஃப்ட்} அனைவரின் மூலமாகவும் ஆசீர்வாதத்தை பெறுவதற்கான லிஃப்ட்! ஆனால் ஜீவன் முக்தியின் பலனாகும் இது எந்த வித பந்தனமும் இருக்கக் கூடாது. நீங்கள் ஒரு படத்தில் காண்பிக்கிறீர்கள் அல்லவா! சாதாரண ஞானமில்லாத ஆத்மாவை எவ்வளவு கயிறுகள் போட்டு கட்டப்பட்டுள்ளது. அவை அஞ்ஞானி ஆத்மாக்களுக்கான இரும்பு சங்கிலி. பெரிய பெரிய பந்தனங்கள் ஆனால் ஞானம் நிறைந்த ஆத்மாக்களின் மிக ஆழமான மேலும் கவர்ந்திழுக்கக் கூடிய கயிறுகள் தற்போது இரும்பு சங்கிலிகள் கிடையாது. மிகவும் நுட்பமாக உள்ளது. சற்று ராயலாகவும் உள்ளது. பர்சனாலிட்டியை தனித் தன்மை) உணர்வதற்காகவும் உள்ளது ஆனால் அந்தக் கயிறுகள் பார்ப்பதற்குத்

தென்படுவதில்லை. நமது நல்லவைகள் மட்டும் உணர்வுக்கு வருகிறது. நல்லவையானது நல்லவைகள் இல்லை ஆனால் நான் மிகவும் நல்லவன் என்பது போல நினைக்கத் தோன்றுகிறது. நான் மிகவும் முன்னேறிக் கொண்டிருக்கின்றேன் ஆனால் பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார் இப்படிப்பட்ட வாழ்க்கையின் பந்தனத்தின் கயிறுகளானது பெரும்பாலோரிடம் தென்பட்டது. ஒன்றாக இருந்தாலும் சரி அல்லது பாதியாக இருந்தாலும் சரி, ஆனால் வாழ்க்கையின் விடுதலையை அதாவது ஜீவன் முக்தியை ஒரு சிலரிடம் மட்டுமே பார்க்க முடிந்தது. ஆக பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார், கணக்கு வழக்கின் பிரகாரம் இந்த இரண்டாவது நிலையான ஜீவன் முக்த், இறுதி நிலை தென்பட்டது அதாவது தேகத்திலிருந்து அப்பாற்பட்டு விதேகி ஆவது அந்த நிலை மற்றும் என்ன நிலையைப் பற்றிக் கூறினோமோ அதற்கு மிக மிக கவனம் தேவை. அனைத்து குழந்தைகளும் கேட்கின்றனர். 99ஆம் ஆண்டு வருமா வராதா? என்ன செய்வது? எதைச் செய்யக் கூடாது. பாப்தாதா கூறுகிறார் 99வது வருடத்தைப் பற்றிய விசயத்தை விடுங்கள். இப்பொழுதிலிருந்தே விதேகி நிலையின் அனுபவம் மிகவும் அதிகம் தேவை. என்னென்ன பிரச்சனைகள் வந்து கொண்டிருக்கின்றனவோ, மேலும் வர இருக்கின்றனவோ அதில் விதேகி நிலையின் அப்பியாசம் மிகவும் தேவை. ஆகவே அனைத்து விசயங்களையும் விட்டு விட்டு இப்படி நடக்காதே. அப்படி நடக்காதே எப்படி நடக்கும்? இந்த மாதிரியான கேள்விகளை எல்லாம் விட்டு விடுங்கள். விதேகி பயிற்சி செய்யக் கூடிய குழந்தைகளுக்கு எவ்விதமான பிரச்சனைகளோ அல்லது குழப்பமோ பாதிப்பை ஏற்படுத்த முடியாது. இயற்கையினுடைய 5-தத்துவங்களும் நன்றாக உங்களை அசைப்பதற்கு முயற்சி செய்யும் ஆனால் விதேகி நிலையின் அப்பியாசம் உள்ள ஆத்மாக்களுக்கு இம்மாதிரி முற்றிலும் மிக உறுதியாக இருக்கக் கூடிய தகுதியுடன் தேர்ச்சி பெறும் நிலையிருக்கும் யார் அனைத்து விசயங்களிலும் தேர்ச்சி பெறுகிறார்களோ, ஆனால் அவர்கள் பிரம்மாபாபாவுக்குச் சமமாக மதிப்புடன் தேர்ச்சி அடைபவர்களாக நல்ல தகுதியுடையவர்களாக இருப்பார்கள். பாப்தாதா ஒவ்வொரு சமயத்திலும் சைகையாகக் காண்பித்து கொண்டிருக்கின்றார். மேலும் காண்பிப்பார். நீங்கள் நினைக்கவும் செய்கிறீர்கள், திட்டமும் தீட்டுகின்றீர்கள், செய்யுங்கள், செய்யுங்கள்! எண்ணிப் பாருங்கள் ஆனால் என்னாகுமோ என்று ஆச்சரியத்துடன்

எண்ணக் கூடாது. விதேகி, சாட்சியாக இருந்து எண்ணிப் பாருங்கள், ஆனால் சிந்தித்தோம். திட்டங்களைத் தீட்டினோம். ஒரே வினாடியில் ப்ளைன் (ஒன்றுமில்லாத) காலியாக ஸ்திதியை வையுங்கள். தற்போதைய தேவை விதேகி நிலையின் தேவையாகும் இந்த விதேகி நிலையானது பர ஸ்திதியை (பிரச்சனைகளை) மிக எளிதில் கடக்கச் செய்யும். எப்படி என்றால் மேகம் வந்து உடனே கலைந்து சென்றுவிடும். மேலும் விதேகி மிகவும் உறுதியாக அசையாது விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கின்றனர். தற்போது கடைசி நேரத்தை எண்ணி கொண்டிருக்கின்றீர்கள் ஆனால் கடைசி ஸ்திதியை எண்ணிப் பாருங்கள்.

நாலாபுறங்களிலுமுள்ள சேவைச் செய்திகளை பாப்தாதா கேட்டுக் கொண்டிருக்கிறார். மேலும் உள்ளத்தாலும் களைப்பில்லா சேவாதாரிகளைப் பார்த்து வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். சேவையை மிகவும் உற்சாகம்-ஆர்வத்துடன் செய்கின்றனர். மேலும் செய்து கொண்டிருங்கள் ஆனால் சேவை மற்றும் ஸ்திதியில் சமநிலை (தராசு) சற்று குறைவு இந்தப் பக்கம் இறங்கி விடுகிறது. சில சமயம் அந்தப்பக்கம், எனவே நன்றாக சேவை செய்யுங்கள். பாப்தாதா சேவைக்காக மறுப்பு சொல்வதில்லை. மேலும் நேராகச் செய்யுங்கள் ஆனால் சேவை மற்றும் ஸ்திதியை சதா சரிசமமாக வையுங்கள்! ஸ்திதியை அமைத்துக் கொள்வதில் சற்று முயற்சி தேவைப்படுகிறது. எனவே சேவையின் பலன் ஸ்திதியை விட சற்று உயரமாகி விடுகிறது. சமநிலையை வையுங்கள் பாபாவிற்கும் அனைத்து சேவை செய்யக் கூடிய ஆத்மாக்களுக்கும் தொடர்பு, சம்மந்தத்தில் பேரக் கூடிய பிராமண குடும்பத்தின் ஆசிர்வாதத்தைப் பெற்றுக் கொண்டே செல்லுங்கள். இந்த ஆசிர்வாதங்களின் கணக்கை அதிகமாக சேமியுங்கள். தற்போதைய ஆசீர்வாதத்தின் கணக்கு குழந்தைகளாகிய உங்களிடம் அந்த அளவு அதிகமாகி விட வேண்டும். துவாபர யுகத்திலிருந்து உங்கள் சித்திரங்களின் (சிலைகள்) மூலம் அனைவருக்கும் ஆசீர்வாதம் கிடைத்துக் கொண்டே இருக்கட்டும். அநேக பிறவிகளுக்கு ஆசிர்வதாதங்களை அளிக்க வேண்டும் ஆனால் சேமிப்பு ஒரு பிறவியிலேயே செய்ய வேண்டும். ஆகவே என்ன செய்வீர்கள்? ஸ்திதியை எப்போதும் மூன் வைத்து சேவையில், முன்னேறிச் செல்லுங்கள். என்ன ஆகுமோ என்று நினைக்காதீர்கள்.

## 1998 அவ்யக்த முரளி

பிராமண ஆத்மாக்களுக்கு நல்லது நல்லதே நடக்கும், ஆனால் சமநிலையில் இருப்பவர்களுக்கு எப்போதுமே நன்றாக இருக்கும். சமநிலை குறைவாக இருந்தால் சில சமயம் நன்றாக இருக்கும். சில சமயம் சற்று நன்றாக இருக்கும். என்ன செய்ய வேண்டும் என கேட்டீர்களா? கேள்விக் குறியை நினைக்கும் கணக்கிலிருந்து ஆச்சர்யப்பட்டு நினைப்பதையும் முடித்துவிடுங்கள். இது நடக்காது, இது நடக்காது.... இது ஸ்திதியை மேலும் கீழும் ஆக்கி விடுகிறது. புரிந்ததா?

புதிது புதிதாக அனேகர் வந்துள்ளனர். இந்த கல்பத்தில் முதன் முறையாக மதுபன் வந்திருப்போர். கை உயர்த்துங்கள். மிகவும் நன்று! பாப்தாதா புதுப்புது குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகிறார். வாருங்கள் குழந்தைகளே! வாருங்கள். குழந்தைகளே என வரவேற்கிறார். நல்லது இறுதி கால முடிவிற்கு முன்னரே வந்து சேர்ந்து விட்டீர்கள், பிறகும் கூட சம்திக்கின்ற நேரத்தில் வந்தடைந்துள்ளீர்கள். எனவே பின்னால் வரக் கூடியவர்களுக்கு முன்னேறிச் செல்வதற்கு இன்னும் வாய்ப்பு உள்ளது. எனவே நீங்கள் டொன்னான வாய்ப்பினை எடுத்துக் கொள்ளுங்கள். நல்லது.

குஜராத்திலிருந்து சமர்ப்பணமாகும் குமாரிகளின் குரூப் வந்துள்ளது. (அஹமதாபாத் மேளாவில் 38-குமாரிகளின் சமர்ப்பண விழா நவம்பர்-13 அன்று கொண்டாடப்பட்டது. அவர்கள் அனைவரும் பாப்தாதாவின் முன்னர் அமர்ந்துள்ளனர். சமர்ப்பணம் ஆகி விட்டீர்கள், நல்லது. (சேவையும் நடந்தது. கொண்டாடவும் செய்தீர்கள். சேவையின் பாக்கியத்தையும் ஏற்படுத்திக் கொண்டீர்கள். இன்னும் சமர்ப்பண விழா கொண்டாட வேண்டுமா? அல்லது முடிந்து விட்டதா? பாப்தாதா இதைத் தான் கூறுவார். இந்த (குழு) குருப்பும் பந்தன் முக்தியின் சமர்ப்பண விழா கொண்டாட வேண்டும். அதற்கான சக்தி தைரியம் உள்ளதா? இருக்கிறது என்றால் ஒரு கை அசையுங்கள். ஒருவர் பிறரைப் பார்த்து கை தூக்கக் கூடாது. அஹமதாபாத்துக்கோ வரதானம் உள்ளது. சேவையின் பலனும் உள்ளது. எனவே அப்படிபட்ட சமர்ட்பண விழாவைக் கொண்டாடுங்கள். பிறகு பாப்தாதா பரிசு தருவார். சரிதானே! முதலில் நான்! இதில் பிறரைப் பார்க்கக் கூடாது. முதலில் பெரியவர்கள் செய்யட்டும். பிறகு நாம் செய்வோம். அப்படி இல்லை! முதலில் நான்! சரியா? இந்த விசயத்தின் மீது கருத்துக்களைப்

பரிமாறிக் கொள்ளுங்கள். மேலும் ஒருவர் மற்றவருக்கு உறுதி மொழியை ஞாபகப்படுத்தி முன்னேறிச் செல்ல வேண்டும். மிகவும் நல்லது.

பஞ்சாப்காரர்கள்: முதல் குரூப்பில் சேவை செய்துள்ளனர். நல்லது, பெரிய குரூப் நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. பஞ்சாபிற்கு விசேஷமாக ஒரு விசயத்தில் வழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். என்னவென்று அறிவீர்களா? பஞ்சாப் வறட்சியான நிலத்தை பலன் கரக் கூடியதாக மாற்றுவதில் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளனர். நல்ல முன்னேற்றும். அதற்காக வாழ்த்துக்கள்! மேலும் பஞ்சாப் சிங்கம் என வர்ணிக்கப்பட்டுள்ளது. உங்கள் தாதி (சந்திரமனிஜிர் யையும் பஞ்சாபின் சிங்கம் எனக் கூறினர். ஆக நீங்கள் அனைவரும் சிங்கங்கள் தானே! ஆக சிங்கம் எதை வேட்டையாடுவீர்கள்? ஆட்டையா? இன்னொரு சிங்கத்தை வேட்டையாடுவதே நம்பர்-1 சிங்கமாகும். தற்போது பஞ்சாபின் பூமி நன்றாகி விட்டது. தற்போது இப்படிப்பட்ட விசேஷ வாரிசை உருவாக்குங்கள். இதுவே சிங்க வேட்டை! யாரேனும் மண்டலேஷ்வருக்கு விசேஷ சேவை செய்து அடுத்த சீசனில் அழைத்து வாருங்கள். அடுத்த சீசனில் பஞ்சாபிலிருந்து எவ்வளவு வாரிசுகள் வருவர் எனப்பார்ப்போம். நல்லது -சேவையின் நறுமணம் நன்றாக உள்ளது. அனைவரும் திருப்தியாக உள்ளனர். மேலும் திருப்திப்படுத்துகிறார்கள். வாழ்த்துக்கள்!

இரட்டை வெளிநாட்டினரும் அனேகர் வந்துள்ளனர்) வெளிநாட்டு குரூப் எழுந்திருங்கள். வெளிநாட்டில் உள்ள ஒரு விசேஷம் பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்துள்ளது. என்ன அது? அனைவருக்கும் உற்சாகம் ஆர்வம் உள்ளது. வெளிநாட்டின் ஒவ்வொரு மூலையிலும் கிளை ஏற்படுத்த வேண்டுமென்று ஏற்படுத்தியும் உள்ளீர்கள். இந்த ஆண்டு எத்தனை புதுக்கிளைகள் ஆரம்பித்துள்ளீர்கள்? (12-15) நாலாபுறமும் செய்தி பர வேண்டும் என நல்ல உற்சாகம் உள்ளது. இந்த லட்சியம் மிக நல்லது. எங்கு சென்றாலும் அங்கே யாரையேனும் நிமித்தமாக வைக்கும் சேவையின் லட்சியம் நன்றாக வைக்கின்றனர். இது விசேஷமாகும். ஒவ்வொருவரும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தன்னை சேவைக்கு மிமித்தமாக்க முன் வருகின்றனர். ஒவ்வொரு வீட்டிலும் பாபாவின் வீடு இருக்க வேண்டும் என நினைக்கின்றனர். இந்த உற்சாகம் ஆர்வம்

மிகவும் நல்லது. இந்த உற்சாகம்-ஆர்வத்திற்காக பாப்தாதா மேலும் முன்னதாகவே முன்னேறிச் செல்வதற்கான வாழ்த்துக்களை வழங்கிக் கொண்டிருக்கிறார். பாப்தாதா வெளிநாட்டு அதாவது விஷ்வ கல்யாண் (உலக நன்மை செய்வதற்கு காரணமாகவுள்ள குழந்தைகளுக்கு இதையே கூறுகிறார். தற்போது சேவை மற்றும் விதேகி நிலையில் நம்பர்-1 ஆக வெளிநாட்டு குழந்தைகளே ஆக வேண்டும். ஆகவேண்டும்! எப்போது? 99'ல்லா அல்லது இரண்டாயிரத்திலா? எப்போது இல்லை. இப்போதே!

அவ்யக்த பாப்தாதாவின் பாலனையின் தெளிவான பலனைத் தர வேண்டும். எப்படி பிரம்மாபாபா அவ்யக்தமாகி, விதேகி ஸ்திதியின் மூலம் கர்மாதீத் ஆனார். ஆக விசேஷமாக பிரம்மாவின் விசேஷ பாலனைக்குப் பாத்திரமானவர்கள். எனவே அவ்யக்த பாலனையின் பதிலை பாபாவிற்கு விதேகி ஆவதன் மூலம் தர வேண்டும். சேவை மற்றும் ஸ்திதியின் பலனைத் தருவதன் மூலம், சரியா? சம்மதமா? செய்தே தீர வேண்டும். உங்கள் மொழியில் கூறுங்கள் செய்தே ஆக வேண்டும் டி.வியிலும் அனேகர் பார்க்கின்றனர். அவர்களும் அவ்வாறு கூறுகின்றனரல்லவா? பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். பாரதத்தில் பார்த்துக் கொண்டிருந்தாலும் சரி. வெளி நாட்டிலும் சரி. அனைவருக்கும் உற்சாகம் எழுகிறது. நாம் செய்வோம். நாம் செய்வோம்! நாம் செய்தே ஆக வேண்டும். முன்னதாகவே அதற்காக வாழ்த்துக்கள் நல்லது

நாலாபுறங்களிலுமுள்ள சர்வ சிரேஷ்ட பாக்கியவான் சர்வ சிரேஷ்ட கஜானாக்களின் எஜமானர், சதா சேவை மற்றும் ஸ்திதியை சமமாக வைக்கக் கூடிய ஞானம் நிறைந்த ஆத்மா, சர்வ சக்தி நிறைந்த ஆத்மாக்கள், சதா பந்தன் முக்த், ஜீவன் முக்த் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே!

வரதானம்: பரிட்சைகள் மற்றும் பிரச்சனைகளுக்குப் பதிலாக மனோரஞ்சன் (மன மகிழ்ச்சி) அனுபவம் செய்யக் கூடிய சதா வெற்றியாளர் ஆகுக!

ஒவ்வொரு புருஷார்த்தி வாழ்க்கையிலும் நாடகப் பிரகாரம் பிரச்சனைகள் மற்றும் பரஸ்திதிகள் வரத்தான் செய்யும். பிறவி எடுத்தவுடனேயே முன்னேறிச் செல்வதற்கான லட்சியம் வைக்க வேண்டும். அதாவது சோதனைகளையும், பிரச்சனைகளையும் வரவேற்க வேண்டும். வழியைத் தீர்மானிக்க வேண்டும் எனில் இது எப்படி நடக்கும் என்ற கண்ணோட்டம் கூடாது, ஆனால் அந்த கண்ணோட்டத்திற்குப் பதிலாக அதை திருத்துவதற்கு முற்பட்டால் பயா நினைவு தளர்ந்து விடுகிறது. மேலும். மனோரஞ்சனுக்குப் பதிலாக மனதை வாடச் செய்து விடுகிறீர்கள். எனவே ஆஹா என்ற அற்புத காட்சி ஆஹா! என்னும் பாடலைப் பாடி முன்னேறுங்கள். அதாவது சதா வெற்றியாளர் ஆகுக என்னும் வரதானி ஆகுக!

சுலோகன்: விதிமுறைகளுக்கு உட்பட்டு நடப்பது என்றால் மரியாதா புருஷோத்தம் ஆவது!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺ ✺✺✺✺✺✺✺

## 12.12.1998 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# என்னுடையது, என்னுடையது என்ற தேக அபிமானத்தை விட்டு விட்டு பிரம்மாபாபாவின் பாத அடி மேல் அடி எடுத்து வையுங்கள்!

இன்று பாப்தாதா நாலாபுறங்களிலுமுள்ள தன்னுடைய உயர்ந்த பிராமண ஆத்மாக்களை பார்த்துக் கொண்டிருக்கிறோம். பிராமணன் என்றால் பிரம்மாவின் வாய்வழி பிறந்தவர். ஒவ்வொரு பிராமண ஆத்மாவின் பாக்கியத்தையும் பார்த்து பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்கும் பிறந்தவுடனேயே நெற்றியில் சுயம் பிரம்மாபாபா மூலமாக நினைவின் திலகம் இடப்படுகிறது. சுயம் பகவான் உங்களை திலகம் இடப்பட்டவராக ஆக்குகிறார். கூடவே ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்கும் தூய்மையின் மகாமந்திரம் மூலமாக ஒளியின் கிரீடத்தை அணிவிக்கிறார். மேலும் கூடவே ஒவ்வொரு பிராமண ஆத்மாவையும் உலகிற்கு நன்மை செய்யும் ஆத்மாவாக ஆக்கி, பொறுப்பின் கிரீடத்தை அணிவிக்கிறார். இரண்டு கிரீடங்கள் இருக்கின்றன. மேலும் பகவான் அவரே தன்னுடைய இதய சிம்மாசனதாரியாக ஆக்குகிறார். அப்படி பிறந்தவுடனேயே திலகமிட்டவராக, கிரீடம் அணிந்தவராக மற்றும் ஆசனத்தில் அமர்ந்திருப்பவராக ஆகி விடுகிறீர்கள். அந்த மாதிரி உயர்ந்த பாக்கியம் முழுக் கல்பத்தில் எந்த ஆத்மாவிற்கும் இருக்க முடியாது, அப்படியானால் நான் பிராமணன் பிறந்தவுடனேயே அந்த மாதிரி பாக்கியம் நிறைந்தவனாக ஆகிறேன் என்ற இந்த அளவு உயர்ந்த பாக்கியத்தின் நினைவு இருக்கிறதா? பிராமணர்கள் உங்களுடைய அடையாளமாக உலகத்தினர் கிருஷ்ணரின் ரூபத்தைக் காண்பித்திருக்கிறார்கள் ஆனால் அவர் உலகின் இராஜ்குமார் ஆவார்.

எனவே இராஜபதவியின் அடையாளமாக திலகம், கிரீடம், ஆசனம் கொடுக்கிறார்கள். ஆனாலும் அவருக்கு சிறு வயது பருவத்தில் திலகம், கிரீடம், ஆசனம் கிடைப்பதில்லை ஆனால் பிராமணர்கள் உங்களுக்கு திலகம். கிரீடம் மற்றும் ஆசனம் மூன்றுமே பிராப்தியாக கிடைக்கிறது. தந்தை பரமாத்மா மூலமாக இந்த மூன்று பிராப்திகளும் கிடைப்பது பிராமணர்கள் உங்களுடைய பாக்கியத்தில் மட்டும் தான் இருக்கிறது. அப்படி என்னுடைய குழந்தைகளுக்கு எவ்வளவு பெரிய பாக்கியத்தின் நட்சத்திரம் ஒவ்வொருவரின் நெற்றியில் மினுமினுத்துக் கொண்டிருக்கிறது, என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். எப்பொழுதுமே மினுமினுத்துக் கொண்டிருப்பதாகத் தென்படுகிறதா அல்லது சில நேரம் நன்றாக மினுமினுக்கிறது, சில நேரம் நட்சத்திரத்தின் மினுமினுப்பு குறைந்து விடுகிறதா? இந்த பாக்கியத்தின் நட்சத்திரம் விசித்திரமான நட்சத்திரம் ஆகும். அப்படி பாப்தாதா குழந்தைகள் உங்கள் அனைவரையும் எப்பொழுதெல்லாம் பார்க்கிறாரோ. சந்திக்கிறாரோ அப்போதெல்லாம் ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். நட்சத்திரம் மின்னிக் கொண்டிருக்கும் போதே அதனுடைய பிரகாசம் ஏன் குறைந்து விடுகிறது. அதற்கான காரணத்தை நீங்கள் அனைவரும் நன்றாகத் தெரிந்திருக்கிறீர்கள்.

பாப்தாதாவிற்கு குழந்தைகளின் சார்ட்டைப் பார்த்து புன்முறுவலும் வருகிறது, எப்பொழுதாவது யாரிடமாவது என்ன ஆகப் போகிறீர்கள்? லட்சியம் என்ன? என்று கேட்டால் பெரும்பான்மையோருடைய பதிலாக நம்பர் ஒன் ஆக வேண்டும் என்கிற ஒரே ஒரு பதில் தான் வருகிறது. சூரியவம்சி ஆக வேண்டும். சந்திரவம்சத்து இராஜா ராம் சீதை ஆவதற்கும் விரும்புவதில்லை ஆனால் எப்பொழுது லட்சியம் சூரியவம்சத்து நம்பர் ஒன்-ஆக வேண்டும் என்று இருக்கிறது என்றால், லட்சியம் எப்படியோ அதே போல் லட்சணமும் சூரியவம்சத்தினுடையதாக எப்பொழுதும் தென்படுவது அவசியமாகும். குழந்தைகளின் லட்சியம் சூரிய வம்சத்தினுடையது அதாவது எப்பொழுதும் வெற்றி அடைபவரினுடையது, நம்பர் ஒன் சூரியவம்சத்தினரின் அடையாளம் எப்பொழுதும் வெற்றி அடைபவர். சூரியனின் கலைகள் கூடுவது, குறைவது ஆவதில்லை. உதயமாகிறது மற்றும் அஸ்தமனம் ஆகிறது, ஆனால் சந்திர வம்சத்தினர் மாதிரி

கலைகள் குறைவதில்லை. அப்படி சூரியவம்சத்தின் அடையாளம் எப்பொழுதும் ஒரே சீரான நிலை மற்றும் எப்பொழுதும் வெற்றி அடைபவர். சந்திர வம்சத்தினரை சத்திரியன் என்று கூறப்படுகிறது, சக்திரியனின் வாழ்க்கையில் சில நேரம் தோல்வி, சில நேரம் வெற்றி இருக்கும். சில நேரம் வெற்றி சொரூபமானவர் மற்றும் சில நேரம் கடின உழைப்பு சொருபமான இருப்பார். யுத்தம் செய்வது என்றால் கடினமாக உழைப்பது. சந்திர வம்சத்தினரின் கலைகள் ஒரே சீராக இருக்காது. எனவே லட்சியம் மற்றும் லட்சணத்தை சமமாக்குங்கள். எப்படி தந்தைக்குச் சமமாக ஆவதற்கான லட்சியம் வைத்திருக்கிறீர்கள். ஒவ்வொரு குழந்தையும் தந்தைக்குச் சமமாக வேண்டும் என்ற இதைத் தான் கூறுகிறாகள். தந்தையோ எப்பொழுதம் சகஜ வெற்றி சொரூபமாக இருக்கிறார். ஒருவேளை ஒரே சீரான நிலை இல்லை என்றால் நம்பர் ஒன் ஆகஆகமுடியுமா என்ன? அல்லது வரிசைக்கிரமத்தில் வருவீர்களா? ஒன்று, நம்பர் ஒன் மற்றும் இன்னொன்று வரிசைக்கிரமம். எனவே நான் நம்பர் ஒன் ஆக இருக்கிறேனா அல்லது வரிசைக்கிரமத்தின் பட்டியலில் இருக்கிறேனா? என்று தன்னைத் தானே கேளுங்கள். நம்பர் ஒன் என்றால் பிரம்மாபாபாவைப் பின்பற்றுவது.

பின்பற்றி நடப்பதில் கடின உழைப்பு குறைவாக இருக்கும். இந்த சகஜ வழியை பாப்தாதா கூறுகிறார். பிரம்மாபாபாவின் கால்கள் அதாவது அடி, ஒவ்வொரு காரியத்தின் அடி என்ற காலின் அடையாளம், அப்படி அடி மேல் அடி எடுத்து வைத்துச் செல்வது சுலபமாக இருக்கும். புதிய வழியைத் தேடக்கூடாது, அடி மேல் அடி வைத்துச் செல்ல வேண்டும். என்ன காரியம் செய்தாலும் அது மனதின் எண்ணமாக இருந்தாலும், பேசும் வார்த்தைகளாக இருந்தாலும், காரிய விவகாரத்தில் உறவு தொடர்பில் வருகிறீர்கள் என்றாலும் ஒவ்வொரு காரியம் செய்வதற்கு முன்பு நான் பிராமண ஆத்மா காரியம் செய்து கொண்டிருக்கிறேன், இந்தக் காரியம் பிரம்மாபாபாவின் காரியத்திற்குச் சமமாக இருக்கிறதா? என்று யோசியுங்கள். ஒருவேளை இல்லை என்றால் செய்யக்கூடாது, நினைக்கவும் கூடாது, பேசவும் கூடாது, செய்யவும் கூடாது. பிரம்மாபாபா எடுத்து வைத்த அடி ஒன்று மற்றும் குழந்தைகள் எடுத்து வைக்கும் அடி இன்னொன்று என்றால் தந்தைக்குச் சமமாக ஆவதற்கான லட்சியம் மற்றும் இலக்கு எப்படி நிறைவேற முடியும்.

ஒருவேளை பிரம்மாபாபாவின் காலடிக்குச் சமமாக அடி மேல் அடி வைத்து பின்பற்றி நடந்து கொண்டே இருந்தீர்கள் என்றால், ஒன்று தன்னை சுலபமாக முயற்சி செய்பவராக அனுபவம் செய்வீர்கள். மேலும் சம்பூர்ண நிலையின் லட்சியத்தை அருகாமையில் அனுபவம் செய்வீர்கள்.

பிரம்மாபாபாவிற்குச் சமம் என்றால், சம்பூர்ணத்தின் இலட்சியத்தை சென்றடைவது. அப்படி பிரம்மாபாபா வதனத்தில் குழந்தைகள் நீங்கள் அனைவரும் சம்பூர்ண அவ்யக்த ஃபரிஷ்தா ஆவதற்கான ஆவாஹனம் (அழைப்பு) செய்து கொண்டிருக்கிறார். பிரம்மாபாபாவின் ஆவாஹனத்தின் பாடல் அல்லது இனிமையான அவாஹனத்தின் ஓசை கேட்கவில்லையா? வாருங்கள் குழந்தைகளே, இனிமையான குழந்தைகளே, விரைவில் வாருங்கள் இந்த பாடல் மற்றும் வார்த்தைகள் கேட்கவில்லையா? பிரம்மாபாபாவின் அழைப்பைக் கேளுங்கள், கேட்ச் செய்யுங்கள் (புத்தியால் புரிந்து கொள்ளுங்கள்). குழந்தைகள் 99 வது வருடத்தைப் பற்றி என்ன ஆகும்? இது ஆகுமா, அது ஆகுமா இது ஆகுமா அல்லது ஆகாதா என்று அதிகமாக யோசிக்கிறார்கள் என்று பிரம்மாபாபா கூறுகிறார். இந்த யோசனையில் அதிகமாக இருக்கிறார்கள். இது நடந்து விடாதே, சில நேரம் யோசிப்பார்கள், சில நேரம் யோசிக்காமல் இருப்பார்கள். இது ஆகுமா, அது ஆகுமா என்ற பாடலைப் பாடிக் கொண்டே இருக்கிறார்கள் ஆனால் தன்னுடைய ஃபரிஷ்தா நிலையின், சம்பன்ன, சம்பூர்ண நிலையில் மிக வேகமாக முன்னேறிச் செல்வதற்கான உயர்ந்த எண்ணத்தைக் குறைவாக வைக்கிறார்கள். ஆகுமா, என்ன ஆகும். இந்த ஆகுமா. ஆகுமா என்ற பாடலை அதிகம் பாடுகிறார்கள். தந்தை கூறுகிறார் என்ன தான் ஆனாலும் உங்களுடைய லட்சியம் என்ன? என்ன ஆகுமோ அதைப் பார்ப்பதும், பார்ப்பதற்கான மற்றும் கேட்பதற்கான லட்சியம் இருக்கிறதா அல்லது பிரம்மாபாபாவிற்குச் சமமாக ஃபரிஷ்தா ஆவதற்கான லட்சியம் இருக்கிறதா? அதற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டீர்களா? இயற்கை தன்னுடைய விளையாட்டை எந்த மாதிரி காண்பித்தாலும் நீங்கள் ஃபரிஷ்தா ஆகி, தந்தைக்குச் சமமான அவ்யக்த ரூபம் உடையவராகி இயற்கையின் ஒவ்வொரு காட்சிகயையும் பார்ப்பதற்காக தயாராகி விட்டீர்களா? இயற்கையின் சீற்றங்களின் பாதிப்பிலிருந்து விடுபட்ட ஃபரிஷ்தாவாக ஆகி

விட்டீர்களா? தன்னுடைய நிலையை தயார் செய்வதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்களா அல்லது என்னவாகும், என்னவாகும் என்ற இதை யோசிப்பதிலேயே ஈடுபட்டிருக்கிறீர்களா? எப்படிப்பட்ட சூழ்நிலை எதிரில் வந்தாலும் இயற்கையின் தலைவனான நீங்கள் தன்னுடைய இயற்கையின் தலைவன் என்ற ஆசனத்தில் அமர்ந்திருப்பீர்களா அல்லது கீழே இறங்கி விடுவீர்களா? இது என்னவாகி விட்டது? இந்த மாதிரி ஆகி விட்டது, இந்த மாதிரி ஆகி விட்டது. இதே காட்சிகளின் செய்திகளிலேயே பிஸியாக இருப்பீர்களா அல்லது முழுமையின் நிலையில் நிலைத்திருந்து எந்தவொரு இயற்கையின் சீற்றங்களைக் கடந்து சென்று கொண்டிருக்கும் மேகங்களுக்குச் சமமாக அனுபவம் செய்வீர்களா?

அப்படி பிரம்மாபாபா குழந்தைகளிடம் எனக்குச் சமமாக ஃபரிஷ்தாவாக நிரந்தரமாக ஆகியிருக்கிறீர்களா என்று கேட்கிறார். ஏனென்றால் குழந்தைகள் நீங்கள் வியக்தத்தில் (உடலில்) இருந்து கொண்டே அவ்யக்தம் ஆக வேண்டும். தந்தையோ அவ்யக்தம் ஆகி விட்டார். எங்களையும் அந்த மாதிரி அவ்யக்தமாக ஆக்கி விட வேண்டும் இல்லையா என்று நீங்கள் கூறுவீர்கள். பிரம்மாபாபா கூறுகிறார் -உலகிற்கு நன்மை செய்யும் காரியத்தின் பொறுப்பு கிரீடத்தை தந்தை உங்களுக்கு அணிவித்திருக்கிறார் என்றால் உங்களை நீங்களே அந்தக் காரியத்தை நிறைவேற்றி விட்டேனா என்று கேளுங்கள். உலகிற்கு நன்மை செய்பவர், உலகிற்கு நன்மை செய்யும் காரியம் முடிவடைந்து விட்டதா? பிரம்மாபாபா அவ்யக்தமாக ஆனதற்கான காரணமோ குழந்தைகளுக்கு உலக நன்மைக் காரியத்தை கொடுத்து விட்டு, பந்தனத்திலிருந்தும் விடுபட்டு, சேவையின் வேகத்தை அதிகப்படுத்துவதற்கான பொறுப்பாளர் ஆக வேண்டியதாக இருந்தது. அதனுடைய பிரத்யக்ஷ சொரூபத்தை நாலாபுறங்களிலும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். பாரதத்திலும் வெளிநாட்டிலும் அவ்யக்த பிரம்மாபாபா மூலமாக அதிவேகம் ஏற்பட்டது மற்றும் ஏற்படத்தான் வேண்டும். சேவையில் தீவிர வேகத்தின் பொறுப்பாளராக பிரம்மாபாபா ஆக வேண்டும் என்றிருந்தது ஆனால் இராஜ்ய அதிகாரியாக ஒரே ஒரு பிரம்மாபாபா மட்டும் ஆனால் போதாது, கூடவே குழந்தைகளும் இராஜ்ய அதிகாரத்தைப் பெற வேண்டும். எனவே இவ்வுலகில் பொறுப்பாளராக சாகார உடலுள்ள குழந்தைகள் உங்களை ஆக்கினார்

ஆனால் இறுதியில் குழந்தைகள் நீங்கள் அனைவரும் வியக்தத்திலிருந்து கொண்டே அவ்யக்த ஃபரிஷ்தா ஆகி, உலக நன்மை காரியத்தின் சேவையை அதிகப்படுத்தி, நிறைவு விழாவை இன்னும் செய்ய வேண்டும்.

99-ல்) முடித்து விடலாமா? என்று பிரம்மாபாபா கூறுகிறார். ஒரு கை தட்டினால் இயற்கையும் தயாராகி விடும். அப்படி ஃபரீஷ்தாவிற்குச் சமமாக டபுள் லைட் ஆகியிருக்கிறீர்களா? குறைந்தது 108- அந்த மாதிரி எப்பொழுதும் வெற்றி அடைபவர்கள் உருவாகியிருக்கிறார்களா? அதன் மூலம் எந்த விதமான வீணான மற்றும் எதிர்மறையான எண்ணம், வார்த்தை மற்றும் காரியம் அதாவது அனைவரின் உறவு தொடர்பில் தேர்ச்சி அடைந்திருக்கிறீர்களா? வீணானவை மற்றும் எதிர்மறை. இந்த சுமை தான் எப்பொழுதும் டபுள் லைட் ஃபரிஷ்தா ஆகவிடுவதில்லை. எனவே இந்த சுமையிலிருந்து லேசாகி ஃடரிஷ்தா ஆகியிருக்கிறீர்களா என்று பிரம்மாபாபா கேட்கிறார், இதில் எப்பொழுதும் என்பதை இரட்டை அடிக்கோடிடுங்கள். குறைந்தது 108- பேரோ எப்பொழுதும் ஃபரிஷ்தா வாழ்க்கையை அனுபவம் செய்ய வேண்டும். அப்பொழுது தான் பிரம்மாபாபாவிற்குச் சமமாக ஆக வேண்டும் என்று கூறுவார்கள். எனவே தந்தை கேட்கிறார், கைத்தட்டலாமா? அல்லது 2000-மாம் ஆண்டு கைத்தட்டலாமா, 2001-ம் ஆண்டு கைத்தட்டலாமா. எப்பொழுது தட்டலாம். என்ன யோசிக்கிறீர்கள்? கைத்தட்டியவுடன் என்றால் அந்த நேரம் ஆகி விடுவீர்கள் அப்படியா? கைத்தட்டப்பட்டால் அந்த நேரம் ஆகி விடுவோம் என்று அப்படி யோசிக்கிறீர்களா? என்னவாகும்? கைத்தட்டலாமா? கூறுங்கள் தயாராக இருக்கிறீர்களா? பரீட்சை வைக்கலாமா? அப்படியே எப்படி ஏற்றுக்கொள்வோம். பரீட்சை வைப்போம். ஆசிரியைகள் ப்ரீட்சை வைக்கலாமா என்று கூறுங்கள். அனைத்தையும் விட வேண்டியதாக இருக்கும். மதுபனைச் சேர்ந்தவர்கள் மதுபனை விட வேண்டியதாக இருக்கும், ஞானசரோவரைச் சேர்ந்தவர்கள் ஞான சரோவரை, சென்டரில் இருப்பவர்கள் சென்டரை, வெளிநாட்டில் இருப்பவர்கள் வெளிநாட்டை விட வேண்டியதாக இருக்கும். அப்படியானால் எதற்கும் தயார் நிலையில் இருக்கிறீர்களா? ஒருவேளை எப்பொழுதும் தயார் நிலையில் இருக்கிறீர்கள் என்றால் கைதட்டுங்கள். தயாராக இருக்கிறீர்களா? பரீட்சை வைக்கலாமா? நாளை அறிவுப்பு

செய்யலாமா? அங்கே சென்று விட வேண்டியது என்பதில்லை. அங்கே சென்று கொஞ்சம் சரி செய்து வரட்டுமா என்பது கூட இல்லை. எங்கு இருக்கிறேனோ அங்கேயே இருக்கிறேன். அந்த மாதிரி எதற்கும் தயார் நிலையில் இருப்பவர். தன்னுடைய அலுவலகம் இல்லை, கட்டிலும் இல்லை, அறையும் இல்லை மற்றும் அலமாரியும் இல்லை. அந்த மாதிரி கூட சொல்லாதீர்கள். கொஞ்சம் வேலை இருக்கிறதல்லவா, இரண்டு நாட்களுக்காக சென்று வரட்டுமா என்று அப்படியும் வேண்டாம். ஆர்டர் என்றால் ஆர்டர். யோசித்து சரி என்று கூறுங்கள். இல்லை என்றால் எங்கே செல்ல வேண்டும் மற்றும் எங்கே செல்ல வேண்டாம் என்ற ஆணையும் நாளை வெளியாகும். ஆணை பிறப்பிக்கலாமா, தயாராக இருக்கிறீர்களா? அவ்வளவு தைரியத்துடன் சரி என்று கூறவில்லை. சிலர் ஒரு நாள் கிடைத்து விட்டது என்றால் நன்றாக இருக்கும் என்று யோசிக்கிறார்கள். நான் இல்லாது, என்றால் இந்த மாதிரி ஆகி விடக்கூடாது, அது ஆகி விடக்கூடாது என்ற இந்த வீணான எண்ணமும் இருக்க வேண்டாம். பிரம்மாபாபா மாற்றமாகிச் சென்றபோது நான் இல்லை என்றால் என்ன ஆகும் என்று யோசித்தாரா? நடக்குமோ, நடக்காதோ! ஒரே ஒரு டைரக்ஷனையாவது கொடுத்து விடுகிறேன் என்று அப்படி டைரக்ஷன் கொடுத்தாரா? தன்னுடைய சம்பன்ன நிலை மூலமாக டைரக்ஷன் கொடுத்தார், வாய் மூலம் கொடுக்கவில்லை. அந்த மாதிரி நீங்களும் தயாராக இருக்கிறீர்களா? ஆணை கிடைத்தது மற்றும் விட்டீர்கள் என்றால் தான் விடுபடும். அந்த மாதிரி செய்ய வேண்டும் என்று இதைக் கூறிவிடுகிறோம். ஆணை பிறப்பிக்கப்படும், கேட்டு செய்யப்பட மாட்டாது. தேதியை நிர்ணயம் செய்ய மாட்டோம். வந்து விடு என்று திடீரென்று கட்டளை பிறப்பிப்போம் அவ்வளவு தான்! இதைத் தான் டபுள் லைட் பரிஷ்தா என்று சொல்வது. ஆணை கிடைத்தது மற்றும் சென்றார். எப்படி மரணத்தின் ஆணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சென்டரை பார்க்கவா, அலமாரியை பார்க்கவா, மாணவர்களைப் பார்க்கவா, என்னுடைய இலாகாவைப் பார்க்கவா என்று அப்படி யோசிப்பீர்களா? இன்றைய நாட்களிலோ என்னுடையது, என்னுடையது என்று இலாக்காக்களின் குழப்பம் அதிகமாகி விட்டது. என்னுடைய ஏரியா என்று பிரச்சனை உருவாக்கியிருக்கிறது உலகிற்கு நன்மை செய்பவருக்கு எல்லைக்குட்பட்ட ஏரியா என்னவாக இருக்கும்? இவை அனைத்தையும் விட வேண்டியதாக இருக்கும். இதுவும் தேக

அபிமானம் ஆகும். தேகத்தின் உணர்வு இருந்தாலும் லேசானது, ஆனால் தேக அபிமானம் மிக சூட்சுமமானது. என்னுடையது, என்னுடையது என்ற இதைத் தான் தேகத்தின் அபிமானம் என்று சொல்வது. எங்கு என்னுடையது இருக்குமோ அங்கு அவசியம் அபிமானம் இருக்கும். அது தன்னுடைய விசேஷத்திற்காகவும் இருக்கலாம். என்னுடைய விசேஷம், என்னுடைய குணம், என்னுடைய சேவை, இந்த அனைத்து என்னுடையது என்பது பிரபுவின் பிரசாதமாகும். என்னுடையது அல்ல. பிரசாதத்தை என்னுடையது என்று நினைப்பது தேக அபிமானம் ஆகும். இந்த அபிமானத்தை விடுவது தான் சம்பன்னம் ஆவது. எனவே ஃபரிஷ்தா என்றால் தேக அபிமானம், தேக உணர்வு வித விதமான என்னுடையதின் உறவுகள் இல்லாத நிலையைத் தான் ஃபரிஷ்தா என்று வர்ணிக்கிறீர்கள். ஃபரிஷ்தா என்றால் இந்த எல்லைக்குட்பட்ட உறவு இல்லாத நிலை. அப்படியானால் இப்பொழுது என்ன தயார் செய்வீர்கள்? பிரம்மாபாபாவின் பேச்சை கவனமாகக் கேளுங்கள், உங்களை வாருங்கள் என்று அழைத்துக் கொண்டிருக்கிறார். முடிவின் முரசை ஒலிப்பது மிகவும் சுலபம், எப்பொழுது விரும்பினாலும் அதை ஒலிக்க முடியும் என்று தந்தை கூறுகிறார் ஆனால் குறைந்த பட்சம் சத்யுகத்தின் தொடக்கத்தில் வரும் ஒன்பது லட்சமாவது தயாராக வேண்டும் இல்லையா? அவர்கள் வரிசைக்கிரமமாக இருந்தாலும் முதலில் வருபவர்கள் கொஞ்சபேர் தான் தான் இருப்பார்கள். குறைந்ததிலும் குறைந்தது 108--நம்பர் ஒன், 16000-இரண்டாம் நம்பர். 9-லட்சம் மூன்றாம் நம்பர் ஆனால் இவ்வளவும் தயார் ஆக வேண்டும். இராஜ்யமே தயாராக வேண்டும்.

இப்பொழுது ரிசல்ட்டில் தற்சமயம் மறுயாவின் சொரூபமான எதிர்மறை மற்றும் வீணான எண்ணம் பெரும்பான்மையோரில் இருக்கிறது. எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட உள்உணர்வு, பார்வை மற்றும் எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் இருப்பது உலகிற்கு நன்மை செய்பவரின் நிலை ஆகும். உள்உணர்வில் கொஞ்சம் கூட எந்த ஆத்மாவிற்காகவும் எதிர்மறையான மற்றும் வீணான பாவனை இருக்க வேண்டாம். எதிர்மறையான விஷயத்தை மாற்றம் செய்ய வைப்பது அது வேறாகும் ஆனால் யார் அவரே எதிர்மறையான உணர்வு உள்ளவராக இருப்பாரோ அவர் மற்றவர்களின் எதிர்மறையை

நேர்மறையில் மாற்றம் செய்ய முடியாது. எனவே ஒவ்வொருவரும் என்னுடைய பார்வை அனைவருக்காகவும் எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் மற்றும் நன்மை பயப்பதாகவே இருக்கிறதா என்று தன்னைத்தான் சோதனை செய்ய வேண்டும். கொஞ்சம் கூட நன்மை பயக்கும் பாவனையைத் தவிர எல்லைக்குட்பட்ட பாவனை, எல்லைக்குட்பட்ட எண்ணம். பேச்சு சூட்சமத்தில் கூட நிரம்பியிருக்கவில்லையே? எது சூட்சுமத்தில் நிரம்பியிருப்பதாக இருக்குமோ அதனுடைய அடையாளம், நேரம் வரும்பொழுது அல்லது ஏதேனும் வரும்போது பிரச்சனை அந்த சூட்சுமம் ஸ்தூலத்தில் வந்து விடும். எப்பொழுதும் சரியாக இருக்கும் ஆனால் அந்த நேரத்தில் அது வெளிப்பட்டு விடும். பின்பு இவர் அப்படிப்பட்டவரே தான், இந்த விஷயமே அப்படிப்பட்டது தான். இந்த நபரே அப்படிப்பட்டவர் தான் என்று யோசிப்பார்கள். அந்த நபர் அப்படிப்பட்டவர் தான்! ஆனால் என்னுடைய நிலை சுபபாவனை, எல்லைக்கப்பாற்பட்ட பாவனை உடையதாக இருக்கிறதா அல்லது இல்லையா? தன்னுடைய தவறை சோதனை செய்யுங்கள். புரிந்ததா?

விஷயங்களைப் பார்க்காதீர்கள், தன்னைப் பாருங்கள். அப்படி இந்த 99-வது வருடத்தில் எது பிரம்மாபாபாவின் அடியாக இருந்தது. அந்த பிரம்மாபாபாவிற்குச் சமமாக என்னுடைய ஒவ்வொரு அடியும் இருக்க வேண்டும் என்று தன் மனதில் உறுதியான எண்ணத்தை ஓட விடுங்கள். பிரம்மாபாபா மேல் அனைவருக்கும் அன்பு இருக்கிறது இல்லையா? அப்படி அன்பானவரைத் தான் பின்பற்றி நடப்பதாக இருக்கும். தந்தைக்குச் சமமாக உறுதியாக ஆகத்தான் வேண்டும். இது நடக்கும் என்று முன்பாகவே தெரியும் ஆனால் தந்தைக்குச் சமமாக பரிஷ்தாவாக கண்டிப்பாக ஆக வேண்டும். புரிந்ததா? ஆக வேண்டும் தான் இல்லையா? செய்ய முடியுமா? ஒரு வருடத்தில் தயாராகி விடுவீர்களா அல்லது அரை வருடத்தில் தயாராகி விடுவீர்களா? நீங்கள் சம்பன்னம் ஆவதற்காக பிரம்மாபாபாவும் உங்களை வரவழைத்துக் கொண்டிருக்கிறார். மேலும் இயற்கையும் காத்துக் கொண்டிருக்கிறது. 6-மாதங்களில் எவரெடி ஆகுங்கள், சரி 6 மாதங்களின் இல்லை என்றாலும் ஒரு வருடத்திலாவது ஆகுங்கள். குழப்பத்தில் வராதீர்கள், உறுதியாக இருங்கள். தந்தைக்குச் சமமாக கண்டிப்பாக ஆக வேண்டும் என்ற இந்த லட்சியத்தை என்ன ஆனாலும் சரி விடாதீர்கள். ஏதாவது

பிராமணன் உங்களை அசைத்தாலும், பிராமணன் தடையாகி உங்கள் எதிரில் வந்தாலும் நான் சமமாக ஆகத்தான் வேண்டும். இந்த அறிவுரை விருப்பமா? (பாப்தாதா அனைவரையும் கை உயர்த்தச் செய்தார். மேலும் அனைவரையும் புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்கச் செய்தார் இந்த போட்டோவை அனைவருக்கும் அனுப்பி வைப்போம். இங்கே உள்ள வீடியோவில் ஏதாவது கலந்து விட முடியும் ஆனால் வதனத்தின் வீடியோவிலோ எந்தவொரு கலப்படமும் ஆக முடியாது. நல்லது.

தந்தை கூறுகிறார் ஒரு நொடியில் அனைவரும் இப்பொழுதே உடலற்ற நிலையில் ஆக முடியுமா? அப்படியானால் இப்பொழுது அனைவரும் ஒரு நொடியில் உடலற்ற நிலையில் நிலைத்து விடுங்கள் (டிரில்). நல்லது -இப்பொழுது உடலில் வந்து விடுங்கள். இப்பொழுது மீண்டும் உடலற்ற நிலையில் ஆகி விடுங்கள். அந்த மாதிரி முழு நாளில் இடையிடையே ஒரு விநாடி கிடைத்தால் கூட அடிக்கடி இந்தப் பயிற்சியை செய்து கொண்டே இருங்கள். நல்லது.

அனைத்து உயர்ந்த பிராமண ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் பிரம்மாபாபாவின் அடி மேல் அடி எடுத்து வைக்கக்கூடிய தந்தையைப் பின்பற்றி நடக்கும் கட்டளைப்படி நடக்கும் குழந்தைகளுக்கு, எப்பொழுதும் பிரம்மாபாபாவிற்குச் சமமாக பரிஷ்தா நிலையில் நிலைத்திருக்கக்கூடிய நெருக்கமான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் இயற்கையின் தலைவனாகி இயற்கையின் ஒவ்வொரு காட்சியையும் பார்வையாளராகிப் ஆகி பார்க்கக்கூடிய ஆடாத அசையாத ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட உள்உணர்வு மற்றும் பார்வையில் இருக்கக்கூடிய பாக்கியவான் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம். வெளியில் யார் யார் கேட்டுக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் பாரதத்தில் இருந்தாலும் அல்லது வெளிநாட்டில் இருந்தாலும் அந்த அனைத்து குழந்தைகளுக்கும் விசேஷ அன்பு நினைவுகள்.

வரதானம்: உயர்ந்த பாலவையின் விதி மூலமாக வளர்ச்சி அடையக்கூடிய அனைவரின் பாராட்டுக்களுக்கு உரியவர் ஆகுக!

சங்கமயுகம் பாராட்டுக்களின் மூலம் தான் வளர்ச்சி அடைவதற்கான யுகம் ஆகும். தந்தையின், ஈஸ்வரிய குடும்பத்தின் பாராட்டுக்களின் மூலம் தான் நீங்கள் குழந்தைகள் வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள். பாராட்டுக்கள் காரணமாகத் தான் நடனமாடுகிறீர்கள். பாடுகிறீர்கள், வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள் மேலும் பறந்து சென்று கொண்டே இருக்கிறீர்கள். இந்த வளர்ப்பு கூட அதிசயமானது. எனவே நீங்கள் குழந்தைகளும் பெரிய மனதுடன், இரக்க பாவனையோடு, வள்ளலாகி ஒவ்வொரு நேரமும் ஒவ்வொருவருக்கும் மிக நன்றாக இருக்கிறது, மிக நன்றாக இருக்கிறது என்று கூறி பாராட்டுக்களை வழங்கிக் கொண்டே இருங்கள். இது தான் பாலனை செய்வதற்கான உயர்ந்த விதி ஆகும். இந்த விதி மூலம் அனைவரையும் பாலனை செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் பாராட்டுக்களுக்கு உரியவர் ஆகி விடுவீர்கள்.

சுலோகன்: தன்னுடைய சரள சுபாவத்தை வைத்துக் கொள்வது தான் சமாதான சொரூபம் ஆவதற்கான சுலபமான விதி!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 31.12.1998 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தைரியத்தின் ஆதாரத்தினால் தன்னை கஷ்டப்பட்டு உழைப்பிலிருந்து விடுபட்டவராகி சதா வெற்றியை அனுபவம் செய்யுங்கள்!

இன்று புதிய யுகத்தைப் படைப்பவர் பாப்தாதா தன்னுடைய மிக அன்பிற்குரிய, நிரந்தர சகயோகி மற்றும் மிக நெருக்கமான குழந்தைகளுக்கு புது யுகம், புது வாழ்க்கை மற்றும் புது வருடத்தின் வாழ்த்துக்களைக் கூறுவதற்காக வந்திருக்கிறார், நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகள் மிக அன்போடு பாப்தாதாவை எதிரில் இதயத்தில் வைத்து வாழ்த்துக்களை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். பாப்தாதா குழந்தைகளின் புது வருடத்திற்கான ஊக்கம் உற்சாகத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். பெரும்பான்மையான குழந்தைகள் தூரத்தில் அமர்ந்திருந்தாலும், அருகில் அமர்ந்திருந்தாலும் அனைவரின் மனதில் இந்த வருடத்தில் புதுமையை செய்தே காண்பிப்போம் என்ற இந்த ஊக்கம் உற்சாகம் இருக்கிறது. கயமாற்றத்திலானாலும், சேவையின் வெற்றியிலானாலும் அல்லது சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்கள் மூலமாக ஆத்மாவை மாற்றுவதாலும் இவை அனைத்திலும் ஊக்கமும் உற்சாகமும் மிக நன்றாக இருக்கிறது. கூடவே தைரியமும் சக்திக்கேற்றபடி இருக்கிறது. பாப்தாதா அந்த மாதிரி தைரியம் உள்ள குழந்தைகளுக்கு ஒரு எண்ணத்தின் பின்னால் பல மடங்கு உதவியை அவசியம் கொடுக்கிறார். எனவே தைரியத்துடன் எப்பொழுதும் முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். ஒரு பொழுதும் தனக்காக மற்றும் மற்ற ஆத்மாக்களுக்காக தைரியத்தை குறைக்காதீர்கள், ஏனென்றால் இந்த புதுயுகம் இருப்பதே தைரியம் வைப்பதன் மூலம் உயரே பறப்பதற்கான யுகம். வரதானி யுகம், புருஷோத்தம யுகம்.

நேரடியாக வள்ளல் மூலமாக அனைத்து சக்திகளையும் ஆஸ்தியின் ரூபத்தில் சுலபமாக பிராப்தி செய்வதற்கான யுகம் ஆகும். எனவே இந்த யுகத்தின் மகத்துவத்தை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். எந்தவொரு காரியத்தை தொடங்குகிறீர்கள் என்றால், சுயமுயற்சியானாலும் அல்லது உலக சேவை யானாலும் எப்பொழுதும் தைரியம் மற்றும் பாப்தாதாவின் உதவி மூலமாக சுயமுயற்சியில் மற்றும் சேவையில் வெற்றி கிடைத்தே ஆகும் என்ற நிச்சயம் இருக்கட்டும். கண்டிப்பாக நடந்தே ஆகும். அசம்பவமானது சம்பவமாக ஆகவே தான் வேண்டும். ஏனென்றால் இந்த யுகம் வெற்றிக்கான யுகம் ஆகும். அசம்பவம் சம்பவம் ஆவதற்கான யுகம் ஆகும். எனவே ஆகுமா அல்லது ஆகாதா, எப்படி ஆகும் என்ற இந்த கேள்வி இந்த யுகத்தில் பிராமண ஆத்மாக்கள் உங்களைப் பொறுத்தளவில் இல்லவே இல்லை. பிராமணர்களின் ஜாதகத்தில் வெற்றி அவர்களுடைய பிறப்புரிமையாக இருக்கிறது. அதிகாரி ஆத்மாக்களுக்கு இவற்றை யோசிப்பதற்கான அவசியமே இல்லை, ஆஸ்தி கண்டிப்பாக கிடைக்கத் தான் வேண்டும்.

அப்படி புதிய வருடத்தில் அனைத்து பக்கங்களிலிருந்தும் வெற்றி, உயர்ந்த பிராமண ஆத்மா என்னுடைய அதிகாரம் ஆகும் என்ற இந்த விசேஷ நினைவை மனதில் வெளிக் கொண்டு வாருங்கள். இந்த நிச்சயத்தின் ஆதாரத்தினால், ஆன்மீக போதையில் பறந்து கொண்டே இருங்கள், அபிமானத்தின் போதை இல்லை, ஆன்மீக போதை, நிச்சயபுத்தி உடையவர் எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்திலும் வெற்றி அடைபவராக இருக்கவே செய்கிறார். அந்த மாதிரி நிச்சயபுத்தியுடைய பிராமண ஆத்மாவின் நெற்றியில் வெற்றியின் அதிர்ஷ்டத்தின் ரேகை எப்பொழுதும் இருக்கவே இருக்கிறது. வெற்றித் திலகம் எப்பொழுதும் நெற்றியில் ஜொலித்துக் கொண்டிருக்கிறது. எனவே இந்த வருடத்தை எப்பொழுதும் வெற்றியடையும் வருடமாக அனுபவம் செய்து கொண்டே இருங்கள். அந்த மாதிரி நிச்சயம் மற்றும் போதை இருக்கிறதா? இரட்டை வெளிநாட்டினருக்கு இருக்கிறதா? இரட்டை வெளிநாட்டினர் புத்திசாலிகள் (அனைவரும் கை அசைத்தார்கள்). மிக நல்லது. திலகம், பார்வைக்கு தென்படுகிறது. பாரதவாசிகளோ பாக்கியம் நிறைந்தவர்களாக இருக்கவே இருக்கிறார்கள். ஏன்? பாரதத்தின் பூமியே பாக்கியம் நிறைந்ததாகும். எனவே வெளிநாட்டினரானாலும் அல்லது பாரதவாசி யானாலும்

இருவர்களுமே பாக்கியத்தை உருவாக்குபவரின் குழந்தைகள் எனவே ஒவ்வொரு பிராமண குழந்தையும் வெற்றி அடைபவர். தைரியத்தை மட்டும் வெளிப்படுத்துங்கள். தைரியம் நிரம்பியிருக்கிறது. ஏனென்றால் நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவீர்கள். அந்த மாதிரி தான் இல்லையா? (அனைவரும் கை அசைக்கிறார்கள்). கையையோ மிக நன்றாக அசைக்கிறீர்கள். இப்பொழுது மனம் மூலமாகவும் எப்பொழுதும் தைரியத்தின் கையை அசைத்துக் கொண்டே இருங்கள். பாப்தாதாவிற்கு என்னுடைய ஒவ்வொரு குழந்தையும் அனேக தடவைகள் வெற்றி அடைந்தவர்கள் என்ற குஷி மற்றும் பெருமிதம் இருக்கிறது. ஒரு தடவை அல்ல, அனேக தடவைகள் வெற்றி அடைந்த ஆத்மாக்கள் ஆவீர்கள் நீங்கள். எனவே என்னவாகும் என்று தெரியவில்லை என்று ஒருபொழுதும் யோசிக்காதீர்கள். ஆகும் என்ற வார்த்தையைக் கொண்டே வராதீர்கள். வெற்றி இருக்கிறது. மேலும் எப்பொழுதும் இருக்கும். அனைவரும் உறுதியானவர்களாக இருக்கிறீர்களா? மிக நல்லது. இப்பொழுது பின்பு இங்கிருந்து அங்கே சென்று தாதிகளுக்கு, பாபா மாயா வந்து விட்டது அந்த மாதிரி பலஹீனமான செய்தியை எழுதாதீர்கள். மாயாவை வென்றவர்கள் ஆவீர்கள். நான் ஆகாவிட்டால் வேறு யார் ஆவார்! என்ற இந்த ஆன்மீக போதையை வெளிப்படுத்துங்கள். வேறு வேறு காரியங்களில் மனம் மற்றும் புத்தி பிஸியாகி விடுகிறது இல்லையா? அப்பொழுது போதை உள்ளடங்கிப் போய் விடுகிறது ஆனால் காரியம் செய்து கொண்டே இந்த வெற்றி அடைவதின் ஆன்மீக போதை இருக்கிறதா? என்பதை இடையிடையே சோதனை செய்யுங்கள். நிச்சயம் இருக்கிறது என்றால் அவசியம் போதை இருக்கும், நிச்சயத்தின் அடையாளம் போதை, மேலும் போதை இருக்கிறது என்றால் அவசியம் நிச்சயம் இருக்கிறது. இரண்டிற்கும் சம்மந்தம் இருக்கிறது. எனவே இப்பொழுது 99-ல் தன்னுடைய போதையை எப்பொழுதும் வெளிப்பட்டுக் கொண்டிருப்பதாக வையுங்கள். அப்பொழுது நினைவு மறக்காதவராக ஆகி விடுவீர்கள். தவறும் நடக்காது. கடின உழைப்பும் இருக்காது. பாப்தாதா ஏற்கனவே கூறியும் இருக்கிறார் எப்பொழுது பாப்தாதா குழந்தைகளை கடின உழைப்பு செய்து கொண்டிருப்பதாகப் பார்க்கிறார், யுத்தம் செய்து கொண்டிருப்பதை பார்க்கிறார் என்றால் குழந்தைகளின் கடின உழைப்பு தந்தைக்குப் பிடிப்பதேயில்லை. எனவே இந்த புது வருடத்தை எப்படி கொண்டாடுவீர்கள்? முக்தி வருடத்தை

கொண்டாடினீர்கள். எதிர்மறை, வீணானதை முடித்து விட்டீர்கள் என்றால் இந்த வருடம் இயல்பாகவே கடின உழைப்பிலிருந்து விடுபட்ட வருடமாக ஆகி விடும். அனைவரும் மகிழ்ச்சியிலிருப்பவர்களேயன்றி கடின உழைப்பு செய்பவர்கள் அல்ல. மகிழ்ச்சி நன்றாக இருக்கிறதா அல்லது கடின உழைப்பு நன்றாக இருக்கிறதா? கடின உழைப்பு நன்றாக இருக்கிறது தான் இல்லையா. அப்படி இந்த வருடம் மனதில், எண்ணத்தில் கூட கடின உழைப்பிலிருந்து விடுபடுங்கள்.

பாப்தாதாவிடம் குழந்தைகளின் கடிதங்கள் மற்றும் சிறு குறிப்புக்கள் நாங்கள் இப்பொழுதிலிருந்து 108--ன் மாலையில் அவசியம் வருவோம் என்று மிக நல்ல தைரியத்துடன் எழுதிய அடங்கிய கடிதங்கள் வந்திருக்கின்றன. அனேகர்களின் மிக நல்ல ஊக்கம் அடங்கிய கடிதங்களும் வந்திருக்கின்றன. மேலும் ஆன்மீக உரையாடலிலும் அனேகர்கள் பாப்தாதாவிடம் தங்களுடைய நிச்சயம் மற்றும் தைரியத்தில் நல்ல செய்தியைக் கொடுத்தார்கள். பாப்தாதா அந்தக் குழந்தைகளுக்கு உங்கள் அனைவரின் கடந்த காலத்தை, தந்தை முற்றுப்புள்ளி வைத்து விட்டார் என்று கூறுகிறார். எனவே கடந்த காலத்தைப் பற்றி யோசிக்காதீர்கள். இப்பொழுது என்ன தைரியம் வைத்திருக்கிறீர்களோ, அந்த தைரியம் மற்றும் தந்தையின் உதவியோடு முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். புதிய வருடத்தில் புதிய ஊக்கத்தைப் பற்றி வெளிநாட்டுக் குழந்தைகளும் பாரதத்தின் குழந்தைகளும் மிக நன்றாக எழுதியிருக்கிறார்கள். பாப்தாதா அந்த மாதிரி குழந்தைகளுக்கு இதே தைரியத்தில், நிச்சயத்தில், போதையில் அமரர் ஆகுக என்ற இந்த வரதானத்தைத் தான் கொடுக்கிறார். இரட்டை வெளிநாட்டினர் அமரராக இருப்பீர்களா? பாரதவாசிகளும் இருப்பீர்கள் தான் இல்லையா? பாரதமோ முன் நம்பரை எடுக்கத் தான் வேண்டும்.

புதிய வருடத்தை எப்படிக் கொண்டாடுகிறார்கள்? ஒன்றோ பரிசு கொடுப்பார்கள், அடுத்து இன்னொன்று வாழ்த்துக்களை வழங்குவார்கள். இனிப்பை அதிகமாக சாப்பிட்டு பிறருக்கும் வழங்குவார்கள். ஆடலும், பாடலும் கூட மிக அதிகமாக இருக்கும். அப்படி நீங்கள் 12-மணிக்கு பிறகு ஒரு நாள் மட்டும் புதிய வருடத்தை கொண்டாடாதீர்கள் ஆனால் பிராமண குழந்தைகளுக்காக இந்த புதிய

யுகத்தில் ஒவ்வொரு நேரமும் புதியது, ஒவ்வொரு மூச்சும் புதியது, ஒவ்வொரு எண்ணமும் புதியது. எனவே எப்பொழுதும் முழு வருடமும், ஒரு நாள் இல்லை, ஒரு வாரம் இல்லை, ஒரு மாதம் இல்லை, 4-மாதங்கள் இல்லை, 6-மாதங்கள் இல்லை, 12-மாதங்களுமே எப்பொழுதுமே ஒவ்வொருவருக்கும் மனதை மகிழ்விக்கும் இனிப்பை வழங்கிக் கொண்டே இருங்கள். வழங்குவீர்கள் தான் இல்லையா? மனதை மகிழ வைக்கும் இனிப்பை வழங்கத் தெரியுமா? அனைவருமே திறமை நிறைந்தவர்கள் தான். அதனால் மனமகிழ் இனிப்பை வழங்குங்கள். ஒருவேளை மனதை மகிழ்விக்கும் உங்களுடைய இனிப்பை யாராவது தன்னுடைய சுபாவத்தின் காரணமாக, சம்ஸ்காரத்தின் காரணமாக, பிரச்சனையின் காரணமாக ஒருவேளை ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும், நீங்கள் மனமுடைந்து போகாதீர்கள். நீங்கள் கொடுத்தீர்கள். கட்டளைப்படி நடக்கும் உங்களுடைய சார்ட் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விட்டது. நானோ மனதை மகிழ்விக்கும் இனிப்பை உண்ணக் கொடுத்தேன், ஆனால் இவரோ கோபப்படுகிறார் என்ற இதைப் பார்க்காதீர்கள். ஒன்றும் பாதகமில்லை. அவர் இரகசியத்தைத் தெரிந்திருக்கவில்லை தான் இல்லையா? எனவே கோபம் அடைகிறார். நீங்களோ இரகசியத்தைத் தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? எனவே இவர் கணக்கு வழக்கு மற்றும் பிரச்சனையின் வசமாகியிருக்கிறார் என்ற இந்த இரகசியத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் கட்டளைப்படி நடப்பவராக ஆகுங்கள். சரி தான் இல்லையா? கட்டளைப்படி நடப்பவர் ஆக வேண்டும் இல்லையா? இங்கேயோ ஆம் என்று மிக நன்றாகச் செய்கிறீர்கள். ஒருவேளை நீங்கள் இங்கிருந்து பார்த்தீர்கள் என்றால், கையையும் மிக நன்றாக அசைக்கிறார்கள், குஷிப்படுத்தி விடுகிறார்கள். தலையும் அசைக்கிறார்கள், கையையும் அசைக்கிறார்கள் ஆனால் பாப்தாதாவோ இருந்தாலும் ஒவ்வொரு குழந்தையின் மேல் எப்பொழுதுமே குஷியாக இருக்கிறார். என்னுடைய குழந்தை என்று எப்பொழுது கூறிவிட்டாரோ அவர் எப்படி இருந்தாலும், என்னவாக இருந்தாலும் தந்தையோ பார்த்து குஷி அடையவே செய்கிறார். எப்படியாவது தகுதியானவராக ஆக்கி உடன் அழைத்துச் செல்லத் தான் வேண்டும் என்ற உறுதிமொழியையும் தந்தை கொடுத்திருக்கிறார். உடன் செல்ல வேண்டும் தான் இல்லையா? உடன் செல்வதற்குத் தயாராக இருக்கிறீர்களா? அனைவரும் தயாராக

இருக்கிறீர்களா? எவ்ரெடியாக இருக்கிறீர்களா? நல்லது. எவரெடியாகவும் இருக்கிறீர்கள், மிக நல்லது. எவர் ஹேப்பியாகவும் இருக்கிறீர்களா? மேலும் ஒருவேளை மாயா வந்து விட்டது என்றால்? பிறகு கொஞ்சம் கொஞ்சம் மனதில் வருந்துவீர்களா? பாபா மாயா வந்து விட்டது, வந்து விட்டது என்று சுதறாதீர்கள். தன்னை மேலே கொண்டு செல்லுங்கள். மாயா கீழே இருந்து விடும். நீங்கள் மேலே பறந்து சென்று விட்டீர்கள் என்றால் மாயா பார்த்துக் கொண்டே இருந்து விடும். நல்லது. அப்படி குஷியில் ஆடிக் கொண்டும் இருங்கள், மேலும் மனம் மகிழ வைக்கும் இனிப்பை வழங்கிக் கொண்டும் இருங்கள். கூடவே யாரெல்லாம் உறவு நெருக்கத்தில் வருகிறார்களோ அவர்களுக்கு ஏதாவது பரிசு கொடுங்கள். யாரும் வெறும் கையோடு செல்ல வேண்டாம். என்ன பரிசு கொடுப்பீர்கள்? உங்களிடம் பரிசோ மிக அதிகமாக இருக்கிறது. பரிசுக்கான கையிருப்பு இருக்கிறதா? அப்படி கொடுப்பதில் கஞ்சனாக ஆகாதீர்கள், கொடுத்துக் கொண்டே இருங்கள். பரந்த மனமுடையவராக ஆகுங்கள், யாருக்காவது சக்தியின் சகயோகம் கொடுங்கள், சக்தியின் வைப்ரேஷனை கொடுங்கள். யாருக்காவது ஏதாவது குணத்தின் பரிசைக் கொடுங்கள். வாய் மூலமாக இன்றி முகம் மற்றும் நடத்தை மூலம் கொடுங்கள். ஒருவேளை ஏதாவது குணம் மற்றும் சக்தி வெளிப்படவில்லை என்றாலும் குறைந்தது சின்னஞ் சிறிய பரிசையாவது கொடுங்கள். அது எந்த பரிசு? சுபபாவனை மற்றும் சுபவிருப்பத்தின் பரிசாகும். இவர் என்னுடைய காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட சகோதரன் அல்லது சகோதரி என்ற சுபவிருப்பங்களை வையுங்கள். காணாமல் போய் கண்டெடுக்கப்பட்டவர் என்று நினைத்தீர்கள் என்றால் தீய பாவனை மாறி சுபபாவனை ஆகி விடும். இந்த சகோதரன் சகோதரிக்கும் முன்னேறும் கலை ஏற்பட்டு விட வேண்டும். இதற்காக சகயோகம் மற்றும் சுபபாவனை இருக்க வேண்டும். சில குழந்தைகள் நாங்கள் கொடுக்கிறோம், ஆனால் அவர்கள் வாங்குவதில்லை என்று கூறுகிறார்கள். நல்லது. சுபபாவனையை எடுத்துக் கொள்ளவில்லை என்றால் எதையோ கொடுக்கிறீர்கள் தான் இல்லையா? அவர்கள் தீய வார்த்தைகளை உங்களுக்குக் கொடுத்தாலும், தீய வைப்ரேஷன் கொடுத்தாலும், தீய நடத்தை நடந்து கொண்டாலும் நீங்கள் யார்? உங்களுடைய தொழில் என்ன? உலகத்தை மாற்றம் செய்வதா? உங்களுடைய தொழில் என்ன? உலகத்தை மாற்றம் செய்பவர் தான்

இல்லையா? அப்படி உலகத்தை மாற்றம் செய்ய முடியும். மேலும் ஒருவேளை அவர் உங்களிடம் தவறாகப் பேசுகிறார், தவறாக நடந்து கொள்கிறார் என்றாலும் அவரை நீங்கள் மாற்றம் செய்ய முடியாதா? நேர்மறையான ரூபத்தில் பரிவர்த்தனை செய்ய முடியாதா? எதிர்மறையை எதிர்மறையாகவே தாரணை செய்வீர்களா அல்லது எதிர்மறையை நேர்மறையில் மாற்றம் செய்து நீங்கள் ஒவ்வொருவருக்கும் சுபபாவனை மற்றும் சுபவிருப்பத்தின் பரிசைக் கொடுப்பீர்களா? சுபபாவனையின் கையிருப்பை எப்பொழுதும் சேமித்து வையுங்கள். நீங்கள் கொடுத்து விடுங்கள். மாற்றம் செய்து விடுங்கள், பிறகு உலகத்தை மாற்றம் செய்பவர் என்ற பட்டம் உங்களுக்கு இருக்கிறது அது நடைமுறையில் உடயோகம் ஆகிக் கொண்டே இருக்கும். மேலும் யார் எப்பொழுதும் ஒவ்வொருவரையும் மாற்றம் செய்து தன்னுடைய உலக மாற்றம் செய்யும் காரியத்தை நடைமுறையில் கொண்டு வருகிறாரோ அவர் தான் நடைமுறை ரூபத்தில் 21- பிறவிகள் உத்திரவாதத்துடன் இராஜ்ய அதிகாரி ஆகிறார். சிம்மாசனத்தில் ஒரு தடவை அமர்ந்தாலும் கூட ஒவ்வொரு ஜென்மத்தில் இராஜ குடும்பத்தில், இராஜ்ய அதிகாரி ஆத்மாக்களின் நெருங்கிய சம்மந்தத்தில் இருப்பார். அப்படி உலகத்தை மாற்றம் செய்யவர் தான் உலக இராஜ்ய அதிகாரி ஆகிறார். எனவே என்னுடைய காரியமே மாற்றம் செய்வது தான் என்ற இந்த தன்னுடைய தொழிலை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். வள்ளலின் குழந்தை நீங்கள் என்றால் வள்ளலாகி கொடுத்துக் கொண்டே இருங்கள், அப்பொழுது தான் எதிர்காலத்தில் கை மூலமாக யாருக்கும் கொடுக்க மாட்டீர்கள் ஆனால் உங்களுடைய இராஜ்யத்தில் எப்பொழுதும் ஒவ்வொரு ஆத்மாவும் நிரம்பியிருக்கும் அது இந்த நேரத்தில் வள்ளல் ஆவதற்கான பிராப்தி ஆகும். எனவே இவர் இதைச் செய்தார், இவர் இத்தனை தடவை செய்தார் என்று கணக்கு பார்க்காமல் மாஸ்டர் வள்ளலாகி பரிசைக் கொடுத்துக் கொண்டே இருங்கள். மேலும் வாழ்த்துக்களாக என்ன கொடுப்பீர்கள்? பாருங்கள் யாருக்காவது ஏதாவது பிராப்தி ஆகிறது என்றால், அவருடைய வாயிலிருந்து மனதிலிருந்து உங்களுக்கு வாழ்த்துக்கள் என்ற வார்த்தை தான் வெளியாகிறது. ஒவ்வொருவருக்கும் குஷி கொடுக்கிறீர்கள் என்றால் வாழ்த்துக்கள் என்று கூறுவார்கள். ஏதாவது பண்டிகையை கொண்டாடுகிறீர்கள் என்றால், வாழ்த்துக்கள் என்று கூறுவார்கள். அதே போல் யார் உங்கள்

எதிரில் வந்தாலும் வாய் மூலம் அந்த மாதிரி வார்த்தைகளைக் கூறுங்கள், எண்ணத்தில் அந்த மாதிரி உயர்ந்த எண்ணம் இருக்கட்டும். அப்பொழுது யார் உங்களை சந்தித்தாலும் அவர் ஒவ்வொரு நேரமும் உள்ளப்பூர்வமாக வாழ்த்துக்கள் மற்றும் ஆசீர்வாதங்களை அவசியம் கொடுப்பார். அப்படி எப்பொழுதுமே அந்த மாதிரி வார்த்தைகளைப் பேசுங்கள், அந்த மாதிரி உறவு நெருக்கத்தில் வாருங்கள். அதன் மூலம் உள்ளத்திலிருந்து வாயிலிருந்து வாழ்த்துக்கள் மற்றும் ஆசீர்வாதங்கள் வெளியாகட்டும். வாழ்த்துக்குத் தகுதியில்லாத அந்த மாதிரி வார்த்தைகளைப் பேசாதீர்கள். ஒவ்வொரு வார்த்தையும் இரத்தினம் மாதிரி இருக்கட்டும். சாதாரண வார்த்தையாக இருக்க வேண்டாம். இன்று வரையிலும் உள்ள ரிசல்ட்டில் பாப்தாதா பார்த்தார். நாளையோ மாறி விடுவார் ஆனால் இதுவரையிலும் வார்த்தையில் என்ன பண்பு மற்றும் அன்பு இருக்க வேண்டுமோ அந்த அன்பு குறைந்து விடுகிறது மற்றும் பண்பும் குறைந்து விடுகிறது என்று பார்த்தார். எனவே இரத்தினத்திற்குச் சமமான வார்த்தைகளைக் கூறுங்கள். எப்பொழுது சுயம் நீங்கள் வைரத்திற்குச் சமமாக இருப்பீர்களோ அப்பொழுது தான் ஒவ்வொரு வார்த்தையும் இரத்தினத்திற்குச் சமமாக இருக்கும். அந்த மாதிரி மதிப்புள்ளவர் நீங்கள். சாதாரணமானவர்கள் அல்ல. எனவே சாதாரணமானதும், வீணானதும் இருக்க வேண்டாம். மேலும் சில வேலைகளில் பாப்தாதா பார்க்கிறார், முடிவைக் கூறலாமா, ஏனென்றால் 12-மணிக்குப் பிறகு தான் அனைத்தையும் முடிக்க வேண்டும் இல்லையா? அப்படி சில குழந்தைகள் சிறிய விஷயத்தை மிகுந்த விஸ்தாரம் ஆக்குகிறார்கள் என்ற இதையும் பார்த்தோம். இதில் என்னவாகிறது? யார் அதிகமாகப் பேசுகிறாரோ எப்படி மரம் விரிவாக வளர்ந்த பிறகு அதில் விதை மறைந்து விடுகிறது. நான் புரிய வைப்பதற்காக விஸ்தாரம் செய்கிறேன் என்று அவர் அப்படி நினைக்கிறார் ஆனால் விஸ்தாரத்தில் எந்த விஷயத்தை நீங்கள் புரிய வைக்க விரும்புகிறீர்களோ அதனுடைய சாரம் மறைந்து விடுகிறது. மேலும் பேச்சு, வார்த்தைகளுக்கும் சக்தி தேவையாக இருக்கிறது. யார் வீணாகப் பேசுகிறாரோ அவருடைய வார்த்தைகளின் சக்தி குறைந்து விடுகிறது. அதிகமாகப் பேசுபவர்களின் மூளையின் சக்தியும் குறைந்து விடுகிறது. சுருக்கமாக மற்றும் இனிமையாக என்ற இந்த இரண்டு வார்த்தைகளை நினைவு வையுங்கள். மேலும் யாராவது கூறுகிறார்கள் என்றால் கூட எனக்கு இந்த அளவு கேட்பதற்கும் நேரம் இல்லை என்று

கூறிவிடுங்கள் ஆனால் எப்பொழுது நீங்களே கூறுகிறீர்கள் என்றால், நேரம் மறந்து போய் விடுகிறது. எனவே தன்னுடைய பொக்கிஷங்களின் கையிருப்பை சேமிப்பு செய்யுங்கள். எண்ணம், வர்த்தைகள், சக்திகள், நேரம் மற்றும் குணங்களின் பொக்கிஷத்தை சேமிப்பு செய்யுங்கள். தினசரி இரவில் தன்னுடைய இந்த பொக்கிஷங்களின் சேமிப்பிற்கான கணக்கை சோதனை செய்யுங்கள். எத்தனை எண்ணத்தை வீணானதிற்குப் பதிலாக மிக நல்லதின் கணக்கில் சேமிப்பு செய்தேன். எவ்வளவு நேரம் நல்லதின் கணக்கில் சேமிப்பு செய்தேன். குணங்கள் மற்றும் சக்திகளினால் உயர்ந்த காரியம் செய்தேனா? குணத்தை நடைமுறையில் கொண்டு வந்தேனா? சக்தியை செயலில் கொண்டு வந்தேனா? இது தான் சேமிப்பு ஆவதாகும். எனவே அப்படி எண்ணம். நேரம், குணம், சக்தி இவற்றின் கணக்கை தினசரி இரவில் சோதனை செய்யுங்கள். பிறகு அதை எவ்வளவு சேமிப்பு கணக்கு ஆனது என்று கூட்டிப் பாருங்கள். இந்த சேமிப்பு தான் தனக்கும் உதவி செய்து கொண்டே இருக்கும். மேலும் மற்றவர்களுக்கும் கொடுக்கும். அப்படி என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறீர்கள் இல்லையா? எனவே இப்பொழுது இதைச் செய்யுங்கள். வாழ்த்துக்களையும் பெற வேண்டும், பரிசையும் கொடுக்க வேண்டும், சேமிப்பும் செய்ய வேண்டும் மேலும் கடின உழைப்பை விட வேண்டும். எப்பொழுது கேமிப்பின் மேல் கவனம் கொடுப்பீர்கள் என்றால், கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியதாக இருக்காது. கஷ்டப்பட்டு உழைப்பதிலிருந்து விடுபடும் ஆண்டை மிக கோலாகலமாகக் கொண்டாடுங்கள். வீணானது மற்றும் எதிர்மறையின் முக்தி வருடத்தைக் கொண்டாடுங்கள். முக்தி வருடத்தின் ரிசல்ட்டை பாப்தாதா இப்பொழுது கேட்கவில்லை. பாப்தாதாவிற்கு நினைவு இருக்கிறது. எத்தனை பேர் முக்தி வருடத்தை கொண்டாடினார்கள் அல்லது மாதத்தைக் கொண்டாடினார்களா என்று ரிசல்ட்டைக் கேட்போம். 8-மாதம் கொண்டாடினோமா, பாதி கொண்டாடினோமா அல்லது முழுமையாகக் கொண்டாடினோமா என்று 18-ம் தேதி கணக்கு எடுப்போம். இரட்டை வெளிநாட்டினர் நன்றாக கொண்டாடினீர்கள் தான் இல்லையா?. பாரதத்தைச் சேர்ந்தவர்களும் கொண்டாடியிருக்கிறார்கள். ரிசல்ட்டை 18-ம் தேதி பார்ப்போம். யார் முழு வருடத்தையும் கொண்டாடினரோ அவருக்கு என்ன கொடுப்போம். தாதிகளே யார் முழு வருடத்தையும் கொண்டாடியிருக்கிறார்களோ

அவர்களுக்கு என்ன கொடுப்பீர்கள் என்று கூறுங்கள். வாழ்த்துக்கள் மற்றும் ஆசிர்வாதங்களோ இருக்கவே இருக்கின்றன. மேலும் நினைவுப் பரிசாக என்ன கொடுப்பீர்கள்? பரிசு தயாராக வைத்துக் கொள்ளுங்கள். எத்தனை பேர் பரிசைப் பெறுவார்கள் என்று பார்க்கலாம். அப்படி புது வருடம், புதிய ஊக்கம், புதிய உற்சாகம், மேலும் புதிய தைரியம் அனைத்துமே புதியதிலும் புதியது. யார் இந்த நேரம் மேடையில் இருக்கிறார்களோ அவர்கள் அடுத்த நேரம் அதை விட உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும், சரியா. நல்லது.

**குழுக்களுடன் தனிப்பட்ட சந்திப்பு:** இரட்டை வெளி நாட்டினர், ஆஸ்திரேலியா, ஃபிஜீ, நியூஸிலாந்து, ஐரோப்பி, யூ.கே. துபாய், மொரீஷியஸ், அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்கா, தென் ஆப்பிரிக்கா, ரஷ்யா, இஸ்ரேல், டிரினிடாட், பின்பு நீதித்துறையினர், டீச்சர் சகோதரிகள், மதுபன் வாசிகள், அபுவாசிகள் இவர்களை ஒவ்வொரு குழுவாக எழுந்திருக்கச் செய்து பாப்தாதா சந்தித்தார்.
பின்பு, ராஜஸ்தான், மகாராஷ்டிரா ஜோன், பாம்பே, ஆந்திர பிரதேசம், டில்லி, ஆக்ரா, உ.பி., ஈஸ்டர்ன், பஞ்சாப், இந்தோர்-போபால், குஜராத், கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா இவர்களை ஒவ்வொரு குழுவாக எழுந்திருக்கச் செய்து பாரதவாசிகளையும் பாப்தாதா சந்தித்தார்..

**இரவு 12-மணிக்குப் பிறகு எல்லாக் குழந்தைகளுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை அளித்தார்!** நாலா புறமும் உள்ள அதி சிநேகி அருகிலிருக்கும் பிராமண ஆத்மாக்களுக்கு புது யுகத்தைப் படைப்பவருடைய வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! இந்த நேரம் பிரியாவிடை மற்றும் வாழ்த்துக்களின் சங்கமம் ஆகும். பழைய ஆண்டுடன் விடைபெறுங்கள், கூடவே பழைய விஷயங்கள், பழைய பிரச்சனைகள், பழைய சமஸ்காரங்கள் அனைத்திற்கும் விடைபெற்று மற்றும் புதிய ஊக்கம் உற்சாகம் நிறைந்த வருடத்திற்காக வாழ்த்துக்களும், பாராட்டுக்களும். இந்த ஆண்டை கடின உழைப்பில்லாத ஆண்டாக கொண்டாட வேண்டும். தனக்கும் மற்றும் அனைவருக்கும் சதா நிர்விக்ன பவ என்ற வரதானத்தினால் கொண்டாடுங்கள். இந்த ஆண்டை சதா வெற்றி நமது பிறப்புரிமை என்ற இந்த நிச்சயத்துடனும் போதையுடனும் சதா ஒவ்வொரு செயலையும் செய்யும்போதும் வெளிப்படும் (emerge) ஆண்டாகக் கொண்டாடுங்கள்.

## 1998 அவ்யக்த முரளி

இந்த ஆண்டில், நீங்கள் ஒவ்வொருவரும் பாப்தாதா மற்றும் தாதிகளிடமிருந்து முதலிடம் பெறுவதற்கான வெகுமதி அல்லது பரிசைப் பெற வேண்டும். இதற்காக எல்லா வெளிநாடு மற்றும் பாரதவாசிகளும் நம்பர்-1 நிச்சயம் வைத்து முன்னேற வேண்டும் மற்றும் முன்னேற்ற வேண்டும். எனவே, நிறைய அன்பான நினைவுகளுடன் எல்லா விதமான எண்ணத்தினால், வார்த்தையினால், எல்லா ரூபத்திலும் பாப்தாதா கோடானுகோடி மடங்கு வாழ்த்துக்களை அளிக்கின்றார். இப்போது ஒரு நொடி அனைவரும் சக்திசாலியான சங்கல்பம் மூலம், மன உறுதியுடன் பழைய பொருட்கள், பழைய வருடத்தை, பழைய விஷயங்களை சதா காலத்திற்காக விடையளித்து விடுங்கள். ஒரு நொடி எல்லோரும் -மனஉறுதிதான் வெற்றி- என்ற இந்த திட சங்கல்பத்தில் நிலைத்து விடுங்கள். நல்லது.

வரதானம்: பணிவின் குணத்தை தாரணை செய்து அனைவருக்கும் சுகம் கொடுக்கக்கூடிய சுகதேவன், சுகசொரூபமானவர் ஆகுக!

மகான் ஆத்மாக்கள் உங்களுடைய அடையாளம் பணிவாகும். எவ்வளவு பணிவாக இருப்பீர்களோ அந்த அளவு அனைவர் மூலமாகவும் மரியாதை கிடைக்கும். யார் பணிவாக இருட்டாரோ அவர் அனைவருக்கும் சுகம் கொடுப்பார். எங்கே சென்றாலும் என்ன செய்தாலும் அது சுகம் நிறைந்ததாக இருக்கும். அப்படி யாரெல்லாம் உறவு நெருக்கத்தில் வந்தாலும் அவர் சுகத்தின் அனுபவம் செய்யட்டும். எனவே பிராமண ஆத்மாக்கள் உங்களுடைய வர்ணனையாக சுகக்கடலின் குழந்தைகள் சுகசொரூபம் சுகதேவர்களாக இருக்கிறார்கள் என்பதாகும். எனவே அனைவருக்கும் சுகத்தை கொடுத்துக் கொண்டே மற்றும் சுகத்தை பெற்றுக் கொண்டே இருங்கள். யாராவது துக்கம் கொடுத்தார்கள் என்றால் அதை வாங்காதீர்கள்.

சுலோகன்: யார் ஆத்ம அபிமானியாக இருக்கிறாரோ அவர் தான் அனைவரையும் விட பெரிய ஞானி ஆவார்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂
☂☂☂☂☂☂☂